REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2022 டிசம்பர் 23 வெள்ளிக்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 90 இல. 303 | Friday 23, December, 2022 | 44 பக்கங்கள் | 50/-

ஞாயிறு கிறிஸ்மஸ் தினம்

திங்கட்கிழமையன்று விசேட அரச விடுமுறை

எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை விசேட அரச விடுமுறை தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

உள்நாட்டலுவல்கள் அமைச்சில் நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் மாநாட்டில், பொதுநிர்வாகம் மற்றும் 06

வெளிநாட்டு வருமானத்தை ஈட்ட சுற்றுலாத்துறையே பிரதான பங்கு

சுற்றுலாத்துறை பங்குதாரர்களிடம் அலி சப்ரி தெரிவிப்பு

வெளிநாட்டு நாணயத்தை நாட்டுக்குள் கொண்டு வருவதில் சுற்றுலாத்துறை முக்கிய ஊக்கிகளில் ஒன்றாகும். எனவே கூட்டு முயற்சி மிகவும் அவசியமானது என அமைச்சர் சப்ரி தெரிவித்துள்ளார். 06

சுற்றுலா பயணிகளை கவர நுவரெலியாவில் கேபிள் கார்

நடவடிக்கைக்கு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்பு

நுவரெலியா மாவட்டத்திலுள்ள (World's End) உலக முடிவைப் பார்வையிட கேபிள் கார் திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று பணிப்புரை விடுத்தார்.

பட்டிபொல தொடக்கம் பொரலந்த வரை இந்த கேபிள் கார் திட்டத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறும் அவர் தெரிவித்தார்.

நுவரெலிய மாவட்டச் செயலகத்தில்

நேற்று (22) நடைபெற்ற நுவரெலிய மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் உரையாற்றும் 06

இனப்பிரச்சினைக்கான தீர்வு பேச்சுவார்த்தை

ஜனாதிபதியுடனான கலந்துரையாடல் ஆரோக்கியமானதாக அமைந்தது

2ம் சுற்று பேச்சு குறித்து சுமந்திரன் MP தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

வடக்கில் காணிகள் விடுவிப்பு மற்றும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் விரைவான நடவடிக்கையை மேற்கொள்ள ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் ஜனாதிபதியுடனான கலந்துரையாடல் ஆரோக்கியமாக அமைந்ததாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் எம்.பி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கும் தமிழ்த் தேசியக் 06

நுவரெலியா மக்களது காணிப் பிரச்சினைக்கு பெப். 04 க்கு முன் தீர்வு

மக்கள் சேவையில் எந்தவித இழுத்தடிப்பும் செய்யாதீர்கள்

அரச அதிகாரிகளாக நாட்டுக்கு பொறுப்புடன் செயற்படுங்கள்

மக்கள் சேவையில் எந்தவித இழுத்தடிப்பும் செய்யாதீர்கள் அரச அதிகாரிகள் பொதுமக்களுக்கு சேவையாற்றும்போது இழுத்தடிப்பின்றி தமது பொறுப்புக்களை உரிய முறையில் நிறைவேற்ற வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

தனக்கு முன்வைக்கப்பட்டுள்ள பொதுமக்கள் பிரச்சினையில் 50 சதவீதமானவை அரச அதிகாரிகளால் தீர்த்து வைக்கக் கூடியவையென சுட்டிக்காட்டிய

நுவரெலியா மாவட்ட அபிவிருத்தி குழுக்கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று வலியுறுத்து

ஜனாதிபதி, அப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கு ஜனாதிபதி மட்டுமன்றி அமைச்சர் கூட கொழும்பிலிருந்து வரவேண்டிய அவசியமில்லையென்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் அரச நிறுவனங்களை ஒருங்கிணைப்பதன் மூலம் பொதுமக்களுக்கு அதிக பட்ச சேவையை வழங்க அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார். 06

இலங்கை பொலிஸாருக்கு இந்தியா வழங்கும் 500 ஜீப் வண்டிகள்

முதல் கட்டமாக 125 ஜீப்கள் நேற்று கையளிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

இந்திய அரசாங்கத்தினால் இலங்கை பொலிஸாருக்கு 500 ஜீப் வண்டிகளை வழங்க இந்தியா உறுதியளித்துள்ளது. இவற்றில் முதற்கட்டமாக 125 ஜீப் வண்டிகள் நேற்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் கையளிக்கப்பட்டன. இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸிடம் 125 ஜீப் வண்டிகளையும் உத்தியோகபூர்வமாக நேற்று கையளித்தார்.

அதற்கான வைபவம் பத்தரமுல்லையிலுள்ள பொது 06

தமிழகத்தில் கைதான 09 பேரை நாட்டுக்கு அழைத்து வர ஏற்பாடு

CID திணைக்களம் விசேட வேலைத்திட்டம்

CRIMINAL INVESTIGATION DEPARTMENT

இலங்கை மற்றும் இந்தியாவில் சட்டவிரோத போதைப்பொருள் மற்றும் ஆயுத வர்த்தகம் தொடர்பில், தமிழகம், திருச்சியில் உள்ள சிறப்பு முகாமில் கைது செய்யப்பட்ட 9 இலங்கையர்களையும் நாட்டிற்கு அழைத்து வருவது தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களம் விசேட வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

இதன்படி, தமிழ்நாட்டிற்கு சென்று அவர்கள் குறித்த எதிர்கால சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு விசேட குழுவொன்றை பெயரிடவுள்ளதாகவும் அதன் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். 06

தரமான உள்ளூர் டின்மீன்களை சந்தைக்கு வழங்க நடவடிக்கை

டின்மீன் கைத்தொழிலாளர் பிரச்சினைகளை விரைவில் தீர்ப்பதாகவும் அமைச்சர்கள் உறுதி

நுகர்வோருக்கு தரமான உள்ளூர் டின் மீன்களை வழங்கவும் உள்ளூர் டின் மீன் கைத் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வுகளை 06

இலங்கைக்கு இந்திய தமிழர் வருகை தந்து 200 வருடங்கள்

"மலையகம் – 200" எனும் மகுடத்தில் பெரும் நிகழ்வு பெப். 26ல்

"மலையகம் – 200" என்ற தலைப்பில், இலங்கைக்கு வந்த முதலாம் தலைமுறை இந்திய வம்சாவளி தமிழர்களின் வருகையை நினைவுறுத்தும் நிகழ்வை பெப். 26ம் நாள் ஞாயிறன்று தமிழ் முற்போக்கு கூட்டணி நடத்தும் எனவும் இதில் கலந்துக்கொள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் பல்வேறு கட்சி தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது எனவும் தமிழ் 06

நாட்டில் போலி நாணயத்தாள் புழக்கம் திடீரென அதிகரிப்பு

எச்சரிக்கையாக இருக்க பொலிஸார் பணிப்பு

இலங்கையில் தற்போது போலி நாணயத்தாள்களின் புழக்கம் அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ள சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ, இதன் காரணமாக போலி நாணயத்தாள்களின் புழக்கத்தை தடுப்பது மற்றும் பொதுமக்களின் கைகளில் புழங்குவதை தடுப்பது தொடர்பில் பொலிஸார் 06

அதிக விலைக்கு முட்டைகளை வாங்க வேண்டாமென கோரிக்கை

நிர்ணய விலை ரூ.55 மட்டுமே என தெரிவிப்பு

முட்டையை 55 ரூபாவுக்கும் அதிகமான விலைக்கு கொள்வனவு செய்ய வேண்டாம் என அகில இலங்கை கோழி இறைச்சி வர்த்தகர்கள் சங்கம் பொதுமக்களை கோரியுள்ளது.

அகில இலங்கை கோழி இறைச்சி வர்த்தகர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

அதிக விலைகொடுத்து முட்டையை சில்லறை வர்த்தகர்களிடம் கொள்வனவு செய்ய வேண்டாம். 06

சீனாவில் பரவும் கொவிட் திரிபு உலகுக்கு அச்சுறுத்தல்

உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

சீனாவில் பரவி வரும் ஒமிக்ரோன் பீ.எஃப்.7 என்ற கொவிட் 19 வைரஸின் புதிய உப திரிபு உலகத்திற்கு அச்சுறுத்தல் என உலக சுகாதார அமைப்பு அச்சம் வெளியிட்டுள்ளது.

சீனாவில் கொவிட் 19 பரவல் மோசமாக இருப்பதாகவும் தினமும் சுமார் 50 06

போதைப்பொருள் பாவனை விற்பனை குற்றச்சாட்டு

இந்த வருடம் மட்டும் 6,000 பேர் கைது

ஐஸ் போதைப்பொருள் விற்பனை மற்றும் பாவனை தொடர்பில், 2022 ஆம் ஆண்டின் முதல் 10 மாதங்களில் 6,000 க்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதே காலகட்டத்தில் 377 கிலோவுக்கும் அதிகமான ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக தேசிய ஆபத்தான மருந்து கட்டுப்பாட்டு சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். 06

மன்னாரில் கைவிடப்பட்டுள்ள 'அம்மாச்சி' பாரம்பரிய உணவகம்

மீண்டும் திறக்க விவசாய பணிப்பாளர் ஏற்பாடு

(தலைமன்னார் நிருபர்)

மன்னார் மதவாச்சி பிரதான வீதியில் நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள அம்மாச்சி என்ற பாரம்பரிய உணவகத்தை மீள இயங்கச் செய்வதற்கான நடவடிக்கையை விவசாய 06

நத்தார் தினத்தை முன்னிட்டு தேவாலயங்களுக்கு பாதுகாப்பு

நாடு பூராகவும் பொலிஸார் நடவடிக்கை

03

பண்டிகை காலத்தை முன்னிட்டு விசேட ரயில் சேவைகள்

அட்டவணைக்கு மேலதிகமாக இயங்கும்

03

யாழ். சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த

104 மியன்மார் அகதிகள் மிரிஹானைக்கு மாற்றம்

யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ரோஹிங்கிய அகதிகள் 06

இந்தியாவில் மீண்டும் கொவிட் அச்சுறுத்தல்!

பிரதமர் மோடி அவசர ஆலோசனை

இந்தியாவில் கொரோனா அச்சுறுத்தல் மீண்டும் எழுந்துள்ளதால் பிரதமர் மோடி நேற்று அவசர ஆலோசனை மேற்கொண்டதாக தகவல்கள் 06

சாரதிகளை கண்காணிக்க அதிநவீன உபகரணம்

அடுத்த சில நாட்களில் அறிமுகம்

போதைப்பொருள் பாவித்து நெடுஞ்சாலையில் வாகனம் ஓட்டுபவர்களை அடையாளம் காண தேவையான அனைத்து நவீன தொழிநுட்ப உபகரணங்களும் கொண்டுவரப்பட்டுள்ளன. 06

யாழ்.நோக்கி பயணித்த அரச பேருந்து விபத்து!

ஒருவர் பலி; 15 பேருக்கு காயம்

திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த அரச பேருந்து வேக கட்டுப்பாட்டை இழந்து வீதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் பளை முள்ளையடி பகுதியில் இவ் 06

நகர்வலம்

மொகிதீன் பேக் இலங்கைக்கு வருகை தந்து 100 ஆண்டுகள்

விழா நடத்த பிரதமர் தினேஷ் குணவர்தன தீர்மானம்

மர்ஹூம் 'மொகிதீன் பேக்' இலங்கைக்கு வருகை தந்து 100 வருடங்கள் நிறைவு பெறுவதை முன்னிட்டு பிரமாண்டமான முறையில் விழா ஒன்றை எடுப்பதற்கு பிரதமர் தினேஷ் குணவர்தன தீர்மானித்துள்ளார்.

மர்ஹூம் மொகிதீன் பேக்கினது மகள் மொய்னா பேக்குக்கு அகில இலங்கை சமாதான நீதவான் பதவி வழங்கும் நிகழ்வு அலரி மாளிகையில் (21) நடைபெற்றது.

பிரதமர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மொகிதீன் பேக் நாட்டுக்கு வருகை தந்து ஆயிரக்கணக்கான பௌத்த மற்றும், இஸ்லாம் பாடல்களைப்பாடி அளித்த அன்பளிப்புக்கு கௌரவம் செய்வதற்காக ஒரு பிரமாண்டமான விழாவை நடாத்துவதற்கு தீர்மானித்திருப்பதாக தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்சிலின் தலைவர் என்.எம்.அமீன், தொழிலதிபர் எம்.ஏ.சி. மஹ்தூம், மொய்னா பேக் உட்பட மொகிதீன் பேக்கினது குடும்பத்தினர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

பிரதமர், மொகிதீன் பேக்குக்கும் தனக்கும் அவருடைய குடும்பத்துக்கும் இடையில் இருக்கின்ற தொடர்புகளைப் பற்றி இங்கு விரிவாக கருத்துகளைத் தெரிவித்தார்.

மொகிதீன் பேக் ஆற்றிய சேவை அளப்பரியது. அது நினைவு கூரப்பட வேண்டும். எனவே, பிரதமர் அலுவலகம் பிரமாண்டமான ஒரு விழாவை நடாத்துவதற்குத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

மொகிதீன் பேக் பாடிய சில பாடல்களையும் மொய்னா பேக் அங்கு பாடிக் காண்பித்தார். அரச அனுசரணையோடு இந்த விழாவை ஜனவரி மாத நடுப்பகுதியில் நடாத்துவது பற்றியும் ஆராயப்பட்டது. தொழிலதிபர் எம்.ஏ.சி. மஹ்தூமினால் பிரதமருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் வெளியிட்ட மீடியா டைரியும், பேராசிரியரும் இந்திய சட்ட சபை உறுப்பினருமான எம்.எம். ஜவாஹிருல்லா எழுதி அண்மையில் இலங்கையில் வெளியிட்ட நூலும் பிரதமரிடம் கையளிக்கப்பட்டது. பிரதமரின் மகனும் பாராளுமன்ற உறுப்பினருமான யதாமினி குணவர்தனவும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டார்.

தென்னிந்திய முதலீட்டாளர்களுக்கு இலங்கையில் முதலீடு செய்ய அழைப்பு

இலங்கையில் வர்த்தகம் மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்தும் வகையில், சென்னையில் உள்ள இலங்கையின் துணை உயர் ஸ்தானிகராலயம் தென்னிந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை சம்மேளனத்துடன் (SICCI) இணைந்து "இலங்கையுடன் வணிகம் செய்தல்" வணிக கலந்துரையாடலை (20) ஏற்பாடு செய்தது. சென்னையில் உள்ள சம்மேளன மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதி உயர்ஸ்தானிகர் கலாநிதி வெங்கடேஷ்வரன் முதலீட்டாளர்களுக்கு அழைப்பும் விடுத்தார்.

கூட்டத்தில் உரையாற்றிய மன்றத்தின் தலைவர் ஆர்.எம். அருண் மற்றும் செயலாளர் திரு. வினோத் சொலமன் ஆகியோர் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நீண்டகால இருதரப்பு உறவை எடுத்துரைத்தனர்.

பிரதி உயர்ஸ்தானிகர் கலாநிதி வெங்கடேஷ்வரன், இலங்கையில் வர்த்தகம் செய்வதன் முக்கியத்துவம், நாட்டில் கிடைக்கக்கூடிய சாத்தியமான முதலீட்டு வழிகள் மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் மற்றும் முதலீட்டாளர்களுக்கு இலங்கை அரசாங்கம் வழங்கும் வசதிகள் மற்றும் ஊக்குவிப்புகளை உறுதிப்படுத்தினார். மேலும் அவர் அடுத்த ஆண்டு இலங்கைக்கு முதலீட்டாளர் குழுவை ஏற்பாடு செய்ய SICCIக்கு அழைப்பு விடுத்தார்.

இந்த நிகழ்வில் தென்னிந்திய வர்த்தகர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, புடவை, மருந்து, ஆட்டோமொபைல், எலக்ட்ரானிக் மற்றும் IT/BPO போன்ற பன்முக வணிகம் மற்றும் முதலீட்டுத் துறைகளைச் சேர்ந்தவர்கள் பங்கேற்றனர்.

தென்னிந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை சம்மேளனம் (SICCI), நாட்டின் தென் பகுதிக்கு சேவை செய்வதில் நூறு ஆண்டு கால சிறப்பு மற்றும் நிறுவனத்தை நிறைவு செய்துள்ளது, இது இந்தியாவின் பழமையான, பெரிய மற்றும் மதிப்புமிக்க நிறுவனங்களில் ஒன்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

தெமட்டகொடை விஷுத்தாராம பெரஹரா 25 ஆம் திகதி

கொழும்பு, தெமட்டகொடை மஹா விஷுத்தாராம விஹாரையில் 70ஆவது முறையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பெரஹரா ஊர்வலம் 25ஆம் திகதி மாலை 05 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது. 1920 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மஹா விஷுத்தாராம பெரஹரா மக்களுக்காக செய்கின்ற சேவைக்கு நன்றிக்கடனாக தெய்வத்துக்கு வழிபாடு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஸ்ரீ சரணபால வன்சாலங்கார கல்கிஸ்ஸ விஷுத்தானந்த தேரரினால் ஆரம்பிக்கப்படும் பெரஹரா திருவிழா முதலில் வாகன ஊர்வலமாக தொடங்கி ஸ்ரீ சரணபால வன்சாலங்கார கப்புதுவே நன்தசார தேரரினால் பிற்பகல் பெரஹரா திருவிழா ஒன்று ஏற்பாடு செய்யப்படுவதோடு 2013 தொடக்கம் தற்போது வரையான தேரரினால் மஹா பெரஹரா ஒன்றாக கோலாகலமான முறையில் இரவு முழுவதும் வீதி ஊர்வலம் இடம்பெறும்.

10 யானைகள் மற்றும் 120 நடனக் குழுக்கள் வரை இம்முறை பெரஹராவில் பங்கேற்கவுள்ளன.

உ/த பரீட்சைக்கு விண்ணப்பித்து திரும்பும் வழியில் யானை தாக்கி மாணவன் பலி

அநுராதபுரம் மேற்கு தினகரன், அநுராதபுரம் குறூப் நிருபர்கள்

அநுராதபுரம் நீராவிய தேவநம்பியதிஸ்ஸபுர பகுதியில் காட்டு யானையின் தாக்குதலுக்குள்ளாகி 17 வயது மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்து உயர்தர கல்விக்கான விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்காக தயாராகவிருந்த நீராவி தேவநம்பிய திஸ்ஸபுர பகுதியைச் சேர்ந்த எம்.ரஷீம் முகம்மத் ரஷீத் என்ற பாடசாலை மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த புதன் கிழமை (21) அதிகாலை 03.00 மணியளவில் தனது உறவினரை புகையிர நிலையத்தில் விட்டுவிட்டு மோட்டார் சைக்கிளில் திரும்பிக் கொண்டிருந்த போதே காட்டு யானை தாக்கியுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

நீராவிய பகுதியில் தேக்கு மர வனத்தில் இந்நாட்களில் 7 யானைகள் குழுவாக சுற்றித்திரிவதாகவும் சேனைப் பயிர்ச் செய்கைகளை அழித்து வருவதாகவும் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டம் நடத்திய விவசாயிகளை மீண்டும் விவசாயத்தில் ஈடுபட வழியமைத்தவர் ஜனாதிபதி

அநுராதபுரம் தினகரன் நிருபர்

விவசாய நடவடிக்கைகளில் இருந்து வெளியேறி வீதிகளில் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் போராட்டங்களை நடத்திவந்த விவசாயிகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அரசாங்கத்தினால் மீண்டும் விவசாய நிலங்களுக்கு சென்று விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய நிலமை உருவாகியுள்ளது என விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில், இம்முறை பெரும் போகத்தின்போது விவசாயிஒருவருக்கு ஒரு ஹெக்டயாருக்கு ஐம்பது ஆயிரம் ரூபாவிற்கும் அதிகமான நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதுடன் மேலும் பல நிவாரணங்களை எதிர்வரக்கூடிய காலத்தில் விவசாயிகளுக்கு வழங்குவதற்கு திட்டமிட்டுள்ளோம். அன்று இந்த நாட்டில் உரத்தட்டுப்பாடு காரணமாக விவசாயிகள் பெரும் பாதிப்புக்குள்ளாகி இருந்தனர். உணவுத்தட்டுப்பாடு காணப்பட்டது.

அந்த விடயம் அரசாங்கத்திற்கு பெரும் சவாலாக இருந்தது.

அந்த சவாலை முறியடிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் எடுக்கப்பட்ட மிக முக்கியமான விடயங்கள் மற்றும் வேலைத் திட்டங்கள் ஊடாக கடந்த சிறுபோக விவசாயத்திற்கு தேவையான யூரியா உரம் வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்து விவசாயத்தை ஆரம்பிக்கக்கூடிய நிலமை உருவாக்கப்பட்டது.

விவசாயத்துறை அமைச்சர் என்ற வகையில் அன்று எனக்கும் பல பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கவேண்டிய நிலை காணப்பட்டது. இன்று நிலமை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. போதிய அளவு நெல்லும் கையிருப்பில் இருக்கின்றது. அதனை கருத்தில் கொண்டே வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வந்த வெளிநாட்டு அரிசி நிறுத்தப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு தேவையான யூரியா உரம் அனைத்து மாவட்டங்களிலும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது என விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர மேலும் தெரிவித்தார்.

24 வது தேசிய சாகித்திய விழாவில் சிறந்த நாவலுக்கான விருது பெற்ற ஆ.மு.சி வேலழகனின் "அன்புடையர் பிறர்க்கு" எனும் நாவலினதும், சிறந்த கவிதைத் தொகுதிக்கான விருது பெற்ற ஏ.கே.முஜாரத்தின் "கடுவன் பூனை" என்ற கவிதைத்தொகுதியினதும் ஆக்க இலக்கிய பிரதிப் போட்டியில் தெரிவான சிறந்த நாவலான ஏ.எஸ். உபைத்துல்லாவின் 'வேராகிப் போன மனிதர்கள்' எனும் நாவலினதும் முதற் பிரதிகளை இலக்கியப் புரவலர் ஹாஸிம் உமரின் இல்லத்தில் வைத்து கையளித்தபோது எடுத்த படம். தினகரன் ஆசிரியர் செந்தில்வேலவர், கவிஞர் மேமன்கவி ஆகியோர் உடன் காணப்படுகின்றனர்.

கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் அறிவோர் ஒன்றுகூடல்

கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் எதிர்வரும் 28ம் திகதி புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ள அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் "தாய்மொழிக் கல்வியில் நாவலர் மரபின் பங்களிப்பு" எனும் தலைப்பில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிபுணத்துவ ஆலோசகர் கலாநிதி உலகநாதர் நவரட்ணம் அவர்கள் உரை நிகழ்த்தவுள்ளார். இந்நிகழ்விற்கு கொழும்புத் தமிழ்ச் சங்க பேரவை உறுப்பினர் பேராசிரியர் ந.ஞானக்குமரன் தலைமை தாங்குவார்.

தெல்தோட்டை – முஸ்லிம் கொலணி அல் இலாஹிய்யா மஸ்ஜித் ஏற்பாட்டில் பரிசளிப்பு விழாவும் பாராட்டும்

தெல்தோட்டை முஸ்லிம் கொலணி அல் இலாஹிய்யா ஜும்ஆ மஸ்ஜித் நம்பிக்கையாளர் சபை வருடந்தோறும் நடாத்தி வரும் பரிசளிப்பு விழாவும் பாராட்டு விழாவும் எதிர்வரும் 25ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணி முதல் முஸ்லிம் கொலணி இலாஹிய்யா விழா மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வின் போது வைத்திய பீடம் உட்பட பல்வேறு பீடங்களில் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்கள், க.பொ.த. உயர்த்தரத்தில் உயர் தகைமைப் பெற்ற மாணவர்கள், க.பொ.த. சாதாரண தரத்தில் உயர் பெறுபேறு பெற்ற மாணவர்கள், உயர் கல்வி நிலையங்களுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்கள், மௌலவி / மௌலவியாக்களாக வெளியேறியுள்ளவர்கள், ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசிலில் வெட்டுப்புள்ளிக்கு மேலதிக புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள், ஆகியோர்களுடன் ஊருக்கு சேவையாற்றிய மூத்தோர்களையும் பாராட்டி பரிசு வழங்கி பொன்னாடைப் போர்த்தி கௌரவிப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டாரவுடன் விசேட சந்திப்பொன்று நேற்று (22) கட்சி தலைமையகத்தில் நடைபெற்றது. ஐ.தே.கவின் இளைஞர் குழுவினர் கட்சியின் எதிர்கால பணிகள் குறித்து இதன்போது நீண்டநேரம் ஆராய்ந்தனர். இந்நிகழ்வில் இரத்தினபுரி ஐ.தே.க அமைப்பாளர் எஸ். அனந்தகுமாரும் கலந்து கொண்டுள்ளதை படத்தில் காணலாம்.

இளைஞர் பாராளுமன்ற பிரதியமைச்சரின் வேண்டுகோளில்

களுத்துறை மாவட்டத்தில் விளையாட்டுத் துறையை ஊக்குவிக்க நடவடிக்கை

(பேருவளை விசேட நிருபர்)

இளைஞர் பாராளுமன்ற வெளிவிவகார பிரதியமைச்சர் அஹ்மத் ஸாதிக் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க களுத்துறை மாவட்டத்தில் விளையாட்டுத்துறைக்கு ஊக்குவிப்பு வழங்க பங்களாதேஷ் உயர்ஸ்தானிகராலயம் முன்வந்துள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் Tareq Mohamed Ariful Islam அவர்களை இளைஞர் பாராளுமன்ற வெளிவிவகார பிரதியமைச்சர் அஹ்மத் ஸாதிக் சந்தித்ததன் விளைவாக அவரின் வேண்டுகோளுக்கு இணங்க களுத்துறை மாவட்டத்தில் விளையாட்டுத்துறைக்கு ஊக்குவிப்பு வழங்க உயர்ஸ்தானிகராலயம் முன்வந்துள்ளது. அதன் அடிப்படையில் பேருவளை அல்ஹுமைசரா தேசிய பாடசாலை மற்றும் பயாகல பண்டாரநாயக்க மத்திய கல்லூரி ஆகியவற்றுக்கு இடையில் கடினப்பந்து கிரிக்கெட் போட்டி இடம்பெறவுள்ளது.

இந்த திட்டத்திற்கு பங்களாதேஷ் உயர் ஸ்தானிகராலயம் நிதியுதவி வழங்கியுள்ளது. இச்செயற்திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கையான, இரு அணிகளையும் அறிமுகப்படுத்தும் நிகழ்வும் வெற்றிக்கிண்ண கையளிப்பு விழாவும் நேற்று முன்தினம் 21 ம் திகதி அல்ஹுமைஸரா தேசிய பாடசாலையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் Tareq Mohame Ariful Islam அவர்கள் கலந்து கொண்டார்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 டிசம்பர் 23 வெள்ளிக்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

தொழுகை நேரம்

10 முதல் 13 வரை

சுபஹ்	05.04
லுஹர்	12.22
அஸர்	03.38
மஃரிப்	06.22
இஷா	07.32

இன்றைய சுபதினம்

சுபகிருது வருடம் சித்திரை 5

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

இராசி பலன்கள்

மேஷம்	செலவு
ரிஷபம்	பாராட்டு
மிதுனம்	தனம்
கடகம்	போட்டி
சிம்மம்	கோபம்
கன்னி	முயற்சி
துலாம்	நன்மை
விருச்சிகம்	நிறைவு
தனுசு	வெற்றி
மகரம்	பொறுமை
கும்பம்	மறதி
மீனம்	சுகம்

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள்
(பாபு சர்மா)

சர்வதேச வர்த்தக அலுவலகத்தை விரைவில் திறக்க அரசாங்கம் தீர்மானம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கமைய சர்வதேச வர்த்தகம் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக சர்வதேச வர்த்தக அலுவலகமொன்றை அமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சர்வதேச வர்த்தகம் தொடர்பான நிறுவனங்களால் தனித்தனியாக மேற்கொள்ளப்படும் அணுகுமுறைகளில் காணப்படும் குறைபாடுகளைத் தவிர்ப்பதன் மூலமும் அதன் செயற்பாடுகளை மிகுந்த செயற்திறனுடனும் முறையாகமேற்கொள்ளும் வகையிலும் இந்த புதிய அலுவலகம் நிறுவப்படும்.

இதனுடன்தொடர்புடைய அனைத்து நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து, பொருளாதாரத்துக்கு சர்வதேச வர்த்தகத் துறைகளின் அதிகபட்ச பங்களிப்பை வழங்க இதனூடாக நடவடிக்கை எடுக்கப்படும்.

பொருளாதார மறுமலர்ச்சிக்காகப் பயன்படுத்தப்படாது மறைந்து காணப்படும் வர்த்தகம் மற்றும் முதலீட்டுத் துறைகளின் திறனைப் பயன்படுத்துவது அரசாங்கத்தின் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் அடிப்படை அங்கமாகும்.

அதற்கமைய,முதலில் தெற்காசியாவுடன் இணைந்தும், பின்னர் கிழக்கு நோக்கி விஸ்தரிப்பதன்மூலம், சீனா, தாய்லாந்து மற்றும் இந்தோனேசியாவுடன் இணைந்து, இறுதியாக உலகின் பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் மக்கள்தொகையில் 30% உரிமையைக் கொண்டுள்ள "பிராந்திய விரிவான பொருளாதார கூட்டணி" (Regional Comprehensive Economic Partnership, RCEP) உடன் இணைவதே இலங்கையின் இலக்காகும்.

இதற்கு அடித்தளமிடும் வகையில் சர்வதேச வர்த்தக அலுவலகம் பாராளுமன்ற சட்டத்தின் மூலம் நிறுவப்படும். இதற்காக சர்வதேச வர்த்தகத்தில் நிபுணத்துவம் பெற்ற புகழ்பெற்ற ஆலோசனைக் குழு நியமிக்கப்பட இருப்பதோடு சர்வதேச வர்த்தக தூதுவரால் இந்த அலுவலக செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

06

மறு அறிவித்தல் வரை கடலுக்கு செல்ல வேண்டாம்

மீனவர்களுக்கு வானிலை நிலையம் அறிவுறுத்தல்

மன்னாரிலிருந்து காங்கேசன்துறை, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஊடாக பொத்துவில் வரையான பகுதிகளில் கடற்றொழிலாளர்கள் மறு அறிவித்தல் வரை கடற்றொழிலில் ஈடுபட வேண்டாம் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய மற்றும் தென் மேற்கு வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக இலங்கையின் கிழக்கு மற்றும் வடக்கு கடற்பரப்புகளிலும் காற்றின் வேகம் அவ்வப்போது மணித்தியாலத்திற்கு 55 தொடக்கம் 65 கிலோ மீட்டர் வேகத்தில் அதிகரித்துள்ளமையே இதற்கு காரணம் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

அரசியல், கட்சி பேதங்களை மறந்து ஒன்றிணைவோம்

வெறுமனே குறைகூறும், விமர்சிக்கும் அரசியல் இனியும் எமக்கு வேண்டாம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

ஹற்றன் சுழற்சி நிருபர்

"நாட்டிலுள்ள தற்போதைய அரசியல் முறைமையை மக்கள் வெறுத்துள்ளனர். இளைஞர்கள் அரசியலிலிருந்து ஒதுங்கிச்செல்கின்றனர். எனவே, வெறுமனே குறை கூறும் விமர்சிக்கும் அரசியல் இனியும் வேண்டாம். நாட்டை மீட்க அரசியல், கட்சி பேதங்களை மறந்து ஒன்றிணைவோம் " என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்தார்.

நுவரெலியாவுக்கு நேற்று (22) விஜயம் செய்த ஜனாதிபதி, நுவரெலியா நகர மண்டபத்தில் நடைபெற்ற நுவரெலியா மாவட்ட உணவு பாதுகாப்பு

மக்கள் படும் துன்பத்தை நாம் மறக்கவில்லை. அடுத்தாண்டு மக்களுக்கு மேலும் பல நிவாரணங்கள் வழங்கப்படும்

மற்றும் மாவட்ட அபிவிருத்தி திட்டம் தொடர்பாக அரச அதிகாரிகள் உள்ளிட்ட அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

அவர் அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில்,

நாட்டு மக்கள்

06

IMF ஒத்துழைப்பை பெறுவது தொடர்பில்:

இந்தியா, சீனாவின் இருதரப்பு உறுதிப்படுத்தலை எதிர்பார்க்கிறோம்

மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வது தொடர்பில் இந்தியா மற்றும் சீனா உள்ளிட்ட நாடுகளின்இருதரப்பு உறுதிப்படுத்தலை எதிர்பார்த்துள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்திய 'த ஹிந்து' பத்திரிகைக்கு வழங்கியுள்ள விசேட நேர்காணலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நேர்காணலில் தொடர்ந்தும் கருத்து தெரிவித்துள்ள அவர்,

கடந்த சில மாதங்களாக இந்தியா, சீனா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுடன் கடன் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பில் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளன. அந்த வகையில் கடன் உரிமை நாடுகளுடன் சமத்துவமாகவும் வினைத் திறனை அடிப்படையாகக் கொண்டும் அனைத்து தகவல்களும் பரிமாறப்பட்டுள்ளன.

சர்வதேச நாணய நிதியத்தின் கடனை இந்த வருடத்தில் பெற்றுக் கொள்வதற்கு இலங்கை அரசாங்கம் எதிர்பார்த்திருந்த போதும் அது சாத்தியப்படவில்லை. அந்த ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வதற்காக இருதரப்பு கடன் உரிமையாளர்களின் உறுதிப்படுத்தல் அவசியமாகவுள்ளது.

அதே வேளை இதன் போது நாட்டின் சுற்றுலாத் துறை தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள மத்திய வங்கியின் ஆளுநர்,

இந்த வருடத்தின் இதுவரையான காலத்தில் சுற்றுலாத்துறை மூலம் ஒரு பில்லியனுக்கு

06

நத்தார் தினத்தை முன்னிட்டு தேவாலயங்களுக்கு பாதுகாப்பு

நாடு பூராகவும் பொலிஸார் நடவடிக்கை

எதிர்வரும் நத்தார் தினத்தை முன்னிட்டு, கிறிஸ்தவ தேவாலயங்களில் நடத்தப்படும் விசேட திருப்பலி ஒப்புக்கொடுத்தல் ஆராதனைகளின் போது, தேவாலயங்களுக்கு விசேட பாதுகாப்புக்களை வழங்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

நாட்டிலுள்ள அனைத்து தேவாலயங்களிலும் உள்ள அருட்தந்தைகளை சந்தித்து, கலந்துரையாடல்களை நடத்தி, அவர்களுக்கு தேவையான பாதுகாப்பை வழங்குமாறு, பொலிஸ்மா அதிபர், அனைத்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கும் ஆலோசனை வழங்கியுள்ளார்.

அதேபோன்று, நத்தார் காலப் பகுதியில் தேவாலயங்களில் உள்ளவர்களின் ஒத்துழைப்புடன், தேவாலயத்திற்கு வருகைத் தரும் சந்தேகத்திற்கிடமானோரை அடையாளம் காணப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

சீனாவின் எரிபொருள் நன்கொடை :

விவசாயிகளுக்கு நிவாரணமாக பகிர்ந்தளிக்க நடவடிக்கை

லோரன்ஸ் செல்வநாயகம்

சீனாவிடமிருந்து நன்கொடையாக கிடைத்துள்ள எரிபொருளை ஒரு ஹெக்டயாருக்கும் குறைந்த நெல் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு இலவசமாக வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்திருந்த வேண்டுகோளுக்கிணங்க சீன அரசாங்கம் இலங்கைக்கு 10.06 மில்லியன் லீற்றர் எரிபொருளை நன்கொடையாக வழங்கியுள்ளது.

தில் 6.98 மில்லியன் லீற்றர் எரிபொருளை நாட்டில் நெற் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு நிவாரணமாக பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு மீதமாகும் எரிபொருளை நாட்டிலுள்ள மீனவர் சமூகத்திற்கு வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமென அமைச்சர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் எரிபொருள் பகிர்ந்தளிப்பு நடவடிக்கைகள் அந்தந்த மாவட்டங்களிலுள்ள தெரிவுசெய்யப்பட்ட பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான எரிபொருள் நிலையங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பண்டிகை காலத்தை முன்னிட்டு

விசேட ரயில் சேவைகள் அட்டவணைக்கு மேலதிகமாக இயங்கும்

கிறிஸ்மஸ், புதுவருடப் பண்டிகைகாலத்தை முன்னிட்டு இலங்கை புகையிரத திணைக்களம் சில விசேட ரயில்களை இயக்குவதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

இலங்கை ரயில்வே திணைக்களம் இந்த பண்டிகை காலத்தில் கிராமங்களுக்கு செல்லும் பயணிகளின் வசதிக்காக இந்த விசேட புகையிரதங்களை சேவையில் ஈடுபடுத்தியுள்ளதாகவும் இந்த ரயில்கள் கால அட்டவணைக்கு கூடுதலாக இயக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது .

தேசிய மாணவர் படையணிக்கு சீனா 5 மில்.ரூபாய் நன்கொடை

(ஸாதிக் ஷிஹான்)

இலங்கைக்கான சீன தூதரகம் தேசிய மாணவர் படையணியின் மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காக 5 மில்லியன் ரூபாவை பாதுகாப்பு அமைச்சிற்கு நன்கொடையாக வழங்கியுள்ளது.

இந்த நன்கொடையை பாதுகாப்பு அமைச்சில் வைத்து புதன்கிழமை (21) பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்னவிடம் கொழும்பில் உள்ள சீன தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் சிரேஷ்ட கேர்ணல் வான்டொங் வழங்கினர்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் மற்றும் பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன ஆகியோரின் வேண்டுகோளுக்கு இணங்க சீனதூதரகம் இந்த நன்கொடையை வழங்கியுள்ளது.

நாட்டிற்கு நல்லொழுக்கமுள்ள இளைஞர்களையும் எதிர்காலத் தலைவர்களையும் உருவாக்கும் நோக்கிலும் தேசிய மாணவர் படையணியின் பயிற்சி நடவடிக்கைளை மேலும் மேம்படுத்தும் நோக்குடனும் இந்த நன்கொடை வழங்கப்பட்டது.

மஹியங்கனையில் புராதன வாள்மீட்பு

விற்க முயன்ற இருவர் கைது

மஹியங்கனை பாதுகாப்பு வனப்பகுதியில் புதையல் ஒன்றிலிருந்து எடுக்கப்பட்டதாகக் கூறப்படும் வாள் ஒன்றை 40 இலட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்ய முயற்சித்த இருவர் பாணந்துறை வலான மத்திய ஊழல் தடுப்பு பிரிவினரால் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு சமனலவெவ பம்பஹின்ன பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 3 வாரங்களுக்கு முன்னர் மஹியங்கனை வனப்பகுதியில் புதையல் ஒன்றிலிருந்து இந்த வாள் எடுக்கப்பட்டதாக சந்தேக நபர்கள் தெரிவித்துள்ளனர்..

மன்னர் காலத்தைச் சேர்ந்ததாகக் கூறப்படும் தொல்பொருள் பெறுமதியான இந்த வாள் 60 இலட்சம் ரூபா பெறுமதியானது என பாணந்துறை வலான மத்திய ஊழல் தடுப்புப் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

இந்த வாளை 40 இலட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்ய சந்தேக நபர்கள் விருப்பம் தெரிவித்துள்ளமை தொடர்பில் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய 21 ஆம் திகதி குறிப்பிட்ட சந்தேக நபர்களை பம்பைன்ன பகுதிக்கு வரவழைத்து கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளும் போதே இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தினேஷ் ஷாப்டர் படுகொலை சம்பவம்:

விசாரணை அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்க CID க்கு உத்தரவு

லோரன்ஸ் செல்வநாயகம்

பிரபல தொழிலதிபர் தினேஷ் ஷாப்டரின் மரணம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு நீதிமன்றத்திற்கு விடயங்களை அறிக்கையிடுமாறு கொழும்பு மேலதிக மஜிஸ்திரேட் நீதவான் சலனி பெரேரா குற்றத்தடுப்பு விசாரணை திணைக்கள பணிப்பாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

பொரளை பொலிஸார் மூலம் நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்த மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய அடுத்த விசாரணைகளை ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் விசாரணை நடத்தப்பட்டு விடயங்களை நீதிமன்றத்திற்கு அறிக்கையிடுமாறு குற்றப்புலனாய்வு திணைக்கள பணிப்பாளருக்கு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

பொரளை பொலிஸார் நீதிமன்றத்திடம் விடுத்திருந்த வேண்டுகோளை கவனத்திற்கொண்டே நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். மேற்படி சம்பவம் தொடர்பில் பொலிஸ்மா அதிபரின் பணிப்புரையின் கீழ் குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்களம் விசாரணைகளை நடத்திவருவதுடன் அதன் காரணமாக தொடர்ச்சியான அதன் விசாரணைகளையும் அந்தத் திணைக்களத்திற்கே ஒப்படைக்குமாறு பொரளை பொலிஸார் நீதிமன்றத்தைக் கேட்டுக்கொண்டிருந்தனர்.

மேற்படி படுகொலை சம்பவம் தொடர்பில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாக்குமூலங்கள் மற்றும் தொலைபேசி பகுப்பாய்வு அறிக்கைகள் உள்ளடங்கிய கோவைகளை குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்களத்திற்கு ஒப்படைப்பதாக பொரளை பொலிஸார் நீதிமன்றத்திற்கு தெரிவித்துள்ளனர்.

இந்த விடயங்களை கவனத்திற்கொண்டே கொழும்பு மேலதிக மஜிஸ்திரேட் நீதவான் சலனி பெரேரா இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து நீதிமன்றத்திற்கு விடயங்களை அறிக்கையிடுமாறு குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் பணிப்பாளருக்கு உத்தரவிட்டுள்ளது.

நாணய மாற்று

	வாங்கும் விலை	விற்பனை விலை
அவுஸ்திரேலியா டொலர்	238.54	249.41
கனடியன் டொலர்	256.80	267.07
யூரோ	340.83	352.42
ஜப்பான் யென்	2.5659	2.6696
சிங்கப்பூர் டொலர்	239.52	248.06
ஸ்டேலிங் பவுன்ஸ்	423.68	438.67
சுவிஸ் பிராங்க்	344.01	357.45
அமெரிக்க டொலர்	322.72	334.99

மத்திய கிழக்கு	குறித்த விலை		குறித்த விலை
பஹ்ரின் டினார்	831.93	கட்டார் ரியால்	85.92
குவைத் டினார்	1,028.76	சவூதி ரியால்	83.64
ஓமான் ரியால்	814.75	ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம்	85.39

தினகரன்
THINAKARAN
திகைரன்

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் மார்கழி மாதம் 08ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஜுமாதல் ஊலா பிறை 28

குறள் தரும் சிந்தனை

பழகிய நட்பெவன் செய்யுங் கெழுதகைமை
செய்தாங்கு அமையாக் கடை

பழைய நண்பர்கள் உரிமையோடு செய்த காரியங்களை தாமே செய்ததுபோல உடன்பட்டு இருக்காவிட்டால், அதுவரை பழகிய நட்பு பயனற்றுப் போகும்.

நெற்செய்கையை ஊக்குவிக்கும் மற்றொரு சிறந்த நடவடிக்கை

நாட்டில் பெரும்போக நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு பண உதவி வழங்கப்பட உள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியின் கீழ் 20 ஆயிரம் ரூபா நன்கொடையாக விவசாயிகளுக்கு வழங்கப்பட இருக்கிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேண்டுகோளின் கீழ், இம்முறை வழங்கப்படும் இக்கொடுப்பு மீள அறவிடப்படாத கொடுப்பனவாக அமைந்துள்ளது.

இது தொடர்பிலான அறவிப்பொன்றை விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர நேற்றுமுன்தினம் விடுத்து இருக்கிறார். இந்நாட்டிலுள்ள நெற்செய்கையாளர்களுக்கு இது மகிழ்ச்சி அளிக்கும் செய்தியாக விளங்குகிறது. அதேநேரம் நெற்பயிர்ச்செய்கையை மேலும் ஊக்குவிப்பதற்கான மற்றொரு நடவடிக்கையாகவும் இக்கொடுப்பனவு திட்டத்தை நோக்க முடிகிறது.

அதேநேரம், நெற்பயிர்ச்செய்கைக்கு நிதியுதவி அளிக்கும் இத்திட்டத்தை இந்நாட்டு நெற்செய்கையாளர்கள் பெரிதும் வரவேற்று இருப்பதும் இங்கு குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஆனாலும் ஆரம்ப காலம் முதல் தெற்காசியாவில் நெற்செய்கைக்குப் பெயர் போன இடமாக இந்நாடு விளங்கி வந்திருக்கிறது. ஒரு காலத்தில் அரிசி உற்பத்தியில் தன்னிறைவு அடைந்திருந்த இந்நாடு, ஏனைய நாடுகளுக்கும் கூட அரிசியை ஏற்றுமதி செய்திருக்கிறது. அதன் பயனாக தெற்காசியாவின் நெற்களஞ்சியம் என்றும் ஒரு காலத்தில் இந்நாடு வர்ணிக்கப்பட்டுள்ளது.

நெற்செய்கைக்கு தேவையான சீதோசண நிலையையும் இயற்கை வளங்களையும் மாத்திரமல்லாமல் தனித்துவமான பாரம்பரியத்தையும் மரபுரிமையையும் தன்னகத்தே கொண்டுள்ள இந்நாடு, அண்மையில் அரிசியை இறக்குமதி செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டது. இது பல்வேறு மட்டங்களிலும் பெரும் பேசுபொருளாகியது.

அரிசி உற்பத்தியில் தனித்துவப் பாரம்பரியத்தைக் கொண்டுள்ள இந்நாட்டில் இவ்வாறான நிலைமை ஏற்பட கடந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்ட விவசாய மற்றும் பசளைப் பயன்பாட்டு கொள்கையின் பலவீனங்கள் முக்கிய காரணங்களாக அமைந்திருந்தன. இதன் விளைவாக நாட்டின் நெற்செய்கை உள்ளிட்ட உணவு உற்பத்தி விவசாயத்துறை பெரிதும் வீழ்ச்சி அடைந்தது. விவசாயிகளில் அநேகர் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதில் இருந்து விலகி இருந்தனர்.

இந்த சூழலில் அந்நிய செலாவணிப் பற்றாக்குறையின் விளைவான பொருளாதார நெருக்கடியும் இவ்வருட முற்பகுதியில் தோற்றம் பெற்றது. அது நாட்டில் உணவு நெருக்கடியையும் தோற்றுவித்து விடக்கூடிய அச்ச நிலையையும் ஏற்படுத்தியது.

அதன் காரணத்தினால் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, போஷாக்கு குறைபாட்டை தவிர்ப்பதன் அவசியம் பரவலான உணரப்பட்டது. இது குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விஷேட கவனம் செலுத்தினார். இதன் நிமித்தம் பல்வேறு திட்டங்களையும் அறிவித்ததோடு விஷேட செயற்பாட்டு குழுக்களை அமைக்கவும் அவர் தேவையான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கினார்.

அவ்வாறான வேலைத்திட்டங்களில் ஒன்றாகவே இம்முறை பெரும் போக நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு பணம் நன்கொடையாகப் பெற்றுக்கொடுக்கும் திட்டமும் முன்னெடுக்கப்பட உள்ளது. நெற்செய்கையை ஊக்குவித்து நாட்டுக்கு தேவையான நெல்லை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்து கொள்ள வழிவகை செய்யும் நோக்கிலேயே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் ஒரு ஹெக்டேயர் அல்லது அதற்கு கீழ்பட்ட நிலப்பரப்பில் நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு 10 ஆயிரம் ரூபா படியும் ஒரு ஹெக்டேயருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு 20 ஆயிரம் ரூபாப்படியும் இந்நிதி நன்கொடை வழங்கப்பட உள்ளது. நெற்செய்கையாளர்கள் நெற்பயிர்ச் செய்கைக்கு தேவையான எம்.ஓ.பி பசளையைக் கொள்வனவு செய்து கொள்ள உதவி அளிக்கும் நோக்கிலேயே இந்நிதியுதவி வழங்கப்படுகிறது.

'நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு மாத்திரம் வழங்கப்படும் இந்நிதி விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்படும். அதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன. இம்முறை 08 இலட்சம் ஹெக்டேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்படவிருக்கிறது. அதனால் இத்திட்டத்தின் கீழ் சுமார் 12 இலட்சம் விவசாயக் குடும்பங்கள் பயன்பெற உள்ளன' என்றும் அமைச்சர் அமரவீர குறிப்பிட்டு இருக்கிறார்.

ஜனாதிபதி தலைமையில் உணவு உற்பத்தியை மேம்படுத்தவென முன்னெடுக்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்களில் ஒன்றாக அமைந்துள்ள இத்திட்டத்தின் கீழ், நெல்லுற்பத்தியில் இந்நாடு மீண்டும் தன்னிறைவு அடையும் காலம் வெகுதூரத்தில் இல்லை என்பது தெரிகிறது.

ஆகவே, உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்தி போஷாக்கு குறைபாட்டை தவிர்க்கும் நோக்கில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கப்பட வேண்டும். அது இந்நாட்டின் ஒவ்வொரு குடிமகனதும் பொறுப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

டிசம்பர் 25 ஓர் விடுதலையின் திருநாள்

டிசம்பர் 25, கிறிஸ்து பிறப்பின் நாள் எமது அனைத்து சந்தேகங்களுக்கும், கேள்விகளுக்கும் வெறும் பதிலை மட்டுமல்ல மாறாக எங்கள் விசுவாச வாழ்வை தொடர்ந்தும் ஓடி முடிக்கக்கூடிய நம்பிக்கையையும் தருகின்றது.

கி.மு 2 ஆம் நூற்றாண்டளவில் அரசும் சமயமும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்ததாகவே காணப்பட்டன. எருசலேமின் சமூக கட்டமைப்பு குருக்களாலும் தலைமைக் குருக்களாலும் நிர்வகிக்கப்பட்டது. மகா அலெக்ஸாந்தர் கிரேக்க பேரரசை மிக அழகாக விரிவுபடுத்தியதனால் பல நாடுகள் தங்கள் கலாசாரத்தை விடுத்து புதிய கலாச்சாரத்தை விரும்பி பின்பற்றின. கிரேக்க காலனித்துவ செல்வாக்கு யூதேயா முழுவதிலும் இருந்த போதும் யூதர்கள் தங்கள் நாளாந்த வாழ்க்கை முறையினை தனித்தன்மையுடன் காத்து வந்தனர்.

இத்தகைய சூழலில் கி.மு 198 இல் செலுக்கிய பேரரசு தொலமி அரசை வெற்றி கொண்டு யூதேயா முழுவதையும் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தது. தொலமி பேரரசு யூதர்களுக்கு சமூக கலாசார மற்றும் மத உரிமைகளை வழங்கியது போல செலுக்கிய பேரரசு வழங்கவில்லை. செலுக்கிய பேரரசின் ஆட்சியாளர் மூன்றாம் அந்தியோக்கு யூத சமயத்தை முற்று முழுதாக கிரேக்கமயப்படுத்த விரும்பியவராவார்.

கி.மு 175 ல் செலுக்கிய பேரரசில் அரியணை ஏறிய நான்காம் அந்தியோக்கு எப்பிபானஸ் தனது தந்தையை விட பல படிகள் மேலே சென்று உலகளாவிய கிரேக்க மயமாக்களை செய்ய விரும்பினார். இவர் இரண்டு கொள்கைகளை தீவிரமாக செயற்படுத்த விரும்பினார். முதலாவது தனது ஆட்சிக்குட்பட்ட மக்களை ஒன்றுபடுத்துவது. இரண்டாவது தன் அரசை விரிவபடுத்துவது. அதாவது வரலாற்றிலே மகா அலெக்ஸாந்தருக்கு பக்கத்திலே தான் வர வேண்டுமென எண்ணி தன் முன்னோடிகளுக்குள் தன்னை வேறுபடுத்தி கொள்ள முனைந்தார். எனவே இதனை செய்து முடிக்க மக்கள் தங்கள் பாரம்பரிய கலாசாரங்களை கைவிட்டு கிரேக்க கலாச்சாரத்தை பின்பற்ற வேண்டும் என மக்களை வற்புறுத்தினார்.

இந்த கிரேக்கமயமாக்குதலை யூதேயாவிலுள்ள உயர்மட்ட மக்கள் எதிர்க்கவில்லை. அவர்கள் ஆளும் அரசோடு ஒன்றித்துப்போயினர். ஆனால் சாதாரண மக்கள் இதனை அடியோடு வெறுத்தனர். இவர்கள் தங்கள் சமயத்தையும் கலாசாரத்தையும் கைவிட்டுவிட விரும்பவில்லை. அதற்காக தங்கள் உயிரையும் கொடுக்க தயாராக இருந்தனர்.

ஆனால் அவர்களை வழிநடத்த ஓர் தலைமை அங்கு தேவைப்பட்டது. இக் காலப்பகுதியில் குரு மத்தியாஸ் என்பவர் இந்த அடக்குமுறைகளையெல்லாம் கடுமையாக எதிர்த்துக்கொண்டிருந்தார். எப்பிபானஸின் அதிகாரிகள் குரு மத்தியாசிடம் கிரேக்க சிலைகளுக்கு பலியிடுமாறு கட்டளையிடுகின்றனர். ஆனால் குரு மத்தியாஸ் அதனை செய்ய மறுத்து விடுகின்றார். இதற்கு மாறாக அரசனது கொடுமைகளை நிறைவேற்ற வந்த அதிகாரிகளையும் அவர்களுக்கு பணிந்த யூதர்களையும் கொன்று விட்டு திருச்சட்டத்தின் பேரில் பேரார்வமும் உடன்படிக்கை மீது பற்றுறுதியும் கொண்டவர்கள் என் பின்னால் வரட்டும் (ஐ மக் 2:27) என்று அறைகூவல் விடுத்தார்.

இப்பொழுது யூதர்களுக்கு தாம் எதிர்பார்த்திருந்த தலைவர் கிடைத்து விடுகின்றார். இவரும் இவரது ஐந்து புதல்வர்களுமான யோவான், சீமோன், யூதா, எலயேசர், யோனத்தான் ஆகியோர் யூதர்களை ஓர் அணியாக திரட்டினர். இந்த ஒருங்கிணைப்பு தான் யூத தேசியவாதத்திற்கான முதலாவது விதையாக விழுந்தது. இவ்வாறு உரிமைப்போராட்டத்திற்கு தலைமைத்துவம் கொடுத்த (கி.மு 167) மத்தியாசின் குடும்பம் மக்கபேயர் என அறியப்பட்டனர்.

யூதா தனது இராணுவத்துடன் எருசலேம் நோக்கி படையெடுத்து எருசலேம் நகர் மற்றும் ஆலயத்தை தம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தார் (1மக்4:3640). கி.மு 165 டிசம்பர் 25 அன்று தேவாலயம் சுத்தம் செய்யப்பட்டு ஆண்டவருக்கென்று மீளவும் பிரதிஸ்டை செய்யப்பட்டது. இந்த விழா ஏழு நாட்களுக்கு கொண்டாடப்பட்டது. அந்த நாளை யூதர்கள் இன்று வரை கனுக்கா பண்டிகை என கொண்டாடி வருகின்றனர்.

கிறிஸ்து பிறப்பின் பண்டிகையை டிசம்பர் மாதம் 25 ம் திகதி கொண்டாடும் எமக்கு மேற்கூறப்பட்டுள்ள வரலாற்று பின்னணியை விட ஓர் சிறந்த உதாரணம் கிடைக்கப்போவதில்லை. கிறிஸ்துவின் பிறப்பு ஒடுக்கப்பட்ட ஓர் இனத்தின் விடுதலையின் திருநாளில் நிகழ்ந்த ஒன்று. உரிமைக்காக போராடிய இனத்தின் விடுதலை நாளை கடவுள் தமது குமாரனின் பிறப்பு நாளாக தெரிந்து கொண்டார் என இங்கு நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அருட்பணி மணி.லூக்ஜோன்...✍
பிராந்திய குருமுதல்வர், கிழக்கு மாகாணம், அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை

பேராசிரியர் கைலாசபதியும் மகாகவி பாரதி ஆய்வுகளும்

பேராசிரியர் கைலாசபதி (1933_1982) அவர்களின் நாற்பதாவது நினைவு தினம் மார்கழி மாதம் 6ஆம் திகதி ஆகும். 49 வருடங்கள் மட்டுமே வாழ்ந்த பேராசிரியர் கைலாசபதி அவர்களையும் அவரது பன்முகப்பட்ட பங்களிப்புக்களையும், அவரது ஆளுமைகளையும், நினைவுகளையும் தொடர்ந்து அவரது சமகாலத்தவர்கள், நண்பர்கள், மாணவர்கள், அவரது எழுத்திலும் கருத்திலும் ஈர்ப்புடையவர்கள் என்று பலரும் எழுதிக் கொண்டே இருக்கின்றனர்.

காலவோட்டத்தில் அவரது ஆளுமையினையும் குறுகிய வாழ்நாளில் அவர் ஆற்றிய பங்களிப்பினையும் பற்றிய புதிய மதிப்பீடுகளும் புதிய பொருள் கோடல்களும், புதிய அகலித்துப் பரந்த ஆய்வுகளும் என்று, மட்டுமல்லாது அவர் விட்டுச் சென்ற ஆய்வுத் தளங்களையும் புகட்டிய ஆலோசனைகளையும் கூட இன்றைய அறிவுப் புரட்சி, ஆவணத் தகவல் தொழில்நுட்ப வசதி போன்ற வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொண்டும், நவீன மெய்யியற் கோட்பாட்டுகள், அணுகுமுறைகளைக் கொண்டும் முன்னெடுத்துச் செல்ல வேண்டிய தேவைகள் இன்னமும் இருந்துகொண்டே இருக்கின்றன. அவற்றில் ஒன்று பாரதி இயல் என்பதுவும்.

பன்முகப்பட்ட ஆய்வுத்தளங்களில் செயற்பட்ட பேராசிரியர் கைலாசபதி அவர்களின் பாரதி பற்றிய ஆய்வுகள் அன்று நவீனமானவையாக, அபாரமானவையாக, முற்போக்கானவையாக, முன்னோடியானவையாக அமைந்திருந்ததை அறிவுலகம் பாராட்டி நிற்கின்றது.

பேராசிரியர் கைலாசபதி அவர்கள் பாரதி பற்றி பல்வேறு சந்தர்ப்பங்களில், பலவேறு வடிவங்களில் எழுதிய இருபத்தியிரண்டு கட்டுரைகள் அடங்கிய 'பாரதி ஆய்வுகள்' என்ற நூல் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியீடாக 1984இல் வெளியாகியிருக்கின்றது. பாரதியியல் பற்றி சுமார் முப்பது கட்டுரைகளை பேராசிரியர் கைலாசபதி எழுதியிருகின்றார் என்று கூறுகின்றார் பேராசிரியர் செ. யோகராசா.

ஆய்வியலுக்கும், குறிப்பாக ஒப்பியல் ஆய்வுக்கும் பாரதியியலுக்கும் பேராசிரியர் க.கைலாசபதி அவர்களின் பங்களிப்பினைத் தெரிந்துகொள்வதற்கு மிக முக்கிய நூலாக 'பாரதி ஆய்வுகள்' என்ற இந்த நூல் இருக்கின்றது. இந்த நூலினைத் தொகுத்தளித்த கைலாசபதி அவர்களின் ஆய்வுதடத்தினையொற்றிச் செல்பவர்களான பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு, பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் மற்றும் கைலாசபதி அவர்களின் மனைவி சர்வமங்களம் போன்றோருக்கு ஆய்வுலகம் நன்றி கூறக் கடைமைப்பட்டுள்ளது. இந்த நூலைவிட 'On Bharathi' என்ற பாரதி பற்றி பேராசிரியர் கைலாசபதி அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய இரண்டு கட்டுரைகள் அடங்கிய நூலொன்றினையும் மேற்படி பதிப்பகம் 1987 இல் வெளியிட்டிருக்கின்றது.

'பாரதி ஆய்வுகள்' என்ற மேற்சொன்ன நூலினை முன்வைத்து 'பாரதியியலுக்கு கைலாசபதியின் பங்களிப்பு' என்ற தலைப்பில் பேராசிரியர் செ. யோகராசா விஸ்தாரமான ஆய்வுக்கட்டுரை ஒன்றினை எழுதியிருகின்றார்.

'கைலாசபதி நினைவுகள்' என்ற நூலில் செ.கணேசலிங்கன் அவர்கள் "கைலாசபதிக்கு பாரதிமேல் ஒரு பக்தி, வெறி என்று கூடச் சொல்லலாம்; தாகூருடன் ஒப்பிடும்போதும் பாரதியை உயர்வாகவே கொண்டார்' என்று கூறுகின்றார்.

'பாரதி ஆய்வுகள்' என்ற இந்த நூலில் உள்ள கட்டுரைகளைப் படிக்கும் போது, பாரதியின் வாழ்வும் வரலாறும் பேராசிரியர் கைலாசபதி அவர்களின் வாழ்வுடனும் வரலாற்றுடனும் சிலவேளைகளின் ஒன்றித்துவிடுவதான ஒரு யோசனை வந்துகொண்டேயிருந்து. இவ்வாறானதொரு உணர்வினை செ.கணேசலிங்கன் அவர்களும் குறித்துச் செல்கிறார்.

பாரதியின் மீது கைலாஸ் அவர்களுக்கு இருந்த ஈடுபாட்டினை இந்த ஆய்வுகளுக்கு அப்பாலும் எடுத்துக்காட்டப் பல சம்பவங்கள் அறியக்கிடக்கின்றன. விபுலாநந்த அடிகள் அவர்கள் பாரதி வாழுங் காலத்திலேயே அவரது கவித்திறனை இனங்கண்டு எழுதிய முதலாமவர் என்று கூடச் சொல்லாம். அந்த விபுலாநந்த அடிகள் பற்றிக் கைலாஸ் அவர்கள் எழுதிய கட்டுரைகளிலும் அவைபோன்ற இன்னும் பல கட்டுரைகளிலும் பாரதியின் அழகிய வரிகள் ஆங்காங்கே இடம் பெற்றிருக்கும்.

பண்டிதர் எஃவ். எக்ஸ்.சி. நடராசா அவர்கள் இவரது சம காலத்தவர். கைலாசபதியின் சமூக இலக்கியக் கொள்கையின் மறு துருவம் அவர். இருவரும் மேடையொன்றில் விவாதிக்கின்றனர்.

பாரதியியல் என்கிற ஆய்வுத்துறைக்குப் பாரதியின் முறையான வரலாறு எழுதப்பட வேண்டும் என்றும், பாரதியின் ஆக்கங்களுக்கு பாடபேதங்களையெல்லாம் ஆய்ந்த ஓர் சிறந்த ஆய்வுப் பதிப்பு வேண்டும் என்பதும், அத்தோடு பாரதி பற்றிய நூற்றொகை ஒன்றின் தேவையினையும் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளார் கைலாசபதி அவர்கள்.

பேராசிரியர் க. கைலாசபதி அவர்களின் ஆக்கங்கள் பற்றிய ஒரு விவரணப் பட்டியலை லண்டன் வாழ் நூலகர் என். செல்வராசா தயாரித்து வழங்கியுள்ளதையும் கண்ணுறுகின்றோம். இது போன்ற செயற்பாடுகளில் இன்னும் அதிக கவனங்கள் குவிக்கப்படவேண்டும்.

நடராசா சுசீந்திரன்...✍

சீனாவில் வேகமாக அதிகரிக்கும் கொரோனா திரிபு தொற்று!

சீனாவில் கொரோனா பாதிப்பு மிக வேகமாக உயர்ந்து வருகிறது. BF.7 வகை திரிபு வைரஸே இந்த அதிவேக பரவலுக்கு காரணம் என்று சொல்லப்படுகிறது. அந்த நாட்டில் கொரோனா பாதிப்புகள் மிக அதிகமாக இருப்பதாக தகவல்கள் கூறுகின்றன.

கொரோனா முதன் முதலாக சீனாவில் இருந்தே உலகத்திற்கு பரவியது. தற்போது சீனா கொரோனா பரவுவதை தடுப்பதற்காக திண்டாடுகின்றது.

சரித்திரத்தில் முதன் முறையாக தடுப்பூசிகளை சீனா இறக்குமதி செய்வதாக செய்தி வருகின்றன. தடுப்பூசி போட்டு இருந்தாலும் இந்த வகை திரிபடைந்த கொரோனா அதிக பாதிப்பை ஏற்படுத்துகிறது. தற்போது கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு சீனாவில் வேகமாக கொரோனா பரவி வருவதாக கூறப்படுகிறது. சீனா மட்டும் இன்றி பிரேசில், ஜப்பான், கொரிய நாட்டிற்கும் இந்த ஒமிக்ரோனின் புதிய மாறுபாடு வகை கொரோனா பரவியிருப்பதாக தெரிகிறது.

இந்தியாவில் கூட சிலருக்கு புதிய வகை கொரோனா பாதிப்பு கண்டறியப்பட்டு இருக்கிறது. சீனாவில் மட்டும் அடுத்த 3 மாதங்களில் 60 சதவீதம் வரை மக்கள் கொரோனா தொற்றுக்கு ஆளாவார்கள் என்று நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். சீனா உடனடியாக தடுப்பூசி செலுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும் என்று உலக சுகாதார அமைப்பும் வலியுறுத்தியுள்ளது.

சீனா தற்போது பெரிய அளவிலான கொரோனா பரிசோதனையை கைவிட்டு விட்டது. இதனால், சீனா வெளியிடும் தினசரி கொரோனா பாதிப்பு எந்த அளவுக்கு நம்பகமானது என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

பல்கலைக்கழகங்களில் பெண்கள் பயில தடை விதித்த தலிபான் அரசு!

ஆப்கானிஸ்தானில் பெண்கள் உயர் கல்வி பயில அந்நாட்டு தலிபான்கள் அரசு இடைக்கால தடை விதித்துள்ள நிலையில், வகுப்பறையில் பெண்கள் கதறி அழும் வீடியோ காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வேகமாக பரவி வருகின்றன. தலிபான் அரசின் இந்த உத்தரவை எதிர்த்து மாணவிகளுக்கு ஆதரவாக மாணவர்களும் போராட்டக் களத்தில் குதித்துள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் தலிபான் அரசு புதிய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டது. இந்த அறிவிப்பின்படி 5 ஆம் வகுப்புக்கு மேல் பெண்கள் கல்வி பயில தடை விதிக்கப்பட்டது. இதன் காரணமாக அந்நாட்டில் இருந்த உயர்நிலை பாடசாலைகள், பெண்களுக்கான கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் ஆகியவை அடுத்தடுத்து மூடப்பட்டன.

இதுபோன்ற பிற்போக்கு நடவடிக்கைகளை திருத்திக்கொள்ள வேண்டும் என்றும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் தலிபான்களுக்கு எச்சரிக்கை விடுத்தது. இதனையடுத்து சர்ச்சைக்குரிய பாடசாலை கல்வி தடை அறிவிப்பை தலிபான்கள் அரசு திரும்ப பெற்றது. ஆனாலும் அதன் பின்னரான நாட்களில் பெண்களுக்கு எதிரான தொடர் சட்டங்களை இயற்றி வந்தது. பொது இடங்களுக்கு ஆண் துணையின்றி செல்லக்கூடாது. உடற்பயிற்சி கூடங்கள், விளையாட்டு மைதானங்கள் உள்ளிட்ட இடங்களுக்கு செல்வதற்கு தடையும் விதிக்கப்பட்டது.

இருபாலர் பயிலும் கல்வி நிலையங்களில் திரைச்சீலை கொண்டு மாணவர்களையும் மாணவிகளையும் பிரிக்க வேண்டும் என அந்நாட்டு அரசு கூறியிருந்தது. இப்படி இருக்கையில் அந்நாட்டின் உயர் கல்வித் துறை அமைச்சகம் தற்போது மற்றொரு அதிர்ச்சிகரமான அறிவிப்பை வெளியிட்டுள்ளது. அதன்படி இனி பெண்கள் பல்கலைக்கழகங்களில் பயில தடை விதிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே பெண்களுக்கு இருந்த தடை காரணமாக அலுவலகங்களில் அவர்கள் பணியிடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். இந்நிலையில் இந்த புதிய தடை உத்தரவு மூலம் பெண்களுக்கு கடும் நெருக்கடி ஏற்படும் என அந்நாட்டின் சமூக ஆர்வலர்கள் கூறியுள்ளனர். இதனையடுத்து மாணவிகள் கண்ணீருடன் பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறும் வீடியோக்கள் சமூக வலைத்தளங்களில் வேகமாக பரவி வருகின்றன.

இன்னலுற்ற மக்களின் நம்பிக்கை ஒளியாக அவதரித்த இயேசு பாலன்

“அஞ்சாதீர்கள் இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்”.
(லூக்கா:2:10,11)

இற்றைக்கு ஈராயிரம் வருடங்களுக்கு முன்னே பாலஸ்தீன தேசத்தின் பெத்தலகேம் ஊரின் வயல்வெளியில் இராத் தங்கிய சமூக நிலையில் ஒதுக்கப்பட்டவர்கள், கல்வி அறிவற்ற பாமரர்கள் என ஒதுக்கப்பட்ட, பொருளாதார நிலையிலும் மிக நலிவடைந்த, நாடோடி வாழ்க்கை வாழ்ந்த மந்தை மேய்ப்போர் சமூகத்தினருக்கு வானதூதர்களினால் வழங்கப்பட்ட கிறிஸ்து பெருமானின் பிறப்பைக் குறித்ததான திருவிவிலியத்தினால் சான்றுப்படுத்தப்படுகின்ற செய்தியே இதுவாகும்.

இச்செய்தியின் விழிப்பும் செய்தி வழங்கப்பட்ட நோக்கமும் இச்செய்தி வழங்கப்பட்ட சமூகப் பிரிவும் எக்காலத்திற்கும் பொருந்தும் வகையில் உலகவாழ் இன்னலுற்ற அனைத்து மக்களுக்குமான செய்தியாக இச்செய்தி அமைந்துள்ளது.

இறைவனால் அனுப்பப்படவிருக்கும் மனித குலத்தை மீட்க வாக்களிக்கப்பட்ட மெசியா என்னும் இறைமைந்தர் குறித்ததான எதிர்பார்ப்பு பூமியிலே மேலோங்கியிருந்தது.

இந்த எதிர்பார்ப்புக்கான அடிப்படைக் காரணமாக அமைந்தது இறைவன் மனுக்குலத்தின் மீது வைத்திருந்த அளவுகடந்த அன்பும்,தான் அன்பு செய்த மனுக்குலத்தை மீட்பதற்காக வாக்களித்த மெசியாவின் வருகையும் ஆகும்.

இந்த எதிர்பார்ப்பானது இறைவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் எனக் கருதப்பட்ட இஸ்ரயேல் மக்களிடையே மிக ஆழமாக வேரூன்றிக் காணப்பட்டது. காலப்போக்கில் விடுதலைச் சிந்தனையானது பல்வேறு இனங்களதும் ஆட்சியாளர்களதும் அச்சுறுத்தல்களுக்கும் அடக்குமுறைகளுக்கும் உட்பட்ட போது காலப்போக்கில் பாவத்திலிருந்தான விடுதலை என்கின்ற எண்ணப்பாடு மறைந்து போய், அரசியல் ரீதியாக உள்ள அடக்குமுறையில் இருந்து விடுதலையை நோக்கிய எதிர்பார்ப்பும் சிந்தனையும் இவர்களிடையே வலுவடையத் தொடங்கியது.

நாளைமறுதினம் நத்தார் பண்டிகை

மெசியா என்னும் நீதியான ஆட்சியை வழங்கப் போகின்ற இறை அரசரையும், அவருடைய ஆட்சியின் மூலம் தங்களுக்கு இழைக்கப்படுகின்ற இன்னல்கள் நீங்கி சுபிட்சமான வாழ்க்கையை எதிர்நோக்கிக் காத்திருந்த மக்களுக்கு நம்பிக்கையும் உற்சாகத்தையும் நிம்மதியையும் அளிக்கின்ற செய்தியாக கிறிஸ்துவின் பிறப்பும் அதற்குக் கட்டியம் கூறிய வானதூதரின் செய்தியும் அமைந்திருந்தன.

வேதனையுற்றிருந்த மக்களுக்கு சுபிட்சமான நீதியின் ஆட்சி வரப்போகின்றது என்பதும் அதற்கான காலம் நிறைவேறிவிட்டது என்ற உறுதிப்பாடும் வாழ்க்கையிலே மீண்டும் ஒரு பிடிப்பையும் ஒரு புது உற்சாகத்தையும் அளித்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

இறைவனால் படைக்கப்பட்ட மனிதகுலம் இறைவனது கட்டளையை மீறி பாவத்தில் விழுந்த போது பாவநிவாரணப்பலியாக இறைவனால் அனுப்பப்படும் நீதி உள்ள அரசராகிய மேசியாவின் வருகையை ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே இறைவனால் அனுப்பப்பட்ட இறை மைந்தன் மெசியா மக்களின் துயர் துடைப்பதற்காகவும் பாவத்திலே அழிந்து போகின்ற மனுக்குலத்தினை தம்மையே ஜீவபலியாக ஒப்படைத்து மீட்பதற்காகவும் அன்னைமரியாள் வயிற்றிலே கருவாய் உருவாகி இம்மண்ணிலே மகவாய் அவதரித்தார்.

இறைவன் தன் ஒரே பேறான மைந்தனை மனுக்குலத்தை மீட்பதற்காக பாலகனாய் அவதரிக்க செய்ததும் அல்லாமல், விசேஷித்த நட்சத்திரத்தையும் வானிலே அவருடைய பிறப்பிற்கு அடையாளமாக வைத்திருந்தார் என்பதனை திருவிவிலிய சான்றுகள் வாயிலாக அறிய முடிகின்றது.

இவ்விதமாய் வாழ்வளிக்க வந்த மெசியா குறித்து வானதூதரும் வான் நட்சத்திரமும் கட்டியம் கூறியிருக்க மெசியாவின் பிறப்பானது உலக மக்களின் வாழ்வியலில் எவ்வாறான மாற்றத்தினை உண்டு பண்ணியது என்பதற்கு திருவிவிலியம் பின்வருமாறு சான்று பகர்கின்றது **“காரிருளில் இருந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள். சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர் மேல் சுடர் ஒளி உதித்துள்ளது ”.(மத்தேயு:4:15)**

இதன் மூலம் இன்னலுற்ற மக்களின் வாழ்வில் இறைமகனின் பிறப்பானது விடியலுக்கான நம்பிக்கை ஒளியை ஏற்படுத்தி இருந்தது என்பதில் ஐயம் ஏதும் இல்லை. அவ்வாறானதொரு சூழ்நிலையில் இருந்தவர்களுக்குத்தான்இறைமகனின் பிறப்பு குறித்த செய்தி மகிழ்ச்சி அளிக்கும் செய்தியாக வழங்கப்பட்டது.

எனவே பலவிதமான தாக்கங்களுக்கு உள்ளாகி வாழ்கின்ற மக்களுக்கு இற்றைக்கு 2000 வருடங்களுக்கு முன்னர் வானதூதரால் மனுக்குலத்திற்கு வழங்கப்பட்ட செய்தியானது மீண்டும் ஒரு நம்பிக்கை ஒளியை வாழ்வில் ஏற்படுத்தி சுபிட்சமான எதிர்காலத்தினை நோக்கி நம்பிக்கையோடு பயணிக்க வழிவகுக்கட்டும்!

திருவருகைக் காலமானது இறைவன் நம்மை விடுவிக்க வந்துவிட்டார், இன்னல்களும் வேதனைகளும் நீங்கி விட்டன, வாழ்வு ஒளி அடையும் என்ற நம்பிக்கையை நம்மிடையே ஏற்படுத்தியுள்ளது. இறைவன் எம் உள்ளங்களில் பிறக்கவும், மற்றவரையும் ஏற்றுக்கொண்டு புரிந்துகொண்டு பிறரை நேசித்து வாழவும் கிறிஸ்து பிறப்பு செய்தி நமக்கு உரமாக அமையட்டும்!

மனுக்குலத்தை மீட்க மண்ணில் மனுஉருவில் அவதரித்த இறைமைந்தனின் பிறப்பு குறித்ததான வானதூதரின் செய்தி அனுதினமும் எங்கள் செவிகளில் ஒலித்து வாழ்வினிலே நம்பிக்கை ஒளி ஏற்றட்டும்!

குழந்தைவேலு சற்குணானந்தன்...✍
அக்கரைப்பற்று

தனது கொள்கையிலிருந்து நழுவாமல் இறுதிவரை மனஉறுதியுடன் வாழ்ந்தவர் ஜோசப் பரராஜசிங்கம்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தோற்றத்தோடுதான் தமிழர் அரசியலில் தமிழ்த் தேசியம் எனும் எண்ணக்கரு உருவாக்கப்பட்டது. தமிழ்ப் பற்றோடு இறுதிவரை தான் கொண்ட கொள்கையிலிருந்து நழுவாது தமிழர்களின் உரிமைக்காக குரலெழுப்பிய மனித உரிமை செயற்பாட்டாளரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான அமரர் ஜோசப் பரராஜசிங்கத்தின் நினைவு தினம் நாளைமறுதினம் 25 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது.

1934.11.26ஆம் திகதி மானிப்பாயில் பிறந்த பரராஜசிங்கம் புனித மிக்கேல் கல்லூரியில் கல்வி கற்ற காலத்திலிருந்து பாடசாலைப் பருவத்திலேயே தமிழ்த் தேசியக் கொள்கையை உள்வாங்கி செயற்படத் தொடங்கினார். அரசியல்வாதியாக ஊடகவியலாளராக, வர்த்தகராக, மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் படவரைஞராக மற்றும் தமிழினத்துக்காக குரல் கொடுப்பவராக அகிம்சை வழியில் செயற்பட்டு வந்த நிலையில், தனது 71 ஆவது வயதில் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார். மறைந்த ஜோசப் பரராஜசிங்கம் தனக்கென வாழாமல் தமிழ் மக்களுக்கென வாழ்ந்தவராவார்.

1986 இல் இடம்பெற்ற மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்றத் தேர்தலில் தந்தை செல்வாவினால் ஆரம்பிக்கப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியில் போட்டியிட்டு 12,470 வாக்குகளைப் பெற்று தோல்வி கண்டார். மீண்டும் 1994 இல் அதேகட்சியில் போட்டியிட்டு 43,350 வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்திற்குத் தெரிவானார். 2000 ஆம் ஆண்டு அதே கட்சியில் போட்டியிட்டு 12,605 வாக்குகள் பெற்று தெரிவாகினார். பின்பு 2001 இல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட்டு 20,279 வாக்குகளைப் பெற்று மீண்டும் தெரிவானார். ஆனால் 2004 இல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஆறு பேர் போட்டியிட்ட நிலையில், அவர் 24,940 வாக்குகள் பெற்றபோதும் துரதிர்ஷ்டவசமாகத் தெரிவாகவில்லை. பின்பு தேசியப் பட்டியல் மூலம் மீண்டும் பாராளுமன்றப் பிரவேசம் கிடைத்தது.

அரசியல் மூலம் மக்கள் பணிசெய்ததோடு உடகவியலாளராகவும் சேவைபுரிந்துள்ளார். 'சுகுணம் ஜோசப்' எனும் பெயரில் பத்தி எழுத்தாளராக பணிபுரிந்ததோடு, கிழக்கிலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவராகவிருந்து இதழியல் சேவையில் இணைந்து இளம் ஊடகர்களை உருவாக்குவதில் அதிக ஆர்வம் காட்டினார்.

தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமைகளுக்காக உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் உரத்துக் குரலெழுப்பிய பரராஜசிங்கம் எம்.பி, மனுக்குலத்தின் மீட்புக்காக புனிதரான இயேசு பிரான் அவதரித்த நத்தார் நன்னாளில் (25.12.2005) மட்டக்களப்பு புளியந்தீவு புனித மரியாள் தேவாலயத்தில் நடைபெற்ற நள்ளிரவு ஆராதனையின் போது சுட்டுக் கொல்லப்பட்டார். அவர் ஆண்டவரோடு ஐக்கியமானார்.

அவருடன் கூடவே இருந்த மனைவி சுகுணம் ஜோசப்பும் துப்பாக்கிக் குண்டுபட்டு குற்றுயிராய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுக் குணமடைந்தபின்னர் புலம்பெயர்ந்து கனடாவில் பிள்ளைகளுடன் வாழ்ந்து வருகின்றார்.

அன்னாரின் 17ஆம் ஆண்டு நினைவு நாளைமறுதினம் அனுஷ்டிப்பு

மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் அருட்கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை தலைமையில் புனித மரியாள் தேவாலயத்தின் பங்குத் தந்தை ஜோர்ஜ் ஜீவராஜ் இணைந்து எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (25) நள்ளிரவு விசேட நத்தார் நள்ளிரவு ஆராதனையை நிகழ்த்துவர். இதன்போது யோசப் பரராஜசிங்கம் மறைந்து 17 ஆவது ஆண்டு நினைவு கூரப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட வாலிபர் முன்னணி ஏற்பாடு செய்துள்ள ஜோசப் பரராஜசிங்கத்தின் நீத்தார் நினைவு தின நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (25) பிற்பகல் 2.30 மணிக்கு புளியந்தீவு சாள்ஸ் மண்டபத்தில் வாலிபர் முன்னணியின் தலைவர் ஆர்.தீபாகரன் தலைமையில் நடைபெறும்.

நினைவுதின நிகழ்வில் நினைவுப் பேருரையாக 'நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தையும் அதிகாரப் பரவலாக்கலும்' எனும் தலைப்பில் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அரசறிவியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஆறுமுகம் யோகராஜாவும், நன்றியுரையை இளைஞர் அணியின் செயலாளர் கணேசமூர்த்தி சசீந்திரனும் நிகழ்த்துவர்.

சிவம் பாக்கியநாதன்...✍
(மட்டக்களப்பு விஷேட நிருபர்)

APIIT பட்டமளிப்பு விழா

இலங்கையின் முதல்தர வெளிநாட்டு உயர்கல்வி வழங்குனரான ஆசியா பசிபிக் தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் (APIIT Sri Lanka) வருடாந்த பட்டமளிப்பு விழா அண்மையில் BMICH பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியை சிறப்பிப்பதற்காக இலங்கை நெஸ்லே நிறுவனத்தின் நிர்வாக இயக்குனரான ஜேசன் அவன்சேனா வருகை தந்ததோடு, ஐக்கிய இராச்சியத்தின் ஸ்டபர்ட்ஷெயர் பல்கலைக்கழகத்தின் (Staffordshire University, UK) துணைவேந்தர் மற்றும் தலைமை நிர்வாகியான பேராசிரியர் மார்டின் ஜோன்ஸ் தனது வாழ்த்துக்களை தெரிவித்திருந்தார்.

பட்டமளிப்பு விழாவின் பிரதம விருந்தினரான நெஸ்லே லங்கா பீ எல் சீ இன் முகாமைத்துவ பணிப்பாளர் ஜேசன் அவன்சேனா மற்றும் APIIT Sri Lanka தலைவர் பந்துல ஏகொடகே.

இப்பட்டமளிப்பு விழாவின் போது 456 மாணவர்களுக்கு ஐக்கிய இராச்சியத்தின் ஸ்டபர்ட்ஷெயர் பல்கலைக்கழகத்தின் வியாபார, தகவல் தொழிநுட்பம் மற்றும் சட்டத் துறைகளில் பட்டம் மற்றும் முதுகலைப் பட்டம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வின் போது மென்பொருள் பொறியியல் (Software Engineering), கணினி நெட்வேர்க் மற்றும் பாதுகாப்பு (Computer Network and Security), கணினி அறிவியல் (Computer Science), சைபர் பாதுகாப்பு (Cyber Security), சர்வதேச வணிக முகாமைத்துவம் (International Business Management) மற்றும் சட்டம் (Law) போன்ற பட்டப்படிப்புகளுக்கான கௌரவ பட்டமளிக்கப்பட்டதோடு, வணிக நிர்வாகம் (MBA), வணிக கணினி அறிவியல் (MSc Computer Science Business Computing), தொழிநுட்ப முகாமைத்துவம் (Msc Technology Management) மற்றும் சர்வதேச வணிக சட்டம்(LLM International Business Law) போன்ற பட்டப்படிப்புகளுக்கான முதுகலைப் பட்டமளிக்கப்பட்டது.

இவ்விழாவில் 80 மாணவர்கள் முதல் வகுப்பு கௌரவ பட்டங்களையும், 154 மாணவர்கள் இரண்டாம் வகுப்பு கௌரவ பட்டங்களையும், 46 மாணவர்கள் அதிசிறந்த முதுகலை பட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இஸ்லாமிய பாரம்பரிய கலைகளின் விபரங்கள் அடங்கிய மூன்று நூல்கள், இறுவட்டு வெளியீடு

கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களமும், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் ஒருங்கிணைந்து ஒழுங்கு செய்த இஸ்லாமிய பாரம்பரிய கலைகளான பொல்லடி, பக்கீர்பைத், கஸீதா ஆகியன தொடர்பான விபரங்கள் கொண்ட மூன்று நூல்களும் ஒரு இறுவட்டும் சென்ற வாரம் ஒரே நாளில் அக்கரைப்பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டன.

அக்கரைபற்று பிரதேச செயலாளர் அஸ்ஷேக் ரீ.எம்.எம்.அன்சார் தலைமையில் மாவட்ட ஒருங்கிணைப்பு கலாசார உத்தியோகஸ்தர் எ.எல் தௌபீக்கின் வரவேற்புரையுடன் ஆரம்பமான இந்நிகழ்வுக்கு அம்பாறை மாவட்ட மேலதிக அராங்க அதிபர் வே. ஜெகதீஸ்வரன், முஸ்லிம் சமய கலாச்சார திணைக்கள முன்னாள் பணிப்பாளரும் மனிதவலு மற்றும் வேலை வாய்ப்பு திணைக்கள மேலதிக பணிப்பாளருமான ஏ..பீ. எம் அஷ்ரப், முஸ்லிம் சமய கலாசார திணைக்கள பிரதிப் பணிப்பாளர் எம்.எல்.எம் அன்வர் அலி,கிழக்கு மாகாண முன்னாள் பண்பாட்டு அலுவல்கள் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினர்.

அதிதிகள் தமது உரையின்போது இந்த பாரிய பொறுப்பு கொரோனா தலைவிரித்தாடிய காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு பொருளாதார நெருக்கடியான ஒரு காலகட்டத்தில் சிறப்பாக பூர்த்தி செய்யப்பட்டமை மிகவும் மிகவும் பாராட்டுக்குரியது என்றும், இந்தப் பணியை தியாக உணர்வோடு மேற்கொண்ட மாவட்ட ஒருங்கிணைப்பு கலாசார உத்தியோகஸ்தர் எ.எல் தௌபீக்கின் முயற்சி குறிப்பிடக்கூடிய விடயமாகும் என்றும் தெரிவித்தனர்.

பொருளாதார தடங்கல்கள் ஒன்றையுமே பொருட்படுத்தாது துணிந்து நின்று இப்பணியை பூர்த்தி செய்தமை ஒரு வரலாற்றுச் சாதனையாகும் என்றும் புகழாரம் சூட்டினர்.

இஸ்லாமிய பாரம்பாரிய நூல்களான பொல்லடி, கஸீதா, பக்கீர் பைத் ஆகிய நூல்களே வெளியீடு செய்து வைக்கப்பட்டன. பொல்லடி நூலின் ஆசிரியர்களான சிராஜ் மசூர் மற்றும் எம். ஐ நைசார் ஆகியோரும் 'கஸீதா' நூலை ஆக்கிய அஷ்ரப் சிஹாப்தீன் மற்றும் பக்கீர்பைத் பாரம்பரியம் நூலாசிரியர் எஸ் ஏ.எம். நளீம் ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்த்தினர்.

நூல்கள் பற்றிய ஆய்வு விமர்சன உரைகளை முறையே பேராசிரியர் எஸ்.எம் பைசல் அய்யூப், எம்.ஏய்.நப்ளா மற்றும் விரிவுரையாளர் எ.எம்.அப்துல் ரசாக் ஆகியோர் நிகழ்த்தினர். ஆவணப்படமும் காட்சிப்படுத்தப்பட்டது.

வரவேற்பு கீதத்தை அஸீஸ் சம்பேர்க் இசைத்தார். இந்நிகழ்வில் டொக்டர் எம்.எ.முபாரிசின் கஸீதா பாடலும் எஸ்.நிஜாமுதீன் பாவா, ரீ பதுர்தீன் பாவாமார்களின் பாடலும், பாவாமார்களின் பக்கீர் பைத். கசீதா பாடல்களும், இஸ்லாமிய கீதங்கள் மற்றும் புதிய பழைய பாடல்கள், சிறப்பு நிகழ்வாக அரங்கேற்றப்பட்டன.

வைபவ இறுதியில் இந்த வைபவத்தில் கலந்து கொண்ட அனைத்து ஆய்வாளர்கள்,எழுத்தாளர்கள், கவிஞர்கள் மற்றும் இசைப்பிரியர்கள் அனைவருக்கும் இந்த பாரம்பாரிய நூல்கள் இலவசமாக வழங்கி வைக்கப்பட்டன. சமூக அபிவிருத்தி உத்தியோகஸ்தர் எம்.எஸ்.ஜௌபர் நன்றியுரை வழங்கினார்.

கலாபூஷணம் **எம்.ஏ.பகுர்டீன்...✍**
(அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)

இலங்கை பொலிஸுக்கு...

மக்கள் பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்றது. இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே உத்தியோகபூர்வமாக மேற்படி ஜீப் வண்டிகளுக்கான ஆவணங்களைக் அமைச்சரிடம் கையளித்தார். இந்த நிகழ்வில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எஸ். ஹெட்டியாரச்சி, பொலிஸ் மாஅதிபர் சீ.டீ. விக்கிரமரட்ண உட்பட துறைசார்ந்த முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

தமிழகத்தில் கைதான 09 பேரை...

விரைவில் குறித்த குழுவை இந்தியாவுக்கு அனுப்பி அது தொடர்பான விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை மற்றும் இந்தியாவில் சட்டவிரோத போதைப்பொருள் மற்றும் ஆயுத வர்த்தகம் தொடர்பில், தமிழகம், திருச்சியில் உள்ள சிறப்பு முகாமில் இருந்து ஒன்பது இலங்கையர்களை இந்தியாவின் தேசிய புலனாய்வு அமைப்பு, கடந்த திங்கட்கிழமை மீண்டும் கைது செய்தது. பிரேம் குமார் எனப்படும் குணா என்ற சி.குணசேகரன், பூக்குட்டி கண்ணா என்ற புஷ்பராஜா, மொஹமட் அஸ்மின், அழகப்பெரும சுனில் காமினி பொன்சேகா, ஸ்டான்லி கென்னடி பெர்னாண்டோ, லடியா, தனுக்க ரொஷான், வெல்ல சுரங்க என்ற கமகே சுரங்க பிரதீப், திலீபன் ஆகியோரே கைது செய்யப்பட்டிருந்தனர்.

வெளிநாட்டு வருமானத்தை ஈட்ட...

வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்களின் தலைவர்கள் மற்றும் சுற்றுலாத்துறை பங்குதாரர்களுடனான சந்திப்பு நேற்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியின் தலைமையில் நடைபெற்றது.இதன்போது அமைச்சர் அலிசப்ரி இவ்வாறு தெரிவித்தார். இலங்கையின் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கான விளம்பரப் பிரசாரங்கள் தொடர்பில் கலந்துரையாடலில் கவனம் செலுத்தியதாக அமைச்சர் சப்ரி ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

அதிக விலைக்கு முட்டைகளை...

49 முதல் 50 ரூபாவுக்கு இடைப்பட்ட விலைகளில் முட்டையை விநியோகிக்குமாறு உற்பத்தியாளர்களிடம் கோரப்பட்டுள்ளது.

எனவே, அதிகூடிய விலைக்கு முட்டையை கொள்வனவு செய்ய வேண்டாம் என அகில இலங்கை கோழி இறைச்சி வர்த்தகர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர வலியுறுத்தியுள்ளார்.

இந்தியாவில் மீண்டும்...

வெளியாகியுள்ளன. சீனா, ஜப்பான், உள்ளிட்ட நாடுகளில் புதிய வகை கொரோனா தொற்று வேகமாக பரவி வருகிறது. இந்நிலையில் இந்தியாவிலும் கொரோனா பரவலாம் என்கிற அச்சம் எழுந்துள்ளது. இதனையடுத்து நேற்று முன்தினம் இந்திய சுகாதாரத் துறை அமைச்சர் மண்சுக் மாண்டவியா கொரோனா தொற்று குறித்து உயர் மட்ட ஆலோசனை நடத்தினார். இந்த ஆலோசனை கூட்டத்தில் மூத்த அதிகாரிகள், தொற்று நோய் வல்லுநர்கள், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். அதன் பின்னர் உரையாற்றிய நிதி ஆயோக் உறுப்பினரான டாக்டர் போல், அனைவரும் கூட்டம் அதிகம் உள்ள இடங்களில் முகக் கவசம் அணிய வேண்டும் என்று தெரிவித்திருந்தார். இந்த நிலையில் நேற்று பிரதமர் நரேந்திர மோடி முக்கிய ஆலோசனை மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டது.

சாரதிகளை கண்காணிக்க...

எதிர்வரும் நாட்களில் அந்த உபகரணங்களை பயன்படுத்தி சோதனைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பொலிஸ் மா அதிபரின் பணிப்புரையின் பேரில் போதையில் வாகனம் செலுத்தும் நபர்களை கைது செய்வதற்கும் அவர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக அமுல்படுத்துவதற்கும் சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. நாளாந்தம் வாகன விபத்துக்களில் சுமார் 8 பேர் உயிரிழப்பதாகவும் மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் 4 அல்லது 5 பேர் உயிரிழப்பதாகவும் பொலிஸ் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது. பெரும்பாலான விபத்துக்கள் போதையில் வாகனம் ஓட்டுவதால் ஏற்படுவதாகவும், அதைக் குறைக்கும் வகையில் இந்த நவீன தொழில்நுட்பக் கருவிகளைக் கொண்டு சோதனைகள் தொடங்கப்படுவதாகவும் பொலிஸ் போக்குவரத்து பிரிவு தெரிவித்துள்ளது.

யாழ். நோக்கி பயணித்த...

விபத்து இடம்பெற்றுள்ளது. இவ்விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன், பேருந்தில் பயணித்த மேலும் 15 பேர் படுகாயமடைந்துள்ளனர்.இவர்களில் இரண்டு சிறுவர்களும் அடங்குகின்றனர். காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

இச்சம்பவத்தின் போது உயிரிழந்த பெண் ஒருவரின் சடலம் கிளிநொச்சி வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டது.

பேருந்து சாரதி கைது செய்யப்பட்டதுடன் பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

திங்கட்கிழமையன்று...

உள்நாட்டலுவல்கள் அமைச்சரான பிரதமர் தினேஸ் குணவர்தன இதனைத் தெரிவித்துள்ளார். ஞாயிற்றுக்கிழமை 25ஆம் திகதி கிறிஸ்மஸ் தினம் கொண்டாடப்படுவதால் மறுநாள் விசேட அரச விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலா பயணிகளை கவர...

போது போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் நுவரெலிய மாவட்டத்தின் சுற்றுலாத்துறையின் அபிவிருத்திக்காக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டது.

World's End உலக முடிவை பார்வையிட சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் வருகின்றனர். எனவே நுவரெலியா மாவட்டத்தின் பட்டிபொல தொடக்கம் பொரலந்த வரையான கேபிள் கார் வேலைத் திட்டத்தை ஆரம்பிக்குமாறே ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இதன் போது பணிப்புரை விடுத்தார்.

நுவரெலிய மாவட்டத்தின் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கு விசேட வேலைத்திட்டங்கள் அவசியமென குறிப்பிட்ட ஜனாதிபதி, எனினும் சுற்றாடலைப் பாதிக்கும் வகையில் எதையும் இங்கு முன்னெடுக்கக்கூடாதென்றும் தெரிவித்தார்.

இலங்கையிலுள்ள மிக உயர்ந்த இடத்திலேயே ஹோட்டன் சமவெளி உள்ளது. எனவே இதற்கு பாதிப்பு ஏற்படக் கூடிய வகையில் எவ்வித செயற்பாடுகளையும் முன்னெடுத்தல் ஆகாது.

ஹோட்டன் சமவெளியை பாதுகாப்பதற்காக நாம் புதிய சட்டங்களை கொண்டுவர எதிர்பார்க்கின்றோமென்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

போதைப்பொருள் பாவனை...

இதேவேளை நாட்டில் போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டமை, தொடர்பில், 2022 ஜனவரி முதல் அக்டோபர் வரையிலான காலப்பகுதியில் 67,900 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெறுமனே குறைகூறும்,... (03ஆம் பக்கத் தொடர்)

கஷ்டத்துக்கு மத்தியில் வாழ்வது புரிகின்றது. எனினும், தற்போதைய இக்கட்டாய சூழ்நிலையை கடக்க வேண்டும். 2023 ஆம் ஆண்டில் மக்களுக்கு நிவாரணங்களை வழங்க எதிர்பார்க்கின்றோமெனவும் ஜனாதிபதி தெரிவித்தார். "நுவரெலியா மாவட்டம் உணவுப் பொருட்கள் உற்பத்தி செய்யும் பிரதேசமாகும். அதேபோல அந்நிய செலாவணியும் ஈட்டுகின்றது. இப்பிரதேசத்தில் போஷாக்கின்மை பிரச்சினையும் இருக்கின்றது. அதற்கு தீர்வு காண வேண்டியது அவசியம். கடந்த மே மாதம் அளவில் உரப்பற்றாக்குறை இருந்தாலும் தற்போது நிலைமை சீராக்கப்பட்டுள்ளது.

நாம் தற்போது உணவு நெருக்கடியை எதிர்கொண்டிருந்தாலும் ரஷ்ய உக்ரைன் யுத்தத்தால் அடுத்தவருடம் உலகளவில் உணவு நெருக்கடி ஏற்படலாம். எனவே, எமது உணவு பாதுகாப்பு வேலைத்திட்டத்தை தொடர வேண்டும். ரஷ்யா உக்ரைன் பிரச்சினை தீர்ந்தால் அத்திட்டத்தை முடிவுக்கு கொண்டுவரலாம். இல்லையேல் தொடர வேண்டும். பணவீக்கத்தால் மக்கள் கஷ்டத்துக்கு மத்தியிலேயே வாழ்கின்றனர். நாம் மக்கள் படும் துன்பத்தை மறக்கவில்லை. அடுத்த வரும் நிவாரணங்களை வழங்க எதிர்பார்க்கின்றோம். உணவு பாதுகாப்பு வேலைத்திட்டத்தை அரசியலுக்கு அப்பால் கொண்டு செய்ய வேண்டும். நாட்டின் பொருளாதாரத்தை மீட்பதற்கு ஒருமித்த கருத்துக்கு அனைவரும் வரவேண்டும். இதைவிட மாற்றுவழி இல்லை. நான் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட பிறகு அரசியல் செய்தது இல்லை. அனைவரையும் அழைத்து பேச்சு நடத்தினேன். ஒத்துழைப்பு கோரினேன். ஆனால் சிலர் பழைய முறையிலேயே அரசியல் நடத்த முற்படுகின்றனர். விமர்சனங்களை மட்டும் முன்வைக்கின்றனர். உரிய வேலைத்திட்டங்களின்றி, விமர்சிப்பதில் பயனில்லை" என்றார்.

இந்தியா, சீனாவின் இருதரப்பு... (03ஆம் பக்கத் தொடர்)

அதிகமான வருமானம் பெறப்பட்டுள்ளது. இக்காலத்தில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு மூலமான வருமானம் மூன்று பில்லியன் வரை அதிகரித்துள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியுடனான கலந்துரையாடல்...

கூட்டமைப்பின் தலைவர்களுக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் அதற்கான இணக்கப்பாட்டை ஜனாதிபதி தெரிவித்துள்ளதாகவும் சுமந்திரன் எம்.பி தெரிவித்துள்ளார்.

தேசிய நல்லிணக்கத்தின் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக பொது இணக்கப்பாடொன்றை எட்டும்நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கடந்த 14 ஆம் திகதி சர்வகட்சி மாநாடொன்றை நடத்தினார்.

அந்த சர்வகட்சி மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தும் முறைமை தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தும் வகையிலேயே ஜனாதிபதிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்குமிடையில் மேலுமொரு பேச்சுவார்த்தை நேற்று முன்தினமிரவு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

அந்தப் பேச்சுவார்த்தையையடுத்து கருத்துத் தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன், அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், இப் பேச்சுவார்த்தையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் பிரதமர் தினேஷ் குணவர்தன, நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி மற்றும் சட்ட மாஅதிபரும் கலந்துகொண்டுள்ளனர். எமது தரப்பில் நானும் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும் கலந்துகொண்டோம். அத்துடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் இப்பேச்சுவார்த்தையில் பங்கேற்றிருந்தார்.

இங்கு அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. தெரிவுசெய்யப்பட்ட ஐந்து பேரை விரைவில் விடுதலைசெய்ய முடியும். ஏனையவர்களை விடுதலை செய்வது தொடர்பில் சட்ட மாஅதிபரின் ஆலோசனையை பெற்றுக்கொள்ள வேண்டுமென தெரிவிக்கப்பட்டதுடன் அதனை எவ்வாறு மேற்கொள்வது என்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

வடக்கில் பொதுமக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. இராணுவத்தினரோடு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதுடன் ஜனவரி 03 ஆம் திகதி தேசிய பாதுகாப்புச் சபையில் அதுதொடர்பில் பரிந்துரை செய்யப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டது. ஏனைய காணிகள் தொடர்பிலும் நாம் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள வேண்டுமென நாம் எமது தீர்மானத்தில் தெரிவித்தோம். அதற்கிணங்க எதிர்வரும் ஜனவரி ஐந்தாம் திகதி மீண்டும் நாம் கூடி அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்த தீர்மானித்துள்ளோமென்றும் அவர் தெரிவித்தார்.

இந்த பேச்சுவார்த்தை சாத்தியமானதாக அமைந்ததா என அவரிடம் எழுப்பியுள்ள கேள்விக்கு அவர் பதிலளிக்கையில், 'பேச்சுவார்த்தை சாத்தியம்தான் ஆனால் எதுவும் இதுவரை நடைபெறவில்லை. அவை நடைமுறைப்படுத்தப்படும்போது தான் சாத்தியமானதா என்பது தொடர்பில் குறிப்பிடமுடியும். எவ்வாறெனினும் பேச்சுவார்த்தையில் எந்த சிக்கலும் இருக்கவில்லை' என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மக்கள் சேவையில் எந்தவித...

நுவரெலிய மாவட்டச் செயலக அலுவலகத்தில் நேற்று (22) முற்பகல் நடைபெற்ற நுவரெலிய மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நுவரெலிய மாவட்டத்தின் காணிப் பிரச்சினையை தீர்ப்பது தொடர்பில் அனைத்து அரச நிறுவனங்களும் ஒன்றிணைந்து தயாரிக்கும் அறிக்கையை பெப்ரவரி 04 ஆம் திகதிக்கு முன்னர் தனக்கு கிடைக்கச் செய்யுமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்த ஜனாதிபதி, அந்த அறிக்கையை சமர்பிக்கத் தவறினால் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கமைய நடவடிக்கை எடுக்க நேரிடுமென்றும் குறிப்பிட்டார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க,

நுவரெலிய மக்களின் காணிப் பிரச்சினைக்கு துரித தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். இம்மாவட்டத்திலுள்ள அரசுக்கு சொந்தமான காணி தொடர்பில் மாவட்டச் செயலக அலுவலகம், பெருந்தோட்ட அமைச்சு மற்றும் காணிப் பதிவுத் திணைக்களம் ஆகியன ஒன்றிணைந்து அறிக்கை ஒன்றைத் தயாரித்து எதிர்வரும் ஒரு மாதக் காலப்பகுதிக்குள் அதனை சமர்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து காணிகளுக்குமான அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்து மக்களுக்கு அவசியமான காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இந்தப் பணிகளை எதிர்வரும் பெப்ரவரி 04 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்ய எதிர்பார்க்கின்றோம்.

அதுபோன்றே, தோட்டங்களுக்கு அண்மையிலுள்ள சுகாதார மத்திய நிலையங்களுக்கு தேவையான வசதிகள் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். அரச உத்தியோகத்தர்கள் மட்டத்தில் தீர்த்து வைக்கப்படக் கூடிய பிரச்சினைகளை முதலில் தீர்க்க வேண்டும். அடுத்த மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்துக்கு முன்னர் மாவட்டத்திலுள்ள பிரச்சினைகள் தொடர்பில் அறிக்கையொன்றை தயார் செய்ய வேண்டும். அப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளுடனேயே அதிகாரிகள் மாவட்ட குழுக்கூட்டத்தில் பங்கெடுக்க வேண்டும். இல்லையேல் அரச அதிகாரிகளால் தீர்வு வழங்கக்கூடிய வேலைகளையே ஜனாதிபதியாகிய எனக்கு இங்கு வந்து செய்ய வேண்டியிருக்கும்.

அரச அதிகாரியென்ற வகையில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பிரச்சினைக்குரிய தீர்வாக மக்கள் மீது வழக்கு பதிய வேண்டுமென்று இங்கே வந்து கூற வேண்டாம். அதேபோன்று மக்களுக்கும் சுற்றுச்சூழலுக்கும் பாதிப்பு ஏற்படுத்தும் எதையும் அரச அதிகாரிகள் முன்னெடுக்கக் கூடாது.

இன்று இங்கு கலந்துரையாடப்பட்ட பிரச்சினைகளின் 50 சதவீதமானவை அதிகாரிகள் மட்டத்தினால் தீர்த்து வைக்கப்படக் கூடியவை. எனினும் அரச உத்தியோகத்தர்களாகிய நீங்கள் உக்ரேன், ரஷ்யா நாடுகளுக்கிடையிலான யுத்தத்தைப் போன்று தான் பணியாற்றுகிறீர்கள். இதுபோன்ற சிறிய பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக ஜனாதிபதி மட்டுமல்ல அமைச்சர் ஒருவர்கூட கொழும்பிலிருந்து செலவு செய்து இங்கு வர வேண்டிய அவசியம் இல்லை. எனவே அரச அதிகாரிகள் இழுத்தடிப்புச் செய்யாமல் தமக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களை முறையாக நிறைவேற்ற வேண்டியது கட்டயமாகும்.

அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, மஹிந்த அமரவீர, பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.பி திசாநாயக்க, சி.பி ரத்நாயக்க, பழனி திகாம்பரம், ஜீவன் தொண்டமான், வி.இராதாகிருஷ்ணன், உதய குமார், எம்.ரமேஷ்வரன், நிமல் பியதிஸ்ஸ, ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, முன்னாள் அமைச்சர் நவீன் திசாநாயக்க, மத்திய மாகாண ஆளுநர் லலித் யு.கமகே உள்ளிட்ட பலர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

தரமான உள்ளூர் டின்மீன்களை...

பெற்றுக் கொடுப்பதாகவும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த ஆகியோர் உறுதியளித்துள்ளனர்.

டின்மீன் கைத்தொழிலுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த ஆகியோருடன் விஜித்த ஹேரத் மற்றும் திலீப் வெத ஆராய்ச்சி ஆகியோர் கலந்துரையாடல் நடத்தினர்.

இதன்போதே அமைச்சர்கள் இவ்வாறு உறுதியளித்துள்ளனர்.

உள்ளூர் டின்மீன் கைத்தொழிலுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் மற்றும் உள்ளூர் டின்மீன் பாவனையாளர்களிடம் பாவனையை அதிகப்படுத்தும் நோக்கத்துக்காகவும் டின்மீன் கைத்தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தீர்ப்பது தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

தற்போது இலங்கை டின்மீன் கைத்தொழில் ஈடுபடும் கைத்தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் கருத்து தெரிவிக்கையில் நாட்டில் 22 டின் மீன் உற்பத்தி தொழிற்சாலைகள் காணப்படுவதாகவும் அதில் 12 மாத்திரமே சரியான தரத்தில், எஸ்.எல்.எஸ் தர டின்மீன் விற்பனையில் ஈடுபடுவதாகவும் தெரிவித்தனர்.

மேலும் 04 தொழிற்சாலைகள் தர சான்றிதழ் பெறும் எதிர்பார்ப்புடன் உள்ளதாகவும் அத்துடன் ஆறு கைத்தொழிற்சாலைகள் தரமின்றி சந்தைக்கு டின்மீன்களை விற்பனை செய்வதாகவும் தெரிவித்தனர். இதன் காரணமாக பாவனையாளர்களிடம் உள்ளூர் டின் மீன்களுக்கான கேள்வி வீழ்ச்சி அடைந்துள்ளதோடு அதற்காக சரியான திட்டம் ஒன்றை தயாரிக்க வேண்டும் எனவும் தெரிவித்தனர். மேலும் வெளிநாடுகளில் இருந்து டின்மீனை இறக்குமதி செய்வதால் உள்ளூர் கைத்தொழில் வீழ்ச்சி அடைகின்றது. அதற்காக கடற்றொழில் அமைச்சு திட்டங்களை தயாரிக்க வேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இங்கு கருத்து தெரிவித்த கடத்தொழில் அமைச்சர் தற்போது நாட்டில் காணப்படும் மீனின் விலைக்கு இணைந்ததாக உள்ளூர் டின்மீன் பாவனையை பாவனையாளரிடம் பிரபலப்படுத்துவதே தமது நோக்கம் என தெரிவித்தார். அதற்காக தற்போது காணப்படும் பிரச்சனைகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்காக கடற்றொழில் அமைச்சை சேர்ந்த நிறுவனங்களின் அதிகாரிகள் போன்று தர நிர்ணய சபை, சுங்கம் போன்ற குறிப்பிட்ட நிறுவன அதிகாரிகளையும் அழைத்துள்ளதாகவும், டின்மீன் கைத்தொழிலை மேற்கொள்ளும் போது கைத்தொழிலாளர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை முன்வைக்கக்கூடியதோடு அதற்காக விரைவில் தீர்வுகளையும் பெற்றுக் கொடுப்பதே இந்த கலந்துரையாடலில் நோக்கம் எனவும் தெரிவித்தார்.

104 மியன்மார் அகதிகள்...

மிரிஹான தடுப்பு முகாமுக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்த 104 ரோஹிங்கிய அகதிகள் மூன்று பேருந்துகள் மூலம் நேற்றைய தினம் வியாழக்கிழமை காலை 06 மணியளவில் மிரிஹான தடுப்பு முகாமுக்கு அழைத்து செல்லப்பட்டனர்.

மியன்மாரில் இருந்து விரட்டப்பட்டு பங்களாதேசில் அகதி முகாமில் தங்கியிருந்த ரோஹிங்கிய இன முஸ்லீம்கள், அங்கிருந்து இந்தோனேசியாவிற்கு தப்பிச் செல்லும் நோக்கில் படகு மூலம் சட்ட விரோத கடல்பயணத்தை மேற்கொண்டனர். இதன்போதே கடந்த வாரம் யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு கடற்பகுதியில் படகு பழுதடைந்து தத்தளித்தனர்.

இவ்வாறு தத்தளித்தவர்கள் கடந்த 17ம் திகதி இலங்கை கடற்படையினரால் காப்பாற்றப்பட்டு மறுநாள் 18ம் திகதி கடற்படையினரின் படகு மூலம் காங்கேசன்துறை கடற்படை முகாமிற்கு கொண்டு வரப்பட்டு மருத்துவ பரிசோதனைகளின் பின்னர் அங்கு தங்க வைக்கப்பட்டனர்.

சட்ட விரோதமான கடற்பயணத்தின்போது இலங்கை கடற்பரப்பில் மீட்கப்பட்ட 104 பேர் மற்றும் அவர்களை வழிநடத்த முற்பட்ட வலையமைப்புக்கு உதவிய ஒருவருக்கும் எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் காங்கேசன்துறை பொலிஸார் வழக்கு தாக்கல் செய்தனர்.

இந்நிலையில் கடந்த 19ஆம் திகதி 105 பேரும் தடுத்து வைக்கப்பட்ட இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட மல்லாகம் நீதிமன்ற நீதிவான் காயத்திரி சைலவன்,104 பேரையும் அகதிகளுக்கான ஐ.நா ஆணையகம் பொறுப்பேற்பதாயின் குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் அனுமதி பெற உத்தரவிட்டதுடன் அகதிகள் அனைவரையும் மிரிஹான தடுப்பு முகாமில் தங்க வைக்க உத்தரவிட்டார்.அத்துடன், நாடொன்றுக்கு 104 பேரையும் கடத்த முயற்சித்தவரை எதிர்வரும் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கவும் உத்தரவிட்டார்.

அதனை அடுத்து கடந்த 19ம் திகதி இரவு 8 மணியளவில் 105 பேரும் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டனர்.

இந்நிலையில் 105 பேரில் விளக்கமறியல் கைதியான ஒருவரை, யாழ்ப்பாண சிறைச்சாலையில் தொடர்ந்து தடுத்து வைத்துள்ளதுடன் ஏனைய 104 பேரும் மிரிஹானைக்கு அழைத்து செல்லப்பட்டனர்.

மன்னாரில் கைவிடப்பட்டுள்ள...

பணிப்பாளர் அலுவலகம் முன்னெடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

வெளி மாவட்டங்களிலிருந்து மன்னார் பகுதிக்கு வருவோருக்காகவும் மற்றும் மன்னார் மாவட்ட மக்கள் பாரம்பரிய உணவு வகைகளை உண்டு மகிழவும் 2018 ஆம் ஆண்டு முருங்கன் பிரதான வீதியில் பாரம்பரிய உணவகமான அம்மாச்சி உணவகம் விவசாய திணைக்களத்தால் திறந்துவைக்கப்பட்டிருந்தது.

ஆனால் கொவிட் தொற்று நோய் காலப்பகுதியில் இவ் அம்மாச்சி உணவகம் மூடப்பட்டபின் எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக இவ் உணவகம் தொடர்ந்து மூடப்பட்டு வந்தது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளிடம் வினவியபோது தற்போதைய சூழ்நிலையை கருத்தில் கொண்டு முருங்கன் பகுதி அம்மாச்சி உணவகம் மீண்டும் புதுப் பொலிவுடன் பாரம்பரிய உணவகமாக இயங்க உள்ளது எனவும் அம்மாச்சி உணவகத்துடன் இணைந்து பயணிப்பதற்கு சமையல் மற்றும் வியாபாரம் செய்வதில் ஆர்வம் உள்ள அமைப்புகளைச் சார்ந்தவர்களும் மற்றும் தனிப்பட்ட பெண்களிடமும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆர்வமுள்ளோர் முருங்கன் விவசாய போதனாசிரியர் அலுவலகம் 0772911198 , 0765459436 பிரதிமா காண விவசாய பணிப்பாளர் அலுவலகம் உயிலங்குளம் 0776614703 , 0776640526 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளும்படியும் வேண்டப்பட்டுள்ளனர்.

சீனாவில் பரவும் கொவிட்...

ஆயிரம் கொவிட் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. சீன சுகாதார துறையினர் நடைமுறைப்படுத்தியிருந்த சுகாதார கட்டுப்பாடுகளை தளர்த்த அந்நாட்டு அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததை அடுத்து அங்கு கொவிட் வைரஸ் பரவல் மோசமாகியுள்ளது. சுகாதார கட்டுப்பாடுகள் தொடர்பில் மக்கள் அரசுக்கு எதிர்ப்புகளை வெளியிட்டதன் காரணமாக சீன அரசு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை தளர்த்தியது. சீனாவில் தற்போது பரவி வரும் ஒமிக்ரோன் பீ.எஃப்.7 உப திரிபு இதற்கு முன்னர் கடந்த ஆகஸ்ட் மாத்தில் அமெரிக்காவில் மாத்திரமல்லாது ஐரோப்பிய நாடுகளிலும் அடையாளம் காணப்பட்டது.எனினும் அந்நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட வெற்றிகரமான தடுப்பூசி வழங்கல் காரணமாக வைரஸ் பரவல் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. சீன மக்களுக்கு சரியான முறையில் தடுப்பூசிகள் வழங்கப்படாததே சீனாவில் கொவிட் வைரஸ் பரவல் அதிகரித்திருப்பதற்கு காரணம் என உலக சுகாதார அமைப்பு கூறியுள்ளது. சீனாவில் தயாரிக்கப்பட்ட கொவிட் தடுப்பூசிகள் மாத்திரமே சீன மக்களுக்கு வழங்கப்பட்டன. மேற்குலக நாடுகளின் தடுப்பூசிகளை சீன ஏற்க மறுத்தது. இந்த நிலையில், தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகளை வெற்றிகரமாக மேற்கொண்டு வைரஸ் பரவலை கட்டுப்படுத்துமாறு உலக சுகாதார அமைப்பின் பணிப்பாளர் சீன அரசாங்கத்தை கேட்டுக்கொண்டுள்ளார்.

இலங்கைக்கு இந்திய தமிழர்...

முற்போக்கு கூட்டணி வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். மனோ எம்பி இதுபற்றி மேலும் கூறியுள்ளதாவது,

இலங்கை இந்திய மலையக தமிழர், இலங்கைக்கு வந்த 1823ம் ஆண்டிலிருந்து கடந்த 200 வருடங்களாக இலங்கையின் தேசிய பொருளாதாரத்துக்கு வழங்கி வரும் பங்களிப்பை ஆய்வு செய்து அங்கீகரிக்க, அமைச்சரவை பத்திரம் மூலம் இலங்கை அரசு அதிகாரபூர்வமாக தீர்மானித்துள்ளமையை நாம் வரவேற்கின்றோம். அதேவேளை இந்திய வம்சாவளி மலையக தமிழர் ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் இந்நாட்டில் மிகவும் பின்தங்கிய பிரிவினராக, வறுமை, உணவின்மை, காணியுரிமை இன்மை, வீட்டுரிமை இன்மை, கல்வியுரிமை இன்மைஆகிய கொடுமைகளை எதிர்கொண்டு, இலங்கை தேசிய தளத்தில் முழுமையான பிரஜைகளாக இல்லாமல், பெருந்தோட்டங்களிலும், தொழில் தேடி மாநகரங்களிலும், வாழ்கிறார்கள்.

இந்த மக்களின் பின்தங்கிய குறைவளர்ச்சியை ஆய்வு செய்து அவர்கள் இதுவரை காலமும் இழந்த வளர்ச்சிகளை எட்டிபிடிக்கும் நோக்கில், அரசியலமைப்பு ஏற்றுக்கொண்டுள்ள, மீளுறுதி (affirmative action) நடவடிக்கைகளை அரசாங்கம் எதிர்வரும் 200வது ஆண்டு முதல் முன்னெடுக்க ஆரம்பிக்க வேண்டும் என நாம் அரசாங்கத்தை கோருகிறோம், என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் போலி நாணயத்தாள்...

விசேட க

புலம்பெயர் தொழிலாளர்கள் மீது கவனம் செலுத்த வேண்டுகோள்

சுவாட் அமைப்பு

அக்கரைப்பற்று மத்திய நிருபர்

புலம்பெயர் தொழிலாளர்களையும் அவர்களின் குடும்பத்தையும் பாதுகாப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு, அம்பாறை மாவட்ட சமூக நல்வாழ்வு (சுவாட்) அமைப்பின் தவிசாளர் வீ.பரமசிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அக்கரைப்பற்றில் நேற்று (22) 'கொவிட் 19க்கு பிந்திய காலத்தில் புலம்பெயர் தொழிலாளர்களின் சமூக நீதி மற்றும் ஊதியத் திருட்டை நிவர்த்தி செய்தல்' தொடர்பான ஊடக வியலாளர் சந்திப்பொன்றை, அம்பாரை மாவட்ட சமூக நல்வாழ்வு அமைப்பு நடத்தியது. இதன்போதே அவர் இவ்வேண்டுகோளை முன்வைத்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்த போது, "புலம்பெயர் தொழிலாளர்கள் அண்மைக்காலமாகவிருந்து மிகவும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். புலம்பெயர் தொழிலாளர்களின் மூலம் எமது நாடு பாரிய அந்நியச் செலாவணியை பெற்றுக் கொள்கின்றது.

இருந்த போதிலும், இத்தொழிலாளர்களின் சேமநலன்களில் முதலாளிமாரும் முகவர்களும் எவ்வித கவனமும் செலுத்துவதில்லை.

மாறாக, வெளிநாட்டுக்குச் செல்லும் ஆசையை அவர்களுக்குக் காட்டி, வெளிநாடுகளுக்கு அழைத்துச் சென்று ஒப்பந்தத்தில் கூறியபடி வேலை, சம்பளம், வேலை நேரம், தங்குமிடம் என்று பலவற்றிலும் கவனம் செலுத்தப்படாது கைவிடப்படுகின்றனர்.

அவர்களிடம் இருப்பவற்றை இழந்து வெளிநாடுகளில் உழைக்கும் நோக்கில் செல்லும் இத்தொழிலாளர்கள் மாத்திரமன்றி, அவர்களின் குடும்பங்களும் பாதிப்படைகின்றனர்.

ஒரு புலம்பெயர் தொழிலாளர் பாதிக்கப்படும் போது, உடனடியாக அவர்களுக்கு நியாயமான முறையில் தீர்வு பெற்றுக் கொடுக்கக் கூடிய திட்டம் இருந்தும், அது கவனிக்கப்படுவதில்லை. இவ்வாறான பிரச்சினை ஆரம்பக்காலம் முதல் இருந்து வந்தாலும், கொவிட் 19 நிலைமைக்கு பின்னர் மிகக் கூடுதலாகத் தலைதூக்கியுள்ளது.

எனவே, புலம்பெயர் தொழிலாளர்கள் வெளிநாடுகளில் எதிர்நோக்கும் பாதிப்புகளுக்கு தகுந்த இழப்பீடுகளையும் தற்போதைய காலத்தில் புலம்பெயர் தொழிலாளர்கள் சந்தித்து வரும் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கமும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்களும் முன்வர வேண்டும்" என்றார்.

மழைக்காலத்தில் பொதுமக்கள் அவதானம் பேணுதல் அவசியம்

அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம்

பெரியநீலாவணை விசேட நிருபர்

அம்பாறை மாவட்டத்தில் கடந்து மூன்று தினங்கள் தொடர்ந்து அடை மழை பெய்து வருவதால், பொதுமக்களை அவதானத்துடன் நடக்குமாறும் மழைக்காலத்தில் கூட்டம் கூட்டமாக வெளியிடங்களுக்குச் செல்வதை தவிர்த்துக் கொள்ளுமாறும், அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் கேட்டுக்கொண்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் பெய்து வரும் அடை மழை காரணமாக பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தின் ஒலுவில், நிந்தவூர், காரைதீவு, நாவிதன்வெளி, நற்பிட்டிமுனை, பாண்டிருப்பு, பெரியநீலாவணை, துறைவந்தியமேடு போன்ற தாழ்நிலப் பிரதேசங்களில் காணப்படும் நீர்த்தேக்கங்களில் நீர் மட்டம் உயர்ந்து காணப்படுகின்றது. இம்மழையைத் தொடர்ந்து மீன்பிடித் தொழில் நடவடிக்கைகளுக்காக தாம் கடலுக்குச் செல்லவில்லையென, அம்பாறை மாவட்ட மீனவர்கள் தெரிவித்தனர்.

அக்குறானை பாலம் கூடிய விரைவில் நிர்மாணிக்கப்படும்

இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன்

துறைநீலாவணை நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆதிக்குடிகள் வாழ்ந்து வந்த மிகப் பழைய கிராமங்களான அக்குறானை, முறுத்தானை, பள்ளத்துச்சேனை, வடமுனை ஆகிய எல்லைப்புறக் கிராமங்களை கோறளைப்பற்று நகர்ப்புறத்துடன் இணைப்புச் செய்யும் அக்குறானை பாலத்துக்கான நிர்மாண வேலை மிக விரைவில் முன்னெடுக்கப்படவுள்ளதாக, இராஜாங்க அமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

மேற்படி எல்லைப்புறக் கிராமங்களுக்கு பாடசாலைக் கல்வி வசதிகள் உள்ளிட்ட அரசாங்கச் சேவைகள் ஓரளவுக்குச் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இருந்த போதிலும், மேற்படிக் கிராமங்களுக்குச் செல்வதில் பாரிய சவாலாக பாதை சீரின்மை, பாதுகாப்பற்ற படகுப் பயணம் காணப்படுகின்றது.

இதனைக் கருத்தில் கொண்டு மிக விரைவில் அக்குறானை ஆற்றைக் கடப்பதற்கான இரும்புப் பாலத்தை அமைத்துக் கொடுப்பதற்கு உத்தேசித்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

இந்நிலையில், எதிர்வரும் வருடத்தின் நடுப்பகுதிக்குள் அக்குறானை பாலத்துக்கான நிர்மாண வேலையைப் பூர்த்தி செய்து பொதுமக்களின் பாவனைக்கு கையளிக்க முடியுமென்று நம்புவதாகவும், அவர் தெரிவித்தார்.

போதைப்பொருள் பாவனைக்கு எதிராக கொக்கட்டிச்சோலையில் விழிப்புணர்வு

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

மண்முனை தென்மேற்கு பிரதேசத்தின் கொக்கட்டிச்சோலை பிரதேசத்தில் போதைப்பொருள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்வொன்று நேற்று முன்தினம் (21) நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட சர்வமத செயற்குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வின் போது, போதைப்பொருள் பாவனையைத் தடுக்கும் வகையில் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பாதாதைகளை நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் ஏந்தியிருந்தது டன், துண்டுப்பிரசுரங்களையும் விநியோகித்தனர்.

இன்றைய காலத்தில் அதிகரித்து வரும் போதைப்பொருள் பாவனையை இல்லாதொழிக்கவும் போதைப்பொருள் பாவனைக்குத் தூண்டும் தீய சக்திகளை இனங்கண்டு சட்டத்தின் முன் நிறுத்தி, எதிர்காலத்தில் சிறந்ததொரு சமூகத்தை உருவாக்கவும் இவ்விழிப்புணர்வு நிகழ்வு நடத்தப்பட்டது.

பட்டிருப்பில் அழகியல் பாட ஆசிரியர்களுடன் சந்திப்பு

பாண்டிருப்பு தினகரன் நிருபர்

பட்டிருப்பு வலயக் கல்விப் பணிமனைக் குட்பட்ட அழகியல் பாட ஆசிரியர்களுடனான விசேட கலந்துரையாடலொன்று, கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது.

பட்டிருப்பு வலய நாடகமும் அரங்கியலும் ஆசிரிய ஆலோசகர் வனிதா சுரேஸின் ஒழுங்கமைப்பில் நடைபெற்ற இக்கலந்துரையாடலின் போது,

எதிர்வரும் ஆண்டில் அழகியல் பாடங்களை மாணவர்கள் விரும்பத்தக்க வகையில் எவ்வாறு கற்பித்தல் என்பது தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

இதேவேளை, தனது 38 வருடக் கல்விச் சேவையிலிருந்து ஓய்வுபெற்றுச் செல்லவுள்ள அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் சுந்தரலிங்கம், ஆசிரியர்களினால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

திகதி 21.12.2022 புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4976
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 10,230,440.00
ஆங்கில எழுத்து P வெற்றி இலக்கங்கள் 5 7 6 3 6 0
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,163,716.00

ராசி சுப மலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 285
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,683,100.00
இலக்கினம் கன்னி
வெற்றி இலக்கங்கள் 11 17 41 42
விசேட இலக்கினம் கன்னி
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,602,147.60

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3218
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,897,640.00
ஆங்கில எழுத்து D வெற்றி இலக்கங்கள் 14 27 63 68
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 64,418,075.60

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 1431
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,099,660.00
வெற்றி இலக்கினம் கடகம் வெற்றி இலக்கங்கள் 3 4 6 1 2 8
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,356,336.40

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம்: 1006
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,615,120.00
C 12 18 41 64
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 138,709,644.80

லக்கி 28+ Mega POWER மேகா பவர் மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1324
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,698,420.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 287,756,766.00
ஆங்கில எழுத்து U சுப்பர் நம்பர் 08 வெற்றி எண்கள் 24 25 35 43
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

ஜாதிக லொதரயி மண்டலய தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011-4607001-2 பெக்ஸ்: 011-4669475
Email: info@nlb.lk Web: www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலாவது மாவத, கொழும்பு 01

கொழும்பு மாநகர சபை

விலைக்கோரல்/ கேள்விகளுக்கான அழைப்பு

தகுதியும் தகைமையுமுள்ள கேள்விதாரர்கள்/விலைமனுதாரர்களிடமிருந்து பின்வரும் பொருட்கள்/சேவை வழங்கல்களுக்காக பொறியிடப்பட்ட கேள்விகள் கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரால் அழைக்கப்படுகின்றன.

தொ. இல.	கேள்வி இல.	விபரம்	கேள்விதாரர்கள்/ விலைமனுதாரர்களின் தகைமை	மீளளிக்கப் படாத கேள்வி/ விலைமனு ஆவணக் கட்டணம்	விலைமனு முறி / பிணை பெறுமதி ரூபா
1.	CPD16/ 1246/2022	வாகனங்கள் மற்றும் இயந்திராதிகளின் காப்புறுதிகளுக்கான கேள்வி (கேள்வி முன்னோடிக் கூட்டம் 2023-01-04ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு மாநகர ஆணையாளர் அலுவலகத்தில் இடம்பெறும்)	வர்த்தகப் பதிவுடன் இந்த வகையான வழங்கல்கள்/ சேவைகளில் அனுபவத்தை பெற்ற வழங்குநர்கள்/ சேவை வழங்குநர்கள்	ரூபா 5,750.00	200,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி
2.	CPD17/ 2985/2022	சட்டகம் சகிதம் D.I Manhole Cover வழங்குவதற்கான கேள்வி		ரூபா 5,750.00	1,000,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி
3.	CPD17/ 2836/2022	சட்டகம் சகிதம் D.I Gully Cover வழங்குவதற்கான கேள்வி		ரூபா 5,750.00	500,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி

விலைமனு ஆவணங்களை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி) இரண்டு முறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

முறை 01 - கொழும்பு மாநகர சபையின் இணையதளத்திலிருந்து (றறற.உழடழஅடிழ.அஉ.பழஎ.டம) தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.

i. மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தை பின்வரும் வகையில் செலுத்துதல் வேண்டும்.

அ) எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் மக்கள் வங்கி நகர மண்டப கிளையில் பேணப்படும் 167-1-001-6-3169425 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கலாம்.

ஆ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம்.

- **வட்டார அலுவலகம் 04, இல. 147, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு 06.**
- **வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவு, மாளிகாகந்த, கொழும்பு 10.**

ii. பற்றுச்சீட்டு / வங்கி வரவுத் துண்டை விலைமனு ஆவணங்களுடன் கட்டாயம் இணைத்தல் வேண்டும்.

முறை 02 - நகர மண்டப வளவில் பெற்றுக்கொள்ளலாம்.

அ. ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணக் கட்டணத்தை 2023-01-11ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும் நகர மண்டப காசாளர் கருமபீடத்திற்கு செலுத்தி மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மத்திய பெறுகை திணைக்கள அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆ. விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்கள் 2023 ஜனவரி 11ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்குப் பின் வழங்கப்படமாட்டாது / இணையதளத்தில் பெற்றுக்கொள்ள முடியாது.

இ. நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதான விலைமனு முறி/ பிணை கேள்விமனுக்கள்/ விலைமனுக்கள் மூடப்படும் திகதியிலிருந்து 150 நாட்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைமனு முறி/ பிணை 2023.06.10ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைக்கோரல்கள் 2023.05.11ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

ஈ. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளில் கொழும்பு-07, நகர மண்டபம், செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2023 ஜனவரி 12ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் உள்ளிடல் வேண்டும்.

உ. 2023 ஜனவரி 12ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி/ விலைமனு ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்படும் என்பதுடன் இறுதி நேரத்திற்கு பின் கிடைக்கப்பெறும் கேள்வி/ விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு அதன் பின்னர் கேள்வி/ விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்து வரும் வேலை நாளில் 10.00 மணிக்கு கேள்வி/ விலைமனுக்கள் மூடப்படும். கேள்வி/ விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு கேள்விதாரர்கள்/ விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர். 0112-686389, 0112-686369, 0112-662329 என்ற தொலைபேசி இலக்கங்களில் தலைமை கணக்காளர் (பெறுகை) அவர்களிடமிருந்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஊ. 5.0 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட கேள்வி/ விலைமனுக்களைக் கொண்ட கேள்விதாரர்கள்/ விலைமனுதாரர்கள் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்திற்கு அமைய பொது ஒப்பந்தப் பதிவாளருடன் பதிவு செய்த பின் PCA (3) ஆவணத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

ஜே.எம். பத்ராணி ஜயவர்தன,
மாநகர ஆணையாளர்,
கொழும்பு மாநகர சபை.

ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

தப்பெண்ணம் கொள்ளுதல் -இஸ்லாம் கூறுவதென்ன?

அஷ்ஷெய்க் யூ.கே. றமீஸ் (எம்.ஏ)
சமூகவியல்

அடுத்தவர் பற்றி தப்பெண்ணம் கொள்வது மிக மோசமான ஒரு பழக்கமாகும். இது குடும்பங்கள், சமூகங்களிடையே பிரிவினையை ஏற்படுத்திவிடும். செயல்பாடுகளின் தரத்தை குறைத்துவிடும். மனிதர்கள் மீதான நம்பிக்கையை நீக்கிவிடும். ஒத்துழைப்புகள் குறைந்துவிடும். குடும்பங்களும் தனிமனிதர்களும் தனித்து விடப்படுவார்கள். சந்தேகங்களும் தப்பபிப்பிராயங்களும் தாண்டவமாடும். ஒருவன் மற்றவனுக்கு எதிராக சதி செய்வான். இது குடும்பம், நிறுவனங்கள், சமூகங்களை பாழாக்கிவிடும். எனவேதான் இஸ்லாம் தப்பெண்ணங்களை தவிர்க்கவும் நல்லெண்ணங்களை உருவாக்கவும் பல வழிமுறைகளைக் காட்டித்தந்திருக்கிறது.

'அல்லாஹ் ஒரு முஃமினின் இரத்தத்தையும், செல்வத்தையும், மானத்தையும், தப்பெண்ணம் கொள்வதையும் ஹராமாக்கியுள்ளான்' என்று இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் கூறியுள்ளார்கள். (ஆதாரம்: ஹாகிம், இஹ்யா உலூமித்தீன் 2/221)

தப்பெண்ணம் என்பது 'யாரை நம்ப வேண்டுமோ அவரை நம்பாதிருப்பதனை குறிக்கும்' என்று இமாம் மாவர்தி (ரஹ்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம் அதபுத் துன்யாவத் தீன் 1/186)

அதேநேரம் இமாம் இப்னுல் கையிம் (ரஹ்) அவர்கள் 'மக்களைப் பற்றிய மோசமான எண்ணங்களை உள்ளத்தில் நிரப்பிக்கொள்வது தப்பெண்ணம்' என்றுள்ளார்கள். (ஆதாரம் அர்ரூஹ் 1/238)

இது சமூக வாழ்வில் காணக்கிடைக்கின்ற இஸ்லாம் தடுத்துள்ளவைகளில் ஒன்றாகும். அதாவது இரு நிலைப்பாடுகளுக்கு வர முடியுமான நிலையில் நல்ல பகுதியை விட்டுவிட்டு மோசமான பகுதியை உறுதிப்படுத்துவதுதான் இங்கு இடம்பெறுகிறது.

இவ்வாறானவர்கள் எப்போதும் அடுத்தவர் பற்றி தப்பபிப்பிராயம் கொள்வார்கள். சிறிய காரணங்களுக்காக குற்றம் சுமத்துவார்கள். அடுத்தவர் செயல்களை குறைத்தே மதிப்பிடுவார்கள். சிறிய தவறுகளையும் மிகைப்படுத்தி விடுவார்கள். அடுத்தவரின் நியாயங்களை தேட மாட்டார்கள். குறைகளைத் துருவித்துருவி ஆராய்வார்கள். அவற்றை உச்சத்துக்கே கொண்டு செல்வார்கள். அவற்றை பரப்பி விடுவார்கள். அடுத்தவரின் செயல்களைக் கறுப்பு கண்ணாடியணிந்து நோக்குவார்கள். அடுத்தவர் செய்கின்ற நல்ல விடயங்களை குறைத்து கணிப்பார்கள், பல போது மறைத்தும் விடுவார்கள். சிலபோது அவர்களது குறைகளை மிகைப்படுத்திக் காண்பிப்பார்கள். இவர்களது நோக்கமே குறைகாண்பது தான். அடுத்தவன் மீது குற்றத்தை சுமத்திவிடவே இத்தகையவர்கள் முனைவார்கள்.

ஒரு தவறிலிருந்து ஆயிரக்கணக்கான தவறுகளை உருவாக்கி விடுவார்கள். ஒரு சாதாரண தவறை குப்ராக மாற்றிவிடுவார்கள். ஒரு மனிதனின் சொல்லோ செயலோ அது நல்லதாகவோ கெட்டதாகவோ இருக்கலாம். பிறர் குறைதேடுவோர் அவற்றை ஒரு குற்றமாகவே நோக்குவார்கள். இது இஸ்லாமிய நோக்குக்கு முற்றிலும் முரணானதாகும்.

'விசுவாசிகளே! சந்தேகமான அதிகமான எண்ணங்களிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். ஏனெனில் சில வகையான எண்ணங்கள் பாவமானவையாகும். **(அல் குர்ஆன் ஹுஜுராத்:12)**

இங்கு இரண்டு விடயங்களை கவனத்தில் கொள்ள வேண்டும். முதலாவது, 'தவிர்ந்து கொள்ளுங்கள்' என்பது ஒரு கட்டளையாகும். கட்டளைகள் வாஜிப் என்ற கடமையை குறிக்கும். இரண்டாவது, இவ்வசனத்தை தொடர்ந்து 'நீங்கள் பிறர் குறைகளை துருவித் துருவி ஆராய வேண்டாம்' என்றும் 'சிலர் சிலரைப் பற்றிபுறம் பேச வேண்டாம்' என்று வந்துள்ளமை தப்பெண்ணங்களின் விளைவுகள் எப்படி காணப்படும் என்பதை எடுத்துக்காட்டுகிறது.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள் 'தப்பெண்ணத்தையிட்டு உங்களை நான் எச்சரிக்கிறேன். ஏனெனில் அது மிகவும் பொய்யான பேச்சாகும்' என்று கூறியுள்ளார்கள்.

(ஆதாரம் புகாரி, முஸ்லிம்)

நபி (ஸல்) அவர்கள் கஃபாவை பார்த்து 'நீ எவ்வளவு சிறந்தது, உனது காற்று எத்துனை சிறந்தது. நீ எத்துனை மகத்தானது, உனது கண்ணியம் எத்துனை மேலானது. முஹம்மதுடைய உயிர் எவன் வசமுள்ளதோ அவன் மீது ஆணையாக அல்லாஹ்விடம் முஃமினுடைய கண்ணியம், அவனது செல்வம், அவனது இரத்தம், அவனைப் பற்றி நல்லதையே பேசுவது போன்றவை உனது மகத்துவத்தை விட மேலானது' என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

(ஆதாரம்: இப்னு மாஜா, ஸில்ஸிலதுஸ் ஸஹீஹா)

தப்பெண்ணம் என்பதை இரு கோணங்களில் நோக்கலாம். அவற்றில் ஒன்று அல்லாஹ்வை பற்றி தப்பெண்ணம் கொள்ளுதல் மற்றையது மனிதர்களை பற்றி தப்பெண்ணம் கொள்ளுதல் ஆகும். அல்லாஹ் அவனது மார்க்கத்துக்கு உதவி செய்யமாட்டான், அவன் நோயை குணப்படுத்த மாட்டான், பாவங்களை மன்னிக்க மாட்டான், அவனால் அனைத்தையும் அறிந்து கொள்ளவோ மிகைக்கவோ முடியாது போன்ற கருதுதல்கள் முதன்மையான தப்பெண்ணம் ஆகும். இதனை அல்லாஹ் 'அவர்கள் அல்லாஹ் பற்றி தப்பெண்ணம் கொள்கிறார்கள்' (அல் குர்ஆன் பத்ஹ்: 06) என்று நயவஞ்சகர்களை பற்றி குறிப்பிடுகிறான். இவ்விரு வகையான தப்பெண்ணங்களையும் இஸ்லாம் தடை செய்துள்ளது.

ஷைத்தான் சில விடயங்களை அலங்காரமாக்கி காட்டுவதும், மனோ இச்சையைப் பின்பற்றுவதும், அறிவீனமும் தப்பெண்ணம் கொள்வதற்கான முக்கிய காரணிகளாகும்.

'அல்லாஹ்வின் தூதரும் முஃமின்களும் தமது சமூகத்தை நோக்கி திரும்பி வர மாட்டார்கள் (அவர்கள் அழிந்து விடுவார்கள்) என்று அவர்கள் மோசமாகக் கற்பனை செய்தார்கள். ஷைத்தான் இதனை அலங்காரமாக காட்டி விட்டான். (அல் குர்ஆன் பத்ஹ் 12). மோசமான விடயங்களை அலங்காரமாகக் காட்டி தப்பபிப்பிராயங்களை தோற்றுவிப்பது ஷைத்தானின் இயல்பாகும். ஆதம் (அலை) அவர்களது உள்ளத்திலும் ஷைத்தான் இப்படித்தான் சந்தேகங்களை ஏற்படுத்தினான். ஸபிய்யா பின்த் ஹுயை (ரழி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் வந்தபோது இரு அன்சாரித் தோழர்கள் அவர்களை கடந்து சென்றார்கள். அப்போது நபியவர்கள் அவ்விருவரையும் அழைத்து 'இவர் (எனது மனைவி) ஸபிய்யா' என்று குறிப்பிட்டார்கள். அதற்கு அவர்கள் இருவரும் அல்லாஹ் தூய்மையானவன்' என்று கூறிய போது நபியவர்கள் 'நிச்சயமாக ஷைத்தான் மனிதனின் இரத்தம் ஓடக் கூடிய அனைத்து இடங்களிலும் ஓடுகிறான்' என்றார்கள். **(ஆதாரம்: புஹாரி)**

சந்தேகமும் தப்பெண்ணமும் தோன்றுவதற்கான வாய்ப்புள்ள இடத்தில் நபி (ஸல்) அவர்கள் எவ்வளவு தூரம் அவதானமாக நடந்துள்ளார்கள் என்பதை இது தெளிவுபடுத்துகிறது.

ஒரு விடயத்தை அல்லாஹ்வும் தூதரும் தெளிவாக சுட்டிக்காட்டியிருக்கும் நிலையில் மனோ இச்சைப்படி செயல்படுவதும் ஷைத்தானின் தூண்டுதலுடன் தொடர்பான ஒரு விடயம்தான். 'மனோ இச்சையைப் பின்பற்றும்படி ஷைத்தான்கள் அழைப்பு விடுத்தவர் போன்று...' (அல் குர்ஆன் அன்ஆம் 71) என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மனோ இச்சைப்படி நடப்பவன், அடுத்தவர் மீது தப்பெண்ணம் கொள்வான். 'அவர்கள் ஊகங்களோடு கூடிய தப்பெண்ணங்களையும் மனோ இச்சைகளையும் மாத்திரமே பின்பற்றுவார்கள்.

(அல் குர்ஆன் நஜ்ம்: 23)

அதனால்தான் இமாம் இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்கள் 'மிக மோசமான வழிகேடு ஊகங்களோடு கூடிய தப்பெண்ணங்களும் மனோ இச்சையை பின்பற்றுவதுமாகும்' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். (ஆதாரம் மஜ்மூஉல் பதாவா 3/384)

'மனோ இச்சையை நீங்கள் பின்பற்றினால் போக வேண்டிய பாதையிலிருந்து வழிதவறி விடுவீர்கள்.

(அல் குர்ஆன் ஸாத்:26)

அறிவீனமும் தப்பெண்ணங்களை உருவாக்குகிறது. பாரதூரத்தை உணராதவர்கள் பலர் இவ்வாறு செயல்படுவதனை நாம் காண முடிகின்றது. 'நீர் பூமியிலுள்ள அதிகமானவர்களை பின்பற்றினால் அவர்கள் சரியான பாதையிலிருந்து உங்களை திசை திருப்பி விடுவார்கள். (அல் குர்ஆன் அன்ஆம்:116)

இது போன்ற நிலைகளிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கு மார்க்க அறிஞர்களுடன் தொடர்பினை பேணிக்கொள்வதும் தனது நிலையை கேள்வியாக கேட்டு உணர்ந்து தன்னை மாற்றிக் கொள்வதும்அவசியமாகும்.'உங்களுக்கு தெரியாவிட்டால் தெரிந்தவர்களிடம் கேளுங்கள். '

(அல் குர்ஆன் நஹ்ல்:43),

அறியாமை என்ற நோய்க்கான மருந்து கேள்வி கேட்பதில்தான் இருக்கிறது' என்று நபி(ஸல்) அவர்கள் குறிப்பிட்டார்கள். (ஆதாரம்: அபூ தாவூத்). ஷைத்தானின் வழிமுறைகளையும் மனோ இச்சைக்கு கட்டுப்படுவதன் பாரதூரத்தையும் ஒருவன் அறிந்து, புரிந்து, உணர்ந்து கொள்வதன் மூலம் அறியாமை மறைந்து தன்னை மாற்றிக் கொள்ளும் நிலை கிடைக்கப்பெறுகிறது. அதுவே இன்றியமையாதாகும்.

அல்லாஹ்விடத்தில் கண்ணியமானவர்

மனிதர்களே...! உங்கள் அனைவரையும் நிச்சயமாக நாம் ஒரே ஆண், ஒரே பெண்ணில் இருந்து தான் படைத்தோம். பின்னர், ஒருவர் மற்றவரை அறிந்து கொள்ளும் பொருட்டு, உங்களை கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம். (ஆதலால், உங்களில் ஒருவர் மற்றவரை விட மேலென்று பெருமை பாராட்டிக் கொள்வதற்கில்லை) எனினும், உங்களில் எவர் இறையச்சம் உடையவராக இருக்கின்றாரோ, அவர் தான் அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக மிக கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் (அனைத்தையும்) நன்கறிந்தவனும் நன்கு தெரிந்தவனாகவும் இருக்கின்றான். **(அல் குர்ஆன் 49:13).**

இந்த வசனத்தின் ஊடாக, அல்லாஹ் மனிதனை ஒரே ஆண் ஒரே பெண்ணிலிருந்து படைத்திருக்கிறான் என்பதன் மூலம் அனைத்துப் பாகுபாடுகளும் ஆரம்பத்திலேயே தடுக்கப்படுவதோடு அல்லாஹ்விடத்தில் கண்ணியமிக்கவர் யார் என்பதற்கான ஒர் அளவு கோலும் முன்வைக்கப்பட்டுள்ளது.

மனித வாழ்வுக்கு இறை நினைவின் தேவை

அபூ மதீஹா...

மனிதனாகப் பிறந்த எவரும் சோதனைக்கு உட்படுத்தப்படாமல் இருப்பதில்லை. இது போன்ற சோதனைக் காலங்களில் நமக்கு மன அமைதியைத் தரும் அருமருந்து அல்லாஹ்வை நினைப்பதேயாகும். இறைவனை நினைவு கூர்வதால் எவ்வளவு பெரிய கவலைகளும் இல்லாமல் போய்விடும்.

இது தொடர்பில் அல் குர்ஆன் 'நம்பிக்கை கொண்டோரின் உள்ளங்கள் அல்லாஹ்வின் நினைவால் அமைதியுறுகின்றன. கவனத்தில் கொள்க. அல்லாஹ்வின் நினைவால் தான் உள்ளங்கள் அமைதியுறுகின்றன' (13:28) என்று குறிப்பிட்டிருக்கிறது.

அல்லாஹ்வை நினைவு கூர்வது சாதாரணமான விடயமல்ல. அதில் கிடைக்கும் நன்மைகள் ஏராளம். அதனால்தான் அல்லாஹ் இறைநினைவை மிகப் பெரியதாகக் குறிப்பிட்டிருக்கின்றான்.

'அல்லாஹ்வை நினைப்பதே மிகப் பெரியது. நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிவான்' **(அல் குர்ஆன் 29:45)**

அதேநேரம், படைத்தவனை நினைவு கூராமல் ஒருவன் இருந்தால் அவன் இறந்த உடலுக்குச் சமம்' என்று நபி (ஸல்) அவர்கள் எச்சரிக்கை செய்துள்ளார்கள். ஆகவே உயிருடன் இருக்கும் காலமெல்லாம் படைத்தவனை நினைவு கூர்வது இன்றியமையாததாகும்.

'தம் இறைவனை நினைவு கூர்ந்து போற்றுகின்றவரின் நிலை உயிருள்ளவரின் நிலைக்கும், தம் இறைவனை நினைவு கூர்ந்து போற்றாதவரின் நிலை உயிரற்றவரின் நிலைக்கும் ஒத்திருக்கிறது' என்றும் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(ஆதாரம்: புஹாரி)

மற்றொரு சந்தர்ப்பத்தில், 'அல்லாஹ் நினைவுகூரப்பட்டுப் போற்றப்படும் இல்லத்தின் நிலை உயிருள்ளவர்களின் நிலையையும், அல்லாஹ் நினைவுகூரப்பட்டுப் போற்றப்படாத இல்லத்தின் நிலை உயிரற்றவனின் நிலையையும் ஒத்திருக்கிறது' என்றும் அன்னார் குறிப்பிட்டுள்ளார்கள்.

(ஆதாரம்: முஸ்லிம்)

அதனால் மன அமைதியையும் இறையருளையும் அள்ளித்தரும் இறைநினைவை நாம் அதிகமதிகம் கைக்கொள்ள வேண்டும். இறைநினைவு அதிகமாகக் காணப்படும் போது ஷைத்தானின் ஆதிக்கம் இல்லாமல் போய்விடும்.

இந்நிலையில் நம் உயிரிலும் மேலான அல் குர்ஆன், 'நம்பிக்கை கொண்டோரே! அல்லாஹ்வை அதிகமதிகம் நினையுங்கள்' **(33:41)** என்று வலியுறுத்தி இருப்பதை நினைவில் கொள்வது அவசியமாகும்.

இதேவேளை அல்லாஹ்தஆலா தன் அருள்மறையில், 'முஸ்லிமான ஆண்களும், பெண்களும், நம்பிக்கை கொண்ட ஆண்களும், பெண்களும், கட்டுப்படும் ஆண்களும், பெண்களும், உண்மை பேசும் ஆண்களும், பெண்களும், பொறுமையை மேற்கொள்ளும் ஆண்களும், பெண்களும், அடக்கமாக நடக்கும் ஆண்களும், பெண்களும், தர்மம் செய்யும் ஆண்களும், பெண்களும், நோன்பு நோற்கும் ஆண்களும், பெண்களும், தமது கற்பைக் காத்துக் கொள்ளும் ஆண்களும், பெண்களும், அல்லாஹ்வை அதிகம் நினைக்கும் ஆண்களும், பெண்களும் ஆகியோருக்கு அல்லாஹ் மன்னிப்பையும், மகத்தான கூலியையும் தயாரித்துள்ளான் (அல் குர்ஆன் 33:35) என்று குறிப்பிட்டிருக்கிறான்.

இவ்வசனத்தின் ஊடாக இறை நினைவின் சிறப்பு தெளிவாகிறது. அத்தோடு, 'அவர்கள் நின்றும், அமர்ந்தும், படுத்த நிலையிலும் அல்லாஹ்வை நினைப்பார்கள். வானமும் பூமியும் படைக்கப்பட்டது குறித்துச் சிந்திப்பார்கள். 'எங்கள் இறைவா! இதை நீ வீணாகப் படைக்கவில்லை. நீ தூயவன். எனவே நரக வேதனையிலிருந்து எங்களைக் காப்பாயாக!' (என்று அவர்கள் கூறுவார்கள்) (3:191) என்றும் அல் குர்ஆன் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இவ்வசனத்தின் படி, இறை நம்பிக்கையாளரின் இறை நினைவு எவ்வாறு இருக்கும் என்பதும் எடுத்தியம்பப்பட்டிருக்கின்றது.

நம்மைப் படைத்து நமது வாழ்வுக்கு தேவையான அத்தனை வசதிகளையும் வாய்ப்புக்களையும் ஏற்படுத்தித் தந்திருப்பதோடல்லாமல் எமது ஈருலக வாழ்வின் சுபீட்சத்துக்கு தேவையான நேர்வழி காட்டலையும் இறக்கியருளியுள்ள அல்லாஹ்வை நாம் எந்நேரமும் நினைவில் கொள்ள வேண்டும். அது நமது விமோசனத்திற்கும் சுபீட்சத்துக்கும் பக்கத்துணையாக அமையும்.

அவ்வாறு நாம் அல்லாஹ்வை நினைவு கூறுவதானது எமது வாழ்வுக்கு தேவையான வசதி வாய்ப்புக்களைத் தேடுவதில் ஈடுபவதையோ குடும்ப சமூக உறவை பேணுவதையோ தடுத்துவிடாது.

இதனை அல் குர்ஆனே, 'வணிகமோ, வர்த்தகமோ அவர்களை அல்லாஹ்வின் நினைவை விட்டும், தொழுகையை நிலைநாட்டுவதை விட்டும், ஸகாத் கொடுப்பதை விட்டும் திசை திருப்பாது. பார்வைகளும், உள்ளங்களும் தடுமாறும் நாளை அவர்கள் அஞ்சுவார்கள் (24:37) என்று குறிப்பிட்டிருக்கிறது.

அதேநேரம், 'நம்பிக்கை கொண்டோரே! உங்களின் பொருட்செல்வமும், மக்கட் செல்வமும் அல்லாஹ்வின் நினைவை விட்டு உங்களைத் திசைதிருப்பி விட வேண்டாம். இதைச் செய்வோரே நட்டமடைந்தவர்கள்' (63:9) என்றும் அல் குர்ஆன் குறிப்பிட்டிருக்கிறது.

அத்தோடு சர்வ வல்லமை படைத்த அல்லாஹ்வே, 'என்னை நினையுங்கள், நானும் உங்களை நினைக்கிறேன். எனக்கு நன்றி செலுத்துங்கள். எனக்கு நன்றி மறக்காதீர்கள்' **(அல் குர்ஆன் 2:152)** எனக்கூறியுள்ளான்.

ஆகவே இறைநினைவின் சிறப்பையும் மக்கத்துவத்தையும் மாத்திரமல்லாமல் அதன் தேவையையும் உணர்ந்து எமது செயற்பாடுகளை அமைத்துக் கொள்வோம்.

சோதனைகளை எதிர்கொள்ளும் ஒழுங்கு

நாம் துன்பங்களை எதிர்கொள்ளும்போது, நமது ஈமான் சோதனைக்கு உள்ளாவதைத் தவிர்க்க முடியாமல் போகிறது. கவலையும் வருத்தமும் இயல்பானது தான். என்றாலும் அதனை சரியான முறையில் எதிர்கொள்ளாவிடில்ஷைத்தான் நம் மனதை தவறான வழியில் பிறழச் செய்து விடுவான். ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், 'பெரிய சோதனையுடன் பெரிய கூலியும் இருக்கிறது. அல்லாஹ், தான் நேசிப்பவரை சோதிக்கிறான். அதனைப் பொருந்திக் கொள்பவர் குறித்து மகிழ்ச்சி அடைகிறான். மனக்குறை கொள்பவர் குறித்து கோபம் கொள்கிறான்' என்று கூறியுள்ளார்கள்.

(ஆதாரம்: திர்மிதி)

நாம் எதிர்கொள்ளும் துன்பத்தின் அளவுடன், தான் வழங்கவிருக்கும் வெகுமதிகளின் சிறப்புக்களையும் அல்லாஹ் தொடர்புபடுத்தி வைத்துள்ளான். சிறுதுன்பங்களுக்காக நமக்கு கிடைக்கும் நன்மைகளை விட, பெரிய துன்பங்களால் கிடைக்கும் நன்மைகள் மிக அதிகமாகும்.

மற்றொரு சந்தர்ப்பத்தில் நபி (ஸல்) அவர்கள், 'ஒரு முஸ்லிமைக் குத்தும் முள் உள்ளிட்ட அவருக்கு நேரிடும் துன்பம், துக்கம், கவலை தொல்லை, மனவேதனை உள்ளிட்ட எதுவானாலும் அதற்குப் பதிலாக அவரின் பாவங்களிலிருந்து சிலவற்றை அல்லாஹ் மன்னிக்காமல் இருப்பதில்லை' என்று குறிப்பிட்டுள்ளார்கள் (ஆதாரம் : புஹாரி)

இதேவேளை, அல் குர்ஆன், 'நிச்சயமாக நாம் உங்களை ஓரளவு அச்சத்தாலும் பசியாலும் பொருட்கள், உயிர்கள், விளைச்சல்கள் ஆகியவற்றின் இழப்பினாலும் சோதிப்போம். ஆனால் பொறுமையுடையோருக்கு (நபியே! நீர் நற்செய்தி கூறுவீராக) (2 : 155) என்று குறிப்பிட்டுள்ளது. நாம் எதிர்கொள்ளும் எந்தவொரு சோதனையும் அது சிறியதோ பெரியதோ தற்செயலாக நடப்பதில்லை. அவை அல்லாஹ்வின் நாட்டப்படியே நடக்கிறது. சோதனைகள் நமக்கு நேரிடும்போது அவற்றை அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்குரிய ஒரு வாய்ப்பாகக் கருதவேண்டும். அல்லாஹ் நம்மை அதிகமாக சோதனைக்குள்ளாக்கும் போது அவன் நம்மீது கொண்டுள்ள அளவிலான அன்பாகவே அதனைக் கருதவேண்டும். சுவனத்தில் நமக்கு அதிகமதிகம் வெகுமதிகளைத் தயார் செய்யவே அல்லாஹ் நம்மை சோதிக்கிறான். நாம் பொறுமையாளர்களாக இருக்க வேண்டும். அது நிச்சயம் எமக்கு வெற்றியைப் பெற்றுத்தரும்.

அதேநேரம் 'உங்களுக்கு முன் சென்றவர்களுக்கு ஏற்பட்ட சோதனைகள் உங்களுக்கு வராமலேயே சுவர்க்கத்தை அடைந்து விடலாமென்று நீங்கள் எண்ணுகிறீர்களா? (2 : 214) என்று அல் குர்ஆன் கேள்வி எழுப்பியுள்ளது. அதனால் எமது இலக்கான சுவனத்தை எந்தவொரு சோதனையையும் அனுபவிக்காது அதனை அவ்வளவு எளிதாக அடைந்துவிட முடியாது என்பதை இவ்வசனம் உணர்த்திக் கொண்டிருக்கிறது.

சோதனைகள் வரும்போது நாம் உறுதியாக நம்பிக்கை கொண்டவர்களாக இருக்க வேண்டும். 'அல்லாஹ் எந்தவொரு ஆன்மாவுக்கும் அது தாங்கிக்கொள்ள முடியாத அளவு கஷ்டத்தை கொடுப்பதில்லை' (2 : 286) என்று அல் குர்ஆனே குறிப்பிட்டு வைத்திருக்கிறது.

எனவே சோதனைகளை இறைவழிகாட்டல்களின் அடிப்படையில் எதிர்கொள்ள உறுதி கொள்வோம்.

தொகுப்பு:
அபூ ஸஹீத் ஸாபித்...

பேராதனை பல்கலைக்கழக வரலாற்றில் முதன்மை தமிழ் நூலகர்;

தமிழ் கூறும் வரலாற்றில் மகேஸ்வரன் ஒரு சாதனையாளர்

இலங்கை உயர்கல்வி பீடமான பல்கலைக்கழக கல்வி ஆரம்பித்து 2021ஆம் ஆண்டு 100 வருடங்களாகின்றன. இந்நூறு வருட வரலாற்றில் எட்டு நூலகர்கள் இலங்கை, பேராதனை பல்கலைக்கழக நூலகர்களாக கடமையாற்றியுள்ளனர். இதில் எட்டாவது நூலகர் இராசையா மகேஸ்வரன் ஆவார். இவர் முதல் தமிழ் நூலகர் இப்பதவியை பெறுப்பேற்றவராவார்.

இராசையா மகேஸ்வரன் கண்டி புனித சில்வெஸ்டர் கல்லூரியின் பழைய மாணவன், ஹொக்கி விளையாட்டு வீரர். அக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் நீண்ட கால உபதலைவருமாவார். பேராதனை பல்கலைக்கழக புவியியல் விசேட கௌரவப்பட்டதாரி. இவர் பேராதனை பல்கலைக்கழக மாணவராக இருந்த போது ஹொக்கி குழு தலைவராக, விளையாட்டு சபை உறுப்பினராக, தமிழ் சங்க செயலாளராக, விவாத சங்க உபதலைவராக இருந்தவர். பன்விலை விக்னேஸ்வரா வித்தியாலய அதிபராக, கொட்டகலை அரசினர் ஆசிரியர் கல்லூரி விளையாட்டுத்துறை விரிவுரையாளராக பின்னர் பேராதனை பல்கலைக்கழக நூலகத்தில் கல்விசார் உதவி நூலகராக, சிரேஷ்ட உதவி நூலகராக, பிரதி நூலகராக பதில் நூலகராகவும் தற்போது பிரதம நூலகராக பதவி உயர்ந்தவர். பல்கலைக்கழக கல்விசார் விரிவுரையாளர் சங்க உபதலைவராகவும் அதன் செயலாளராகவும், குறிஞ்சிக்குமரன் கோயில் பேராண்மைக்குழு உறுப்பினராகவும் அதன் செயலாளராகவும் இந்து பட்டதாரிகள் சங்க தலைவராகவும் பல முக்கிய பதவிகளை வகித்தவர். இன்றும் சில பதவிகளில் இருந்து வருகிறார்.

கண்டி ஹொக்கி சங்க தலைவராக, இலங்கை ஹொக்கி சங்க உபதலைவராவும் நீண்ட காலம் கடமையாற்றுவதோடு தேசிய பயிற்றுவிப்பாளர், தேசிய நடுவர் போன்ற தரத்தினை பெற்றவர். ஹொக்கி மூலம் இந்தியா, சிங்கப்பூர், தாய்லாந்து, பங்களாதேஷ், மலேசியா, ஹொங்கொங், பெல்ஜியம், ஜேர்மன், இந்தோநேசியா ஆகிய நாடுகளுக்கு தேசிய குழு முகாமையாளராக, சம்மேளன உபதலைவராக சென்றவர். சிறந்த ஆய்வாளர், ஊடகவியலாளர், விமர்சகர் நூலகத்துறையிலும், இலக்கிய துறையிலும், தனது ஆய்வு கட்டுரைகளை இந்தியா, பிரித்தானியா,மலேசியா, சுவிஸ், லண்டன் ஆகிய நாடுகளில் சமர்ப்பித்தவர். கோவை செம்மொழி மாநாடு, மலேசியா ஒன்பதாவது உலக தமிழாராய்ச்சி மாநாடு, லண்டன் தமிழியல் ஆய்வு மாநாடு, மலேசியா இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு, காயல் பட்டிணம் இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு, மலேசியா முருக பக்தி மாநாடு, சிங்கப்பூர் நூலகவியலாளர் மாநாடு, சென்னை தமிழாராட்சி நிறுவன பண்ணாட்டு கருத்தரங்கு, இந்திய தமிழ் நாட்டு தொல்லியல்கழக 25ஆவது வருட பன்னாட்டு கருத்தரங்கு, பேராதனை பல்கலைக்கழக தமிழ் துறை தமிழ் ஆய்வு தேசிய கருத்தரங்கு ஆகியன இவர் ஆய்வு கட்டுரைகள் சமர்ப்பித்த முக்கியமான மாநாடுகளாகும். 'நதி கடந்த களம்' என்ற ஆய்வு நூலுக்கு மத்திய மாகாண சபை சாகித்திய பரிசு பெற்ற இவர் நாட்டுப்புற பாடல்கள், அமைதி வழியும் மதுர மொழியும், ஆண்ட பரம்பரை, நூலக விஞ்ஞானம், நதி கடந்த களம், வளம்மிக்க வழக்காற்றியல் பதிவுச்சுவடுகள் மற்றும் உளவியல் அறிவும் நூலக ஆசிரியர் செல்நெறியும், தொடர்ந்தும் வராதோ, பழக்கத்திலுள்ள பழமொழிகளின் பகுப்பு ஆகியன பற்றி பல நூல்கள் வெளியிட்டுள்ளார்.

நாளை மணிவிழாவும்
மணி விழா சிறப்பு மலர் வெளியீடும்

இவரது காலத்தில் டிஜிட்டல் நூலகம் அபிவிருத்தி செய்யப்பட்டதோடு, ஓலைச்சுவடிகள் பேணுதலும் பாதுகாத்தலும் பிரிவு அபிவிருத்தி செய்யப்பட்டு 30000 சதுர அடிகளைக் கொண்ட புதிய 6 மாடிக் கட்டடம் கட்டப்பட்டு கணனி நூலகம், கருத்தரங்கு மண்டபம், எண்ணியல் நூலகம், மானுட நூலக எண்ணக்கரு போன்ற புதிய சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் தமிழ்நாடு சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகம், சேலம் பெரியார் பல்கலைக்கழகம், திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம், மதுரை காமராஜன் பல்கலைக்கழகம், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம், கோடைக்கானல் அன்னை திரேசா பல்கலைக்கழகம், திருநெல்வேலி மணோன்மணி சுந்தரனார் பல்கலைகலைக்கழகம் ஆகியவற்றில் ஆதார சுருதி உரை, விசேட உரை, விசேட அதிதிகள் உரை, கருத்துரை என பல வகையிலும் கலந்துகொண்டு உரையாற்றியுள்ளார். இவரது மனைவி கோமதி மகேஸ்வரன் அரச மிருக வைத்தியராவார். இவருக்கு இரண்டு மகன்மார்கள். இருவரும் உயர்கல்வி கற்று வருகின்றனர்.

பேராதனைப் பல்கலை. நூலகத்தின் முதல் தமிழ் மகன்

பேராதனைப் பல்கலைக்கழக பிரதம நூலகரும் இலங்கை ஹொக்கி சம்மேளனத்தின் உப தலைவரும், இலங்கை அணி முகாமையாளரும் பன்னூலாசிரியருமான நண்பர் இரா. மகேஸ்ரவனின் மணிவிழாவும் மணி விழா சிறப்பு மலர் வெளியிடுவதையிட்டு வாழ்த்துரையை அளிப்பதில் மிக நான் மகிழ்ச்சி கொள்கின்றேன்.

சர்வதேச பன்நாட்டுக் கருத்தரங்குகளில் காத்திரமான பலதமிழ் ஆய்வுகளை சமர்ப்பித்து நூலகத் துறை ஆய்வுகளிலும் தடம் படித்தவர். பன்னூலாசிரியர், நூல்களுக்கான சாஹித்திய மண்டலப் பரிசுகளையும் பெற்றவர். ஆதலால் அவர் தமிழ் இலக்கியத்தின் மீது கொண்டுள்ள பற்றும் ஊக்கமும் விடா முயற்சியும் அயரா உழைப்புமே இம்மணி விழா கொண்டாடுவதற்கு காரணமாக அமைந்துள்ளது எனக் கூறினால் அது மிகையாகாது. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஒரு தமிழ் மகன் பிரதம நூலகராக இருப்பது என்பது தனிப்பெரும் சக்தியும் ஆற்றலுமாகும். இந்நூலகத்திற்கு 100 வருடங்களாகின்றன. இந்த நூறு வருட வரலாற்றில் எட்டு நூலகர்கள் கடமையாற்றியுள்ளனர். இதில் இராசையா மகேஸ்வரன் முதல் தமிழ் மகன் நூலகராக பதவியைப் பொறுப்பேற்று ஓர் உயரிய ஸ்தானத்தை அடைந்திருப்பதும் இந்த விழாவுக்கு மேலும் வலிமை சேர்க்கின்றது.

எனவே இவர் பெற்ற புகழோடு மென்மேலும் பல சாதனைகள் செய்து நீடித்த ஆயுளுடன் என்றும் வாழ வாழ்த்துகிறோம்.

கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்.
ஸ்ரீ. மு. கா. தேசியத் தலைவர்
ரவூப் ஹக்கீம்

செயலூக்கம் மிக்கவர்

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பிரதம நூலகர் ஆர். மகேஸ்வரனின் மணி விழாவும் மணிவிழா மலர் வெளியீடும் நடப்பதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். நாம் இருவரும் பல்வேறு நாடுகளில் நடைபெற்ற ஆய்வு மாநாடுகளில் ஒன்றாகக் கலந்து கொண்டுள்ளோம் .

மகேஸ்வரன் ஆய்வு , ஊடகம், விளையாட்டு முதலான பல்வேறு துறைகளிலும் ஈடுபாடு கொண்டு உழைத்து வருபவர்.

செயலூக்கம் மிக்கவர். அவர் மென்மேலும் உயர்ந்து. சிறந்து விளங்க எனது வாழ்த்துக்கள்.

பேராசிரியர் **துரைமனோகரன்**
தமிழ் துறை, முன்னாள் தலைவர்
பேராதனைப் பல்கலைக்கழகம்

ஆற்றல் மிக்க எழுத்தாளர்

நண்பரும் பேராதனைப் பல்கலைக்கழக பிரதம நூலகருமான இராசையா மகேஸ்வரன் அவர்களின் மணி விழாவும் மணி மலர் வெளியீடும் நடப்பதையிட்டு நான் வாழ்த்துரை வழங்குவதில் பேருவகையடைகின்றேன்.

கலை, இலக்கிய, கலாசார பண்பாட்டு வளர்ச்சிக்கும் அறிவியல் சிந்தனை வளர்ச்சிக்கும் நண்பர் மகேஸ்வரன் ஆற்றி வரும் பணி அளப்பரியது. தமிழ் இலக்கிய ஆய்வு தொடர்பாகவும் நூலக ஆய்வு தொடர்பாகவும் பல நூல்களை எழுதிய ஓர் பன்னூலாசிரியர்.ஆற்றல் மிக்க எழுத்தாளர். பன்முக ஆளுமையைக் கொண்டவர். குறிப்பாக நூலக வளர்ச்சிக்கு அவர் அளித்துள்ள பங்களிப்பினை எல்லா மாணவர் சமூகத்தைச் சேர்ந்தவர்களும் போற்றிப் புகழ்ந்து வருகின்றனர்.

"வாழும் போதே வாழ்த்தப்பட வேண்டும்" என்னும் முதியோர் வாக்கிற்கேற்ப தமிழ் இலக்கியத்திற்காக மகத்தான பணி புரியும் மகேஸ்வரனுக்கு மணி விழா எடுப்பது குறித்து நான் அகமகிழ்வுறுகின்றேன்.

இலக்கிய பணி மகத்துவத் தன்மை வாய்ந்தது என்பதையும் இது ஒரு மகத்தான பணியென்பதையும் நாம் ஒவ்வொருவரும் நினைவிலிருத்திக் கொள்ள வேண்டும். அந்த வகையில் மகேஸ்வரன் இலக்கியத்தைப் பெரும் பேறாகக் கருதி தனது நூலக ஆய்வுத் துறையிலும் இலக்கியத் துறையிலும் சிறந்த பணியாற்றி பெரும் சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

இவரின் இத்தகைய சேவையைக் கருத்திற் கொண்டு மணி விழா எடுக்க முன்வந்தமை தொடர்பில் மகேஸ்வரனுக்களித்த உன்னத நிலையை, உயர் பங்கினை, அங்கீகாரத்தை வெளிப்படுத்தி நிற்கிறது. இந்நாளில் மணி விழா நாயகனைப் பாராட்டுவதுடன் விழா வெற்றிபெற இறைவனையும் பிரார்த்திக்கின்றேன்.

பேராசிரியர் பி. எம். ஜமாஹீர்.
தலைவர் மெய்யியல் துறை

மணிவிழாக் காணும் மகேஸ்வரன்

இன்றும் ஒரு இளைஞராக துடிப்புடன் செயற்படும் நண்பர் மகேஸ்வரன் மணிவிழாக் காணுவதென்பது ஒரு ஆச்சரியமான உண்மைதான். கடந்த ஆண்டு நூற்றாண்டு விழாக் கொண்டாடிய பேராதனைப் பல்கலைக்கழக நூலகத்தின் தலைமை நூலகராக அண்மையில் பதவி உயர்வுபெற்ற மகேஸ்வரன் கடந்த முப்பது ஆண்டுகளாக அங்கு உதவி நூலகராகவும் சிரேஷ்ட நூலகராகவும் பணிபுரிந்து வந்திருக்கிறார். அவருடைய முயற்சியினால் நூலகத் தமிழ்ப்பிரிவு விரைவாக வளர்ச்சி பெற்றது. இன்று சுமார் ஒன்றரை இலட்சம் தமிழ் நூல்கள் இங்கு உள்ளன. அவற்றுள் கணிசமான பகுதி. குறிப்பாகப் புதிய நூல்கள் மகேஸ்வரன் காலத்தில் சேர்க்கப்பட்டவை என்பது குறிப்பிடத் தக்கது.

பல்கலைக்கழக நூலகர் பதவி என்பது ஒரு பேராசிரியருக்கு நிகரான பதவியாகும். அதற்குத் தன்னைத் தகுதியாக்கிக் கொண்டவர் நண்பர் மகேஸ்வரன். ஆய்வுத் துறையில் தொடர்ச்சியாக ஆர்வத்துடன் ஈடுபட்டுவந்திருக்கிறார். இதுவரை தமிழிலும் ஆங்கிலத்திலும் பதினைந்து நூல்கள் வெளியிட்டுள்ளார். ஏராளமான ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளார். சர்வதேச ஆய்வு மாநாடுகளில் பங்குபற்றியுள்ளார். அவ்வகையில் அவரது ஆய்வுப் பங்களிப்பு நிறைவானது எனலாம்.

நண்பர் மகேஸ்வரன் ஒரு சமூக சேவையாளருமாவார். மலையக மக்களின் முன்னேற்றத்துக்காக அவர் பல வகையில் உழைத்து வந்திருக்கிறார். பல சமூக அமைப்புகளில் இணைந்து செயற்பட்டிருக்கிறார். ஒரு பத்திரிகையாளர் என்றவகையிலும் அவருடைய பணி சிறப்பானது.

கண்டிவாழ் மக்கள் அவருடைய மணிவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடும் இச்சந்தர்ப்பத்தில் நானும் அவர்களுடன் இணைந்து நண்பர் மகேஸ்வரன் இன்னும் நீண்டகாலம் அரோக்கியத்துடன் வாழ்ந்து மேலும் தன்பணியைத் தொடர வேண்டும் என்று வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

பேராசிரியர் எம். ஏ. நுஃமான்

படங்களும் தகவல்களும்
இக்பால் அலி

மகேஸ்வரன் எனும் நண்பனும் நானும்

நட்பு என்பதற்கு திருவள்ளுவர் பல்வகையான வரை விலக்கணங்களைக் கூறுவார். அவ்வாறான வரைவிலக்கணங்களின் கூட்டுக்கலவையான நண்பன் இராசையா மகேஸ்வரனை நான் பார்க்கிறேன். மகேஸ்வரனுக்கும் எனக்குமான உறவு சுமார் 30 வருடங்களுக்கு மேலானது. பேராதனையில் அவரைக் கண்டநாள் முதல் ஏதோ வகையில் எனக்கும் அவருக்குமான நட்பு உதயமானது. இருவரும் ஒரே இராசிக்காரர். பெயரும் அப்படியே. அதனால்தானோ என்னவோ அந்த நட்புக்கு உரம் கிடைத்தது. அது இன்றுவரை நீள்கிறது.

நானும் மகேஸ்வரனும் பல தளங்களில் ஒன்றாக இயங்கியுள்ளோம். எமது துறையினுடைய சகல நடவடிக்கைகளிலும், கருத்தரங்குகளிலும் நான் துறைத் தலைவராக இருக்கும் போது பங்கும், பகிர்வும் செய்திருக்கிறார். நானும் அவரும் சர்வதேச கருத்தரங்குகளில் பங்குபற்றுவதற்காக லண்டன், மலேசியா, இந்தியா, சிங்கப்பூர் முதலிய நாடுகளுக்குச் சென்றுள்ளோம். இந்தியாவில் என்னுடைய நண்பர்கள் எல்லோரும் மகேஸ்வரனின் நண்பர்கள் ஆயினர். மகேஸ்வரன் பல்கலைக்கழகத்துள் மாத்திரமல்ல அதற்கு வெளியேயும் பல தளங்களில் இயங்குகின்றார். அடிப்படையில் அவர் ஒரு 'ஹொக்கி விளையாட்டு வீரர்' இதனால் இலங்கை ஹொக்கி விளையாட்டு அமைப்பின் முகாமையாளர், கண்டி வர்த்தக சங்கத்தின் பிரமுகர், பள்ளேகலயில் அமைந்துள்ள பல கோவில்களின் நிர்வாகசபை உறுப்பினர் என்னும் பல அமைப்புகளின் மதிப்புறு உறுப்பினர். இவையெல்லாம் அவருடைய நடத்தைக் கோலத்தால் கிடைத்தவை. அவர் பெரியோரை வியத்தலும் இலமே, சிறியோரை அதனிலும் இகழ்தலும் இலமே. எனும் சங்கப்புலவர் கணியன் பூங்குன்றனாரின் கோட்பாட்டின்வழி இயங்குபவர். அதனால் அவருக்கு யாவரும் சமமே. பெரியவர், சிறியவர் என்ற பேதம் அவருக்கு இல்லை.

மகேஸ்வரன் பற்றி பெருமிதம் கொள்ளக்கூடிய செய்தி ஒன்று உண்டு. அது அவர் பேராதனைப் பல்கலைக்கழக பிரதம நூலகர் ஆகியமை ஆகும். இலங்கைப் பல்கலைக்கழகம் அமைந்து ஒரு நூற்றாண்டு ஆகிவிட்டது. ஆயின் பேராதனை நூலகத்தில் பலர் சிறந்த உதவி நூலகராக கடமை புரிந்தனர். எனினும், அவர்களால் பிரதம நூலகராக முடியவில்லை. அதற்கு பல்வேறு காரணிகள் உண்டு. எனினும் காலம் கடந்து நண்பர் மகேஸ்வரன் நூலகத்தின் முதல் பிரதம நூலகர் ஆனமை நான் மாத்திரமன்று தமிழ்ச் சமூகமே பெருமை கொள்ளக்கூடிய விடயமாகும். இந்த பேறு அவருக்கு சாதாரணமாக கிடைத்துவிடவில்லை. அவருடைய திறமை கருதியே அது வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

அவர் அமுதவிழா, நூற்றாண்டுவிழா என்பவை கண்டு இன்னமும் உயர்ந்த தளங்களிலும், வளங்களுடனும், நீடித்த ஆயுளுடனும் வாழவேண்டும் என்றும் வாழ்த்துகிறோம்.

பேராசிரியர். வ. மகேஸ்வரன்

போராதனை பல்கலைக்கழகத்தின் முதன்மை நூலகர் திரு. இராசையா மகேஸ்வரன் அவர்களை மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நன்கறிந்தும் பழகியும் இருக்கிறேன். அவரது சஷ்டி பூர்த்திவிழாவின் போது வெளியாகும் விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றினை அனுப்பி வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

போராதனை பல்கலைக்கழகத்தின் முதன்மை நூலகத்தில் உதவி நூலகர் என்ற பதவியேற்ற காலம் முதலாக அயராது பணியாற்றிப் பேராதனை பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் ஆசிரியர்கள் மற்றும் சக பணியாளர்கள் அனைவருக்கும் நம்பிக்கைக்குரிய நூலகராக செயற்பட்டு பெருமை பெற்றுக்கொண்டார். தமிழ், ஆங்கில மொழிகளில் மட்டுமல்லாது சிங்களத்திலும் தனது மொழியாற்றலை மேம்படுத்திக் கொண்டதால் பல்கலைக்கழக சமூகத்தின் அனைத்து சமூகத்தினரதும் தரப்பினரதும் நம்பிக்கை, அங்கீகாரம் உறவு ஆகியவற்றினை வளர்த்து தனது ஆளுமையினால் தனது வளர்ச்சியினை சிறப்புற உறுதி செய்துகொள்வது அவருக்கு சாத்தியமாயிற்று. எழுபத்தைந்து வருடகால போராதனை பல்கலைக்கழக வரலாற்றில், முதன் முதலாக ஒரு சிறுபான்மை இனத்தினைச் சார்ந்த ஒருவர், அதன் பிரதான நூலகதின் பிரதம நூலகர் பதவியினை தனதாகிக் கொண்ட வரலாற்றுச் சாதனையாளர் ஆவார். மகேஸ்வரன் எனது முன்னாள் மாணவர் என்பதுடன் பின்னாளில் எனது நண்பர் என்பதில் பெருமகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். மகேஸ்வரன் தனது பணிகளையும் சேவைகளையும் தொடர்ந்தும் திறம்படவும் முழுமையாகவும் ஆற்ற அவருக்கு சிறந்த ஆரோக்கியத்தினையும் நீண்ட ஆயுளையும் தந்து அருளுமாறு எல்லாம் வல்ல குறிஞ்சி குமரனைப் பிரார்த்திக்கிறேன்.

மா.செ.மூக்கையா
முன்னாள் புவியியல் போராசிரியர்
முன்னாள் புவியியல் துறைத்தலைவர்
முன்னாள் கிழக்கிலங்கை பல்கலைக்கழக துணைவேந்தர்

நூலகர் மேதைக்குப் பல்லாண்டு கூறுவோம்

ஆண்டொன்று போனால் அகவை ஒன்று போகும். அந்த வகையில் அகவை அறுபது விரும்பினாலும் சரி விரும்பாவிட்டாலும் சரி அது வந்தே தீரும். ஆனால் அந்த அறுபது அகவைக்குள் சாதித்தவைகள் எவை? இதற்கான விடை பெறுமதியாக இருக்கும் போதுதான் அகவை அறுபது என்பதும் ஒருவருக்குப் பெருமையை அளிப்பதாக இருக்கும். இந்தப்பெருமை, மகேஸ்வரன் அவர்களுக்கு நிறையவே உண்டு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அகவை அறுபதில் காலடி எடுத்து வைத்து மணிவிழாக் காணும் மகேஸ்வரன் கண்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவருடைய மனைவியின் பெயர் கோமதி. இவர்களுக்கு இரண்டும் ஆண் பிள்ளைகள். இவர் வர்த்தகக் குடும்ப பின்னணியை கொண்டிருந்தபோதிலும் பிற்காலத்தில் கல்வி கற்ற கல்விக்குடும்பமாக இன்று மிளிர்கின்றது இந்தக்குடும்பம்.

மகேஸ்வரன் புவியியற்துறை மாணவனாக பேராதனைப் பல்கலைக்கழக புவியியல் துறையில் கற்கும்பொழுது நான் அவரது விரிவுரையாளராக இருந்தேன். அவரது வளர்ச்சி பற்றி நான் நன்கு அறிவேன். புவியியல் மாணவனாக இருந்த காலத்திலேயே தமிழ்ச் சங்க செயலாளராக, விளையாட்டு வீரனாக, விளையாட்டுக்குழுத் தலைவராக, பொது சேவையாளனாக, மாணவத் தலைவனாக அவரது செயற்பாடுகளை மிக அருகில் இருந்தே அவதானித்திருக்கின்றேன். பல விடயங்களில் அவரது சேவைகளை மனதார பாராட்டி இருக்கிறேன்.

அவர் இன்னும் பல சேவைகள் செய்து மக்கள் தொண்டனாக, ஆன்மீகவாதியாக, நீடூழிவாழ வேண்டுமென மனதார வாழ்த்துகிறேன்.

பேராசிரியர் வை. நந்தகுமார்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மாணவநிலையிலும் பின் உத்தியோக நிலையிலும் என்னோடு தொடர்புபட்டு, என்றும் என் மனதுக்கு இனியவராக விளங்கும் இராசையா மகேஸ்வரன், மணிவிழா காணும் நிலையில், அவரைச் சூழவுள்ள சமூகம் அதனை உவப்போடு கொண்டாடுகின்றமை கண்டு பேருவகை எய்துகிறேன். இவர் பல்கலைக்கழக மாணவர் காலத்தில் மாணவர் சங்கங்களில் செயற்பாட்டு அங்கத்தவராக செயற்பட்டவர். மாணவர்களுக்கும், விரிவுரையாளர்களுக்குமிடையில் கிரிக்கெட் போட்டிகளை ஏற்பாடு செய்து ஆசிரியர்களுடனான நல்லுறவினை பேணுவதற்கு வழிவகுத்தவர். மகேஸ்வரன், இன்று பேராதனைப் பல்கலைக்கழகத்தின் எட்டாவது பிரதம நூலகராக விளங்குகிறார். பழமையும் பாரம்பரியமும் உடையதான அப்பல்கலைக்கழகத்தில் பிரதம நூலகர் பதவிவகிக்கும் சிறுபான்மைச் சமூகம் சார்ந்த முதல் நபர் என்ற பெருமையோடு மணிவிழாக் காணும் வாய்ப்பு அவருக்கு கிடைத்தமை மகிழ்ச்சியைப் பன்மடங்காக்குகின்றது.

மகேஸ்வரன் எய்துகிற எல்லா நலன்களும் அவரைப் போலவே எனக்கும் மகிழ்ச்சி தருவனவாகும். பல்கலைக்கழக வாழ்வில் இனிய பண்புகளோடு அவர் ஆற்றிய பயன்மிக்க பணிகள் என் உள்ளத்தில் அழியா இடம்பிடித்துள்ளன. இலங்கையின் அரசியல் நெருக்கடிகள் இனக்கலவரங்கள் காரணமாக தமிழ் மாணவர் தொகை குறைந்திருந்த மாணவர்களும் உற்சாகம் குன்றியிருந்த நிலையில் பேராதனைப் பல்கலைக்கழக வரலாற்றில் தடம் பல பதிந்திருந்த தமிழ்ச் சங்கமும் செயற்பாடு குன்றி சோபை இழந்து காணப்பட்ட காலத்தில் அதன் பெருந்தலைவர் என்ற நிலையில் நானும் உள்ளம் உடைந்திருந்த வேளையில் 1986 இல் புவியியல் சிறப்பு மாணவனாக இருந்த மகேஸ்வரன் தமிழ் பேசும் மாணவர்களை அணி திரட்டி சங்கத்தை புதிய உத்வேகத்தோடு செயற்படுத்துவதில் காட்டிய அக்கறை என்றும் என் மனதைவிட்டு அகலாது. தான் தன் குடும்பம் தான் கற்ற பாடசாலை—பல்கலைக்கழகம் தொழில் ஸ்தானம் என்று அனைத்துத் தரப்புக்கும் நன்மையும் பெருமையும் சேர்க்கும் வகையில் பயன் தூக்காது அவர் ஆற்றும் பணிகளின் நயம் தூக்கின் அவர் சார்ந்த சமூகத்தால் அவரைக் கொண்டாடாது இருத்தல் இயலாது. அந்தச் சமூகத்துள் ஒருவனாக நின்று ஆரோக்கியத்தோடும் மகிழ்ச்சியோடும் நீண்ட ஆயுளோடும் கூடிய நிறைவாழ்வு வாழ மகேஸ்வரனை மனதார வாழ்த்துகிறேன்.

தகைசார் பேராசிரியர் சி. தில்லைநாதன்

கொவிட் 19 இற்கு பிந்தைய காலத்தில் புலம் பெயர் தொழிலாளர்களின் சமூக நீதி மற்றும் ஊதியத் திருட்டை நிவர்த்தி செய்வதற்கான எண்ணக்கரு

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு (SLBFE) கிடைத்துள்ள தரவுகளின்படி, 2021 பெப்ரவரி மாதத்தின் நிலவரப்படி, ஊழியர்களை ஏற்றுக்கொள்ளும் பிரபலமான நாடுகளில் இருந்து மொத்தம் 39,641 ஊழியர்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். இவ்வாறு திருப்பி அனுப்பப்படும் போது ஒப்பந்த காலத்தை நிறைவு செய்துள்ள ஊழியர்களுக்கு முன்னுரிமை அளித்து சுழற்சி அடிப்படையில் இவர்கள் திருப்பி அனுப்பப்பட்டதுடன் ஆவணப்படுத்தப்படாத தொழிலாளர்கள் இறுதியாகவே கவனத்திற் கொள்ளப்பட்டனர்.

ஊழியர்களை அனுப்பும் பிற நாடுகளைப் போலவே, இலங்கையும் 2020 மற்றும் 2021 இல் கோவிட் - 19 பெருந்தொற்று நிலவிய காலப்பகுதியில் ஊழியர் புலம்பெயர்வு தொடர்பான பல சவால்களை எதிர்கொண்டது. பெருந்தொற்று என்ற போர்வையில் சம்பளத்தை செலுத்துவதற்கு மறுப்பு தெரிவிக்கப்பட்டமை அவற்றில் குறிப்பிடத்தக்கதொரு விடயமாக அமைந்தது. இதனால் புலம்பெயர்ந்தோர் நிர்பந்தத்திற்கு உள்ளாகி பணியாற்ற வேண்டியதொரு நிலை தோன்றியது. அநேகமான ஊழியர்களுக்கு மேலதிகமாக பல மணித்தியாலங்கள் பணிபுரிய நேர்ந்ததுடன் அவ்வாறு மேலதிமாக பணிபுரிந்த நேரத்திற்கு மேலதிக நேரக் கொடுப்பனவுகள் எதுவும் வழங்கப்படவில்லை. மேலும், சிலரின் ஊதியம் குறைக்கப்பட்டதுடன் சிலர் ஊதியமின்றி பணிநீக்கம் செய்யப்பட்டனர்.

புலம்பெயர்ந்த ஊழியர்கள் தங்கள் கடின உழைப்பின் மூலம் ஈட்டிய ஊதியத்தை இந்நாட்டிற்கு அனுப்பிவைப்பதன் மூலம் அந்நிய செலாவணியை இந்நாட்டிற்கு ஈட்டித்தருவதில் முக்கிய பங்கு வகித்துள்ளனர். இருப்பினும், இவர்களின் இத்தகைய பங்களிப்பு அவ்வாறாக அங்கீகரிக்கப்படுவதில்லை என்பதை கோவிட் 19 காலகட்டத்தில் தெளிவாகத் காணக்கிடைத்தது. இலங்கை தொடர்ந்தும் குறைந்த ஊதியத்திற்கு பணிபுரியும் ஊழியர்களின் உழைப்பில் தங்கியுள்ளதுடன், இந்த ஊழியர்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) ஊதியத் திருட்டு

புலம்பெயர்ந்த ஊழியர்களை பொருத்தமட்டில் ஊதிய திருட்டு ஒன்றும் புதிதான விடயமல்ல என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். இந்த பெருந்தொற்றுக்கு நீண்ட காலத்திற்கு முன்பே அவர்கள் இந்த முறைகேட்டினை எதிர்கொண்டனர். ஆயினும் இந்த பெருந்தொற்று அவர்களின் சூழ்நிலைகளையும் அவர்களின் அவலத்தையும் மேலும் மோசமாக்கியது.

தொழில்தருநர்கள் தங்கள் ஊழியர்களை அதிகமாக வேலை செய்ய வைப்பதற்கு தொற்றுநோயை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டதுடன் எல்லைகள் மூடப்பட்டிருந்ததால் அவர்களை அச்சுறுத்தல் நிலைக்குள் வைத்தனர். அவர்களுக்கான ஊதியம் மறுக்கப்பட்ட நிலையில் வேறு வழியின்றி பலர் உணவு மற்றும் தங்குமிடத்திற்காக உழைத்தனர். இராஜதந்திர உதவி கிடைக்காத நிலையில் அது மன அதிர்ச்சியை ஏற்படுத்தும் ஒரு காலகட்டமாக இருந்தது.

(இ) சமூக பாதுகாப்பு

இந்த ஊழியர்கள் பேச்சுவார்த்தைகளின் மூலம் ஊதியத்தை நிர்ணயம் செய்ய இயலாத குறைந்ததொரு ஊதியத்தின் கீழ் மிகவும் ஆபத்தான மற்றும் மனிதாபிமானமற்ற நிலைமைகளின் கீழ் தொழில்புரிவதற்கு நிர்பந்தக்கப்பட்ட நிலைமைகளின் கீழ் அவர்களின் சமூக பாதுகாப்பு மறுக்கப்படும் நிலைமைகளுக்கு உள்ளாகினர். அவர்களுக்கு தங்களின் வறுமையை எதிர்கொள்ள இயலாமல் போனதுடன் அவர்களின் சமூக பாதுகாப்பும் மறுக்கப்பட்டது.

இலக்கு நாடுகளிலிருந்து சொந்த நாடுகளுக்கு திருப்பி அனுப்பப்படுதல் பெருமளவில் நடைபெற்றுக் கொண்டிருந்த கோவிட் காலப்பகுதியில், இலங்கை புலம்பெயர் ஊழியர்களுக்கு நாடு திரும்புவதற்கும் அதிக கட்டணம் செலுத்த வேண்டியிருந்தது. நாடு திரும்பவருபவர்கள் உள்ளாக வேண்டியிருந்து.கட்டாய 14 நாள் தனிமைப்படுத்தல் மற்றும் விமானக் கட்டணம் ஆகியவை அவர்கள் செலுத்த வேண்டிய மேற்படி கட்டணத்தின் ஒரு பகுதியாக அமைந்திருந்தது. அவர்களுக்கு எவ்வித நிதி ரீதியிலான சலுகைகளும் வழங்கப்படவில்லை. இந்நிலையின் கீழ் அவர்கள் பயணம் செய்வதற்கு கடன் வாங்க நேரிட்டதால் மேலும் கடன் சுமையில் விழுந்தனர்.

குறிப்பாக குறைந்த ஊதியம் பெறும் புலம்பெயர் ஊழியர்கள் நவீன அடிமைத்தனம் மற்றும் தொடர்ச்சியான கடனுக்கு உள்ளாகி அவர்கள் மனித விற்பனையில் ஈடுபடுபவர்களினதும் அத்தகைய விற்பனை கும்பல்களினதும் இலக்காக மாறும் நிலைக்கு தள்ளப்பட்டதுடன் அவர்களின் சமூகப் பாதுகாப்பு நலன்கள் மிக மோசமாக மறுக்கப்பட்டன.

தொற்றுநோயின் உச்சக்கட்டத்தின் போது, பல்லாயிரக்கணக்கான புலம்பெயர் ஊழியர்கள் தங்கள் தொழில்களையும் தங்குமிடம், உணவு மற்றும் சுகாதார வசதிகள் போன்ற ஒப்பந்த சலுகைகளையும் இழந்ததால் அனுசரணை நாடுகளில் தங்கள் சமூக அந்தஸ்தை இழந்தனர்.

(உ) பாரபட்சமான கொள்கைகள்

நாடு தற்போது வீழ்ந்துள்ள மிகவும் பலவீனமான பொருளாதார நிலையை முகாமை செய்துகொள்வதற்காக வெளிநாட்டு ஒதுக்கத்தை மேம்படுத்த வேண்டிய அவசரத்தின் காரணமாக, புலம்பெயர்பவர்களின் எண்ணிக்கையை அதிகரித்துக்கொள்வதற்கு இலங்கை அரசாங்கம் சமீபத்தில் சில பாரபட்சமான கொள்கைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

துணை பிராந்திய சந்தையுடனும் ஊழியர்களை அனுப்பும் பிற சந்தைகளுடனும் போட்டியிட வேண்டுமாயின் அதிக எண்ணிக்கையிலான ஊழியர்களை அனுப்புவதற்கு பாதகமாக அமையக்கூடிய குறைந்தபட்ச ஊதியம் அல்லது ஊழியர்களின் ஊதியத்தில் வாழ்கை ஊதிய வரம்பு ஆகியவை இருக்கக்கூடாது என அரசாங்கம் கருதுகிறது. இவ்விடயமானது நவீன அடிமைத்தனத்தை ஊக்குவிப்பதாக அமைகின்றது.

ஆட்சேர்ப்பு செலவுகள் எவ்விதத்திலும் குறைவடையவில்லை. புலம்பெயர்வதற்கு எதிர்பார்த்துள்ளவர்கள் தென் கொரியா மற்றும் பிற பிரபலமான இடங்களுக்கான வேலைகளுக்கு அதிக கட்டணம் செலுத்த வேண்டிய நிலை காணப்படுகின்றது. அவர்கள் புறப்படுவதற்கு முன்பே, வங்கிகளுக்கும் பிற பணக் கடன் மூலங்களுக்கும் பெரும் கடனாளிகளாக மாறியுள்ளனர். மருத்துவக் கட்டணம் ஒருதலைப்பட்சமாக GAMCA அதிகாரிகளால் பல மடங்கு உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் ஆண் ஊழியர்கள் பெரும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

ஆட்சேர்ப்பு முகவர்கள் மற்றும் அவர்களின் இடைத்தரகர்கள் மற்றும் ஊழல்மிக்க அரச அதிகாரிகள் மத்தியிலும் கூட பரவலான முறையில் ஊழல் காணப்படுவதால் வீசா மோசடி தொடர்பான விடயங்களுக்கு காரணமாக அமையும் விடயங்கள் நிவர்த்தி செய்யப்படவில்லை. அதிக ஆட்சேர்ப்புக் கட்டணங்கள் மற்றும் பிற பாரபட்சமான கொள்கைகள் காரணமாக புலம்பெயர்வோர் வருகை வீசாக்களில் பயணம் செய்து பின்னர் வேலை வீசாவாக அவற்றை மாற்றிக்கொள்ள விரும்புகிறார்கள். வருகை வீசாவில் இருக்கும் ஊழியர்களை கண்டிப்பதற்காக அரசாங்கம் அச்சுறுத்துவதையும் காணக்கூடியதாக உள்ளது. ஆகவே இவ்வாறான வருகை வீசா மோசடியை தடுத்து நிறுத்துவதற்கும் ஊழல் செய்பவர்களை சட்டத்தின் முன் கொண்டுவருவதற்கும் அரசாங்கத்திற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் மிகவும் முக்கியமானதாகும்.

(ஊ) பிரச்சார நோக்கங்கள்

ஊழியர் புலம்பெயர்வு என்பது ஒரு உலகளாவிய நிகழ்வாகும். இது குறிப்பாக தங்களது சொந்த நாட்டில் வலுவான மற்றும் நம்பிக்கைக்குரிய சமூக மற்றும் பொருளாதார கொள்கைகள் இல்லாத நிலை காணப்படும் போது புலம்பெயர் ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் தேவைகள் மற்றும் அபிலாஷைகளை நிறைவேற்றுகின்றது. புலம்பெயர்ந்தோர் பணப் பரிமாற்றங்கள் ஊடாகவும் அவர்கள் வெளிநாடுகளில் தாங்கள் பெற்றுக்கொண்ட திறன்களை சொந்த நாட்டிற்கு வழங்குவதன் மூலமும் நாட்டின் பொருளாதாரத்திற்கு பெரும் பங்களிப்பை வழங்குகிறார்கள். அது மட்டுமின்றி அவர்கள் தாங்கள் சென்றடையும் இலக்கு நாடுகளின் அபிவிருத்திக்கும் பங்களிக்கின்றனர்.

இழிவான சூழ்நிலையில் நீண்ட நேரம் வேலை செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதுடன் எப்போதும் அவர்களுக்கு குறைவான ஊதியமே வழங்கப்படுகின்றது. அவர்கள் துஷ்பிரயோகத்திற்கும் மனித விற்பனைக்கு உள்ளாவதற்கும் வாய்ப்புகள் காணப்படுகின்றன. அவ்வாறிருப்பினும் அவர்கள் தங்களின் வறுமையலிருந்தும் கடன் பொறியிலிருந்தும் தப்பிக்க முடியும் என்ற நம்பிக்கையில் தொழில் தேடுகின்றனர்.

IMD இன் இவ்வாண்டுக்கான பிரச்சார நோக்கமானது, புலம்பெயர் ஊழியர்களின் சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக நீதி மறுக்கப்படுதல் மற்றும் அவர்களின் ஒப்பந்தங்கள் மீறப்படுதல் ஆகியவற்றின் ஊடாக அவர்கள் முகம்கொடுக்கும் பல்வேறு முரண்பாடுகளை அரசாங்கத்திற்கு எடுத்தியம்பி அவற்றை நிவர்த்தி செய்வதற்கு ஆதரவு திரட்டுவதாக அமைகின்றது.

புலம்பெயர் ஊழியர்களின் புலம்பெயர் நிலை எது எவ்வாறாக இருப்பினும் புலம்பெயர் செயற்பாடு முழுவதிலும் அவர்களின் பாதுகாப்பு, உரிமைகள் மற்றும் அவர்களுக்குரிய சிறப்புரிமைகள் மற்றும் நலன்களை உறுதிப்படுத்துவதன் ஊடாக குறிப்பாக குறைந்த தேரச்சியுடைய ஊழியர்கள் உள்ளிட்ட புலம்பெயர் ஊழியர்களின் மான்பு மற்றும் கௌரவத்தை மீண்டும் நிலைநிறுத்துதல்.

ஆட்சேர்ப்பு முகவர் மற்றும் தூதரகங்களில் உள்ள ஊழியர்கள் பிரிவுகள் உட்பட நாட்டில் ஊழியர் புலம்பெயர்வு சொல்லாடலுக்கு பொறுப்பான பலதரப்பட்ட முன்முயற்சிகள் மற்றும் நிறுவனங்களில் அர்ப்பணிப்பு இருப்பதை உறுதி செய்தல்.

(எ) பிரச்சார யோசனைகள்

தேசிய மற்றும் துணை தேசிய அரசாங்கங்கள் மற்றும் அவற்றின் நிர்வாக நிறுவனங்களுடான கலந்துரையாடல் மற்றும் சமர்ப்பணத்திற்காக ஆதாரித்து வாதாடும் சுருக்கமொன்றை தயாரித்துக்கொள்ளவும்.

மாவட்ட மட்டத்தில் ஊடக சந்திப்புகளை நடாத்தி சமூக ஊடகங்கள் உட்பட ஊடக நிறுவனங்களில் இச்செய்தி உள்வாங்கப்படுவதற்கும் அவர்களின் அர்ப்பணிப்பைப் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளவும்.

ஊதியம் சார்ந்த விடயத்தில் நீதி மற்றும் சமூகப் பாதுகாப்பு ஆகிய விடயங்களை விசேடமாக வலியுறுத்தும் விதத்தில் ஊழிய புலம்பெயர்வு அல்லது புலம்பெயர் ஊழியர்கள் தொடர்பான முக்கியமான அம்சங்களை எடுத்தியம்பும் செய்திகளை 3 தேசிய/உத்தியோகபூர்வ மொழிகளில் வெளிப்படுத்தும் இணையவழி போஸ்டர் மற்றும் ஸ்டிக்கர் பிரச்சாரத்தை விருத்தியாக்கவும்.

IMD2022 பற்றிய ஒரு பதாகை பிரச்சாரத்தை உருவாக்கி அவற்றை நாட்டின் மூலோபாய இடங்களில் காட்சிப்படுத்துவதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளவும்.

புலம்பெயர் ஊழியர்கள் விரும்பும் மாற்றம் மற்றும் உத்தரவாதங்கள் குறித்து முக்கிய பங்கீடுபாட்டாளர்களுக்கு ஒரு வீடியோ செய்தியை உருவாக்கவும்.

அனுமதி கிடைக்குமாயின் நாட்டின் முக்கிய மூலோபாய இடங்களில் பதாதைகளை எடுத்துச் செல்லவும்.

(ஏ) முன்மொழியப்படும் பிரச்சார வாசகங்கள்

முன்மொழியப்படும் வாசகங்கள் இணையவழி/சமூக ஊடக தளங்களில் பயன்படுத்துவதற்காக உருவாக்கப்படும். அவை சிங்களம் மற்றும் தமிழில் மொழிபெயர்க்கப்படும். பங்குதார அமைப்புக்கள் தமது முக்கிய பங்கீடுபாட்டாளர்களுக்கு குறிப்பாக மாவட்ட மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய உள்ளூர் பங்குதாரர்களுக்கு இந்த பிரச்சார வாசகங்களை அனுப்பிவைக்கமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

1. ஊதியத் திருட்டு

ஊதியத் திருட்டு ஒரு குற்றமாகும்.

அதன் விளைவுகளைப் புறக்கணித்தல் அதைவிட பாரதூரமான குற்றமாகும்.

- உலக ஊழிய சந்தையில் குறிப்பாக குறைந்த தேர்ச்சி மற்றும் குறைந்த ஊதியம் பெறும் புலம்பெயர் தொழிலாளர்கள் மத்தியில் ஊதிய திருட்டு அதிகரித்து வருகின்றது.
- கோவிட் பெருந்தொற்று காலத்தின் போது தொழில்தருநர்கள் இந்த நிலைமையை தமக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டதால் நிலை மிகவும் மோசமடைந்தது.
- புலம்பெயர் ஊழியர்கள் திருப்பி அனுப்பப்பப்பட்ட போதும் சமூகத்தில் மீண்டும் ஒருங்கிணைக்கப்பட்ட போதும் எந்தவிதமான கருணை அடிப்படையிலான கொடுப்பனவோ அல்லது இழப்பீடோ வழங்கப்படவில்லை.
- பெரும்பாலும் வெறுங்கையுடன் வீட்டிற்கு வருதல் அவர்களை கடன் பொறியில் விழச் செய்தது.

ஊதியத் திருட்டை எதிர்த்து நிற்கவும், புலம்பெயர் ஊழியர்களின் அடிப்படை உரிமைகளுக்காகப் செயற்படவும் எங்கள் அரசாங்கங்களை நாங்கள் வலியுறுத்துகிறோம்.

2. குறைந்தபட்ச வாழ்க்கை ஊதியம்

புலம்பெயர்ந்த ஊழியர்களுக்கான குறைந்தபட்ச வாழ்க்கை ஊதியத்தை மறுப்பதானது உரிமை மீறலாகும்.

- இது உழைப்பை நவீன அடிமைத்தனத்திற்கு விற்பதற்கு சமமானதாகும்.
- தற்போதைய பொருளாதார மற்றும் அரசியல் அமைதியின்மை காரணமாக சிறந்ததொரு வாழ்க்கைக்கான சிறந்ததொரு இடத்தை நாடி மக்கள் வெளியேறுகின்றனர்.
- புலம்பெயர் ஊழியர்கள் தங்கள் வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்காக பாதுகாப்பான ஊதியத்தை எதிர்பார்க்கின்றனர்.
- உழைப்பின் கண்ணியம் சம்பந்தப்பட்ட அனைவராலும் மதிக்கப்பட வேண்டும்.
- குறைந்தபட்ச வாழ்க்கை ஊதியத்தை மறுத்தலானது ஒழுங்கற்ற மற்றும் முறைசாரா புலம்பெயர்வுக்கு வழி வகுக்கும்.

குறைந்தபட்ச வாழ்கை ஊதியத்தை ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகளில் மீண்டும் நிலைநிறுத்துமாறு நாங்கள் அரசாங்கத்தை கோருகின்றோம்.

3. மனித விற்பனை

மனித விற்பனையில் ஈடுபடுபவர்கள் புலம்பெயர்வு சொல்லாடலில் ஒரு இழுக்காகும்.

அவர்கள் ஒரு நாட்டின் புலம்பெயர்வு சார்ந்த விடயத்தின் முன்னேற்றம் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் ஒரு நாடு கொண்டுள்ள நன்மதிப்பு ஆகியவற்றை இழிவுபடுத்துகின்றனர்.

- அவர்கள் இருதரப்பு அல்லது பலதரப்பு பேச்சுவார்த்தைகளை மட்டுப்படுத்தி நாட்டிற்கு அவப்பெயரை ஏற்படுத்துகின்றனர்.
- எவ்வித அச்சமும் தயவும் இல்லாமல் அவர்களுக்கெதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு சிறைத் தண்டனை வழங்கப்படுதல் வேண்டும்.
- பாதிக்கப்பட்டவரின் பாதுகாப்பு மற்றும் சட்ட ஆலோசனைக்கு உத்தரவாதம் அளித்தல் அரசின் பொறுப்பாகும்.
- பாதிக்கப்பட்டவர்களுக்கு சமூகப் பாதுகாப்பு மற்றும் பொருளாதார வாழ்வாதாரத்தை உறுதி செய்வது அரசின் பொறுப்பாகும்.

புலம்பெயர் ஊழியர்களின் நலன்களைப் பாதுகாப்பதில் சட்டங்கள் மற்றும் சர்வதேச நெறிமுறைகளுக்கு இணங்கியொழுகி மனித விற்பனைக்கு பதிலளிக்குமாறு அரசாங்கத்தை நாங்கள் வலியுறுத்துகிறோம்.

4. புலம்பெயர்ந்த நிலையின் அங்கீகாரம்

புலம்பெயர்ந்த ஊழியர்களின் புலம்பெயர்ந்த நிலை எது எவ்வாறாக இருப்பினும் அதனைப் பொருட்படுத்தாமல் அவர்கள் அனைவரையும் அங்கீகரிக்கவும்.

ஆவணப்படுத்தப்படாமை அங்கீகாரம் வழங்காமைக்கு ஒரு காரணமாக இருத்தல் கூடாது.

- உதவியற்ற மற்றும் பாரபட்சமான கொள்கையின் காரணமாக புலம்பெயர்வோர் முறைசாரா வழிகளில் பயணிக்கின்றனர்.
- ஒப்பந்த மீறல்கள் மற்றும் பதிலளிக்காத உதவி பொறிமுறைகள் அவர்களை ஆவணப்படுத்தப்படாதவர்களாக மாற்றுகின்றன.
- அவர்களின் சமூக மற்றும் சட்டப் பாதுகாப்பை மறுப்பதானது அவர்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதாகும்.

புலம்பெயர்ந்த ஊழியர்களின் ஆவணப்படுத்தப்படாத நிலையை மதித்து அங்கீகரித்து அவர்கள் இன்னலில் உள்ள போது அவர்களின் தேவைகளுக்கு உதவியளிக்க அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அரசாங்கத்தை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

5. நாடு திரும்புதல் மற்றும் மீள் ஒருங்கிணைப்பு

நாடு திரும்புதல் மற்றும் மீள் ஒருங்கிணைப்பு ஆகியவை திருப்பி அனுப்புதல், ஆட்குறைப்பு மற்றும் நாடு கடத்தல் கண்ணோட்டத்தலிருந்து புரிந்து கொள்ளப்படுதல் வேண்டும்.

அரசின் தலையீடுகளின் போது கோவிட் தொற்றுநோய் அனுபவத்திலிருந்து கற்றுக் கொள்ளுதல்.

- நாடு திரும்பும் அனைத்து புலம்பெயர்ந்த ஊழியர்களையும் மீள் ஒருங்கிணைப்பு செயற்பாட்டில் வகைப்படுத்தாமல் சமமாக அங்கீகரிக்கவும்.
- அவர்களின் சமூக நலன்கள் எதையும் மறுக்காதீர்கள்.
- வேலை வாய்ப்புகள், வாழ்வாதார வாய்ப்புகள் மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றை செயலூக்கமுள்ள முறையில் வழங்குவதன் மூலம் மீள் ஒருங்கிணைப்பை சாத்தியமாக்குங்கள்.
- மீள் ஒருங்கிணைப்பில் பால்நிலையை ஒரு பிரச்சினையாக மாற்றிவிடாதீர்கள். சமூகத்திலும், சமூகத்தின் மத்தியிலும் பால்நிலை சமத்துவத்தை உருவாக்குங்கள்.

மீள் ஒருங்கிணைப்பு செயன்முறையில் அனைவரையும் உள்வாங்கியதும் முழுமையானதுமான கண்ணோட்டத்தை கொண்டிருக்கவும் பால்நிலை மற்றும் ஊழியர் வகைப்படுத்தல் சார்ந்த விடயங்களில் நாடு திரும்பிய புலம்பெயர்ந்தோருக்கு உதவியளிக்கவும் வேண்டுமென நாங்கள் அரசாங்கத்திற்கு அழைப்பு விடுக்கின்றோம்.

(ஐ) உத்தேச செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்

செயற்பாடு	ESCO மட்டக்களப்பு	SDF காலி	CDS கொழும்பு	கண்டி	Protect பதுளை	SWOAD அம்பாறை
எண்ணக்கரு குறிப்பினை விருத்தி செய்தல் மற்றும் மொழிபெயர்ப்பு	---	---	✓	---	---	---
பத்திரிகை கட்டுரைகளை வரைதல்	---	---	✓	---	---	---
மாவட்ட மட்டத்திலான ஊடகச் சந்திப்பு	✓	✓	---	✓	✓	✓
IMD 22' தொடர்பாக புலம்பெயர் சமூகத் தலைவர்களுடன் செயலமர்வு	✓	---	---	---	---	✓
பிரதான பிரச்சார வாசகங்களுடன் நிகழ்வு பதாதைகளை தயாரித்தல்	---	---	✓	---	---	---
பதாகைகளை அச்சிடுதல் மற்றும் மூலோபாய இடங்களில் காட்சிப்படுத்துதல்	✓	✓	---	✓	✓	✓
ஆதரித்து வாதாடும் இணையவழி போஸ்டர் பிரச்சாரத்தை மொழிபெயர்ப்புடன் வடிவமைத்தல்	---	---	✓	---	---	---
இணையவழி பிரச்சார செய்திகளை அனுப்புவதற்கு உங்கள் இணைய வலையமைப்புகளைப் பயன்படுத்துதல்	✓	✓	✓	✓	✓	✓
5 பிரச்சார வாசகங்கள் மற்றும் எண்ணக்கரு குறிப்பினை பற்றிய ஒளிப்பதிவுசெய்யப்பட்ட வீடியோ கிளிப்	✓	✓	---	---	---	---

மனமாற்றம் ஏற்பட்டால் வாழ்க்கையில் உயர்வு நிச்சயம்

இலங்கை நம்பிக்கை பங்காளர் அமைப்பின் ஸ்தாபகர் நோயல் அபிலாஷன்

தன்னம்பிக்கையினால் சாதனை படைக்கலாம்....

இலங்கை நம்பிக்கை பங்காளர் அமைப்பு தனது மூன்றாவது அகவையை நோக்கி பயணிக்கிறது...

ஒவ்வொரு மனிதனும் தனது இலட்சியத்தை எட்டுவதற்கும், அடைவதற்கும் தன்னம்பிக்கை முக்கிய காரணமாகும். இதற்கு மனப்பாங்கில் மாற்றம் ஏற்பட வேண்டும்.(Attitude Change).

ஒரு மனிதனுடைய இலட்சியங்கள் உயர்ந்தவையாக இருக்க வேண்டும். சுய நலத்துக்கு அப்பால் தமது சமூகத்துக்கும், உலகத்துக்கும் பயனுள்ளவையாக பெருமை தரக்கூடியதாக அமைய வேண்டும். மகாத்மா காந்தியுடைய இலட்சியம் இந்தியா சுதந்திரம் அடைய வேண்டும் என்பதே. அதற்காகவே அவர் தன்னம்பிக்கையோடு போராட்டத்தை தொடர்ந்தார். சோதனைகளிலும், வேதனைகளிலும் அவர் அவரது நம்பிக்கையில் தளர்ச்சி அடையவில்லை.

இவற்றால் அவரது தன்னம்பிக்கை மென்மேலும் வலிமை பெற்றது. இதேபோல உலகத்தில் சாதனை படைத்தவர்கள் தன்னம்பிக்கை மூலமாகவே இச்சாதனைகளை படைத்திருக்கிறார்கள். சமூக சேவையாளர்கள், வர்த்தகர்கள், விஞ்ஞானிகள், டாக்டர்கள் ஆகியோர் உட்பட இன்று பலதரப்பட்ட துறைகளில் கொடிகட்டிப் பறந்தவர்கள் உயர்ந்து நிற்பவர்கள் தன்னம்பிக்கையை அடித்தளமாகக் கொண்டவர்கள் ஆவார்கள்.

ஆகவே, இளைய சமுதாயத்தினர் சமூகத்திற்கும், நாட்டுக்கும், மனித குலத்திற்கும் பெரும் செயல்களை ஆற்றக்கூடிய இலட்சியங்களை மனதில் கொண்டு தன்னம்பிக்கையோடு செயற்பட்டால் வெற்றி நிச்சயம். இதன் அடிப்படையில் எமது சகோதரர்கள் வாழ்க்கையில் உயர்வதற்கு மனப்பாங்கில் மனமாற்றம் தேவை. எதனையும் சாதிப்பதற்கும் இயலும் என்ற தன்மை மனதில் வரவேண்டும்.

'இயலாமை' என்பது ஒன்றில்லை. அனைத்தும் முடியும் என்ற நிலைப்பாடு மனதில் தோன்றும்போது தான் மனிதன் சக்தியை அடைகின்றான். உயர்வடைகின்றான்.

இலங்கை நம்பிக்கை பங்காளர் அமைப்பு தனது மூன்றாவது அகவையை நோக்கி பயணிக்கும் இத்தருணத்தில் அதன் ஸ்தாபகரும், சமூக செயற்பாட்டாளருமான நோயல் அபிலாஷன் நாடெங்கிலும் உள்ள மாணவர்களின் கல்வி மேம்பாடு குறித்து அக்கறை செலுத்தி வருவதுடன். அவர்களுக்கான உபகரணங்களையும் வழங்கி வருகின்றார்.

மலையகத்தின் நுழைவாயிலான எட்டியாந்தோட்டையில் அங்குள்ள பெருந்தோட்டப் பகுதி மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கும் பொருட்டு பெருமளவிலான மாணவச் செல்வங்களை ஒன்றிணைத்து இன, மத பேதமின்றி மூன்று நாள் பயிற்சி செயலமர்வின் ஊடாக கல்வி சுற்றுலா மூலம் பலதரப்பட்ட விடயங்களை அவர்களின் மத்தியில் பகிர்ந்து கொண்டார். இதனோடு நின்றுவிடாமல் வறுமை கோட்டிற்கு கீழ்வாழும் மக்களுக்கு உலர் உணவு பொதிகளையும் வழங்கி வைத்துள்ளார்.

இத்தகைய நல் உள்ளம் கொண்ட சகோ. நோயல் அபிலாஷன் தன்னம்பிக்கையோடு செய்து வரும் அரும்பணிகளுக்கு பாராட்டுகளும், வாழ்த்துகளும் உரித்தாகட்டும். மாணவ சமுதாயத்தின் மத்தியில் தன்னம்பிக்கை வளர வேண்டும் அதுவே எமது நோக்கம் என்கின்றார் நோயல் அபிலாஷன்.

இலங்கை நம்பிக்கை பங்காளர் அமைப்பு தனது இனிய நத்தார் புதுவருட நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றது.

தேவதாஸ் சவரிமுத்து
சிரேஷ்ட ஊடக இணைப்பாளர்

கிழக்கின் குரல்

திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு சிறுநீரக சுத்திகரிப்பு இயந்திரம் கையளிப்பு

ரொட்டவெவ குறூப் நிருபர்

திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு 39 இலட்சம் ரூபா பெறுமதியான சிறுநீரக சுத்திகரிப்பு இயந்திரமொன்று நேற்று (22) உத்தியோகபூர்வமாகக் கையளித்து வைக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்டத்தில் சிறுநீரக நோயாளர்கள் அதிகளவில் காணப்படுவதால், அவர்களின் நலன் கருதி மேற்படி சிறுநீரக சுத்திகரிப்பு இயந்திரத்தை திருகோணமலை பொது வைத்தியசாலை பணிப்பாளர் ஜகத் விக்கிரமரத்னவிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசா வழங்கி வைத்தார்.

நாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள மருந்துத் தட்டுப்பாடு காரணமாக நோயாளர்கள் அவதியுறும் நிலையில் தமது 'சுவாசம்' வேலைத்திட்டத்தின் கீழ் 54ஆவது வைத்தியசாலையாக திருகோணமலை பொது வைத்தியசாலை தெரிவு செய்யப்பட்டு இவ்வியந்திரத்தை வழங்கி வைப்பதில் பெரு மகிழ்ச்சி அடைவதாக, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இதேவேளை, 370 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிப்பதற்குத் திட்டமிட்டுள்ள சிறுநீரக நோயாளர்களுக்கான தனியான பிரிவொன்றை தாம் ஆட்சிக்கு வந்தால் செய்து தருவதாகவும், அவர் உறுதியளித்தார்.

எதிர்காலத்தில் விசேட வைத்திய நிபுணர்கள் தங்குவதற்குரிய விடுதி வசதியையும் செய்து கொடுப்பதாகவும், அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹரூப் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பல்லி விழுந்த பசுப்பாலை அருந்திய ஐவர் வைத்தியசாலையில் அனுமதி

திருகோணமலையில் சம்பவம்

ரொட்டவெவ குறூப் நிருபர்

பல்லி விழுந்த பசுப்பாலை அருந்திய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் மயக்கமுற்ற நிலையில், திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக, அவ் வைத்தியசாலையின் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

திருகோணமலையின் உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அலஸ்தோட்டம் பகுதியில் நேற்று (22) இச்சம்பவம் இடம் பெற்றது.

இதன்போது ஒரு வயது, 4, 5, 9, 63 வயதுயடையவர்கள் இவ்வாறு பாதிக்கப்பட்டதாகவும் அவர்களுக்கு உரிய சிகிச்சை வழங்கப்பட்டு வருவதாகவும், அவர் தெரிவித்தார்.

பாட்டியானவர் பாலைக் காய்ச்சி சிறுவர்களுக்கு அருந்துவதற்கு கொடுத்து விட்டு, தானும் அருந்தியுள்ளார். இதனைத் தொடர்ந்து, மயக்கமானதொரு நிலை ஏற்படவும் பாலைக் காய்ச்சிய பாத்திரத்தை பார்த்த போது, அதில் பல்லி விழுந்து கிடந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

'என் நிலவே பாடல்' இறுவட்டு வெளியீட்டு விழா நாளை

மருதமுனை தினகரன் நிருபர்

மருதமுனை ஜெஸீலின் கவி வரிகள் மற்றும் இசையமைப்பில் 'என் நிலவே பாடல்' இறுவட்டு வெளியீட்டு விழா நாளை (24) மாலை 4 மணிக்கு மருதமுனை பொது நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலாநிதி சத்தார் பிர்தௌஸ் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதமஅதிதியாக பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராஜபுத்திரன் இராசமாணிக்கம், விசேட அழைப்பாளராக உலக அறிவிப்பாளர் பி.எச். அப்துல் ஹமீட் உள்ளிட்ட பலர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்திய சினிமாப் பாடலுக்கு நிகராக இலங்கை மருதமுனையிலிருந்து புது மெருகுடன் இப்பாடல் இறுவட்டு வெளிவரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஓட்டமாவடி உணவகங்களில் சோதனை நடவடிக்கை

கல்குடா தினகரன் நிருபர்

மட்டக்களப்பின் ஓட்டமாவடி பிரதேசத்திலுள்ள உணவகங்கள், பேக்கரிகள், இறைச்சிக் கடைகளில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது, சுகாதாரத்தைப் பேணாத பேக்கரி மற்றும் உணவகத்தை மூடியதுடன், அவற்றின் உரிமையாளர்களுக்கு ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினர் கடுமையான எச்சரிக்கை விடுத்தனர்.

இச்சோதனை நடவடிக்கையில் கடந்த 3 நாட்களாக ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினர் ஈடுபட்டனர்.

இதன்போது, சுத்தமில்லாமல் உணவகங்களில் பாவிக்கப்பட்ட பாத்திரங்கள் உள்ளிட்டவையை ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினர் கைப்பற்றி அழித்தனர்.

கல்முனையில் தர்பியா நிகழ்ச்சி

கல்முனை மத்திய தினகரன் நிருபர்

கல்முனை ஹுதா ஜும்ஆ பள்ளிவாசல், தஃவா குழுவின் ஏற்பாட்டில் மாபெரும் குடும்ப தர்பியா நிகழ்ச்சி இன்று (23) மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளதாக, தஃவா குழுவின் தலைவர், மௌலவி ஸாபித் தெரிவித்தார்.

சிறப்பான முக்கிய தலைப்புகளில் பிரபல உலமாக்கள் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தும் இந்த தர்பியா நிகழ்ச்சியில், பிரதேசவாசிகள் குடும்பமாக கலந்து பயனடைய வருகை தருமாறு ஏற்பாட்டுக் குழுவினர் வேண்டுகோள் விடுத்தனர்.

வவுணதீவில் சிறுதொழில் விற்பனைக் கண்காட்சி

மட்டக்களப்பு விசேட நிருபர்

வவுணதீவுப் பிரதேசத்தைச் சேர்ந்த சிறுதொழில் முயற்சியாளர்களின் பிரதேச மட்டக் விற்பனைக் கண்காட்சியொன்று அப்பிரதேசத்திலுள்ள பொதுச் சந்தைக்கு அருகில் அண்மையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட சிறுதொழில் முயற்சியாளர்களின் பொருளாதாரத்தை உயர்த்தும் நோக்கில் 'மட்டு முயற்சியாண்மை 2022' எனும் தொனிப்பொருளின் கீழ் இக்கண்காட்சி நடத்தப்பட்டது.

நத்தார் பண்டிகை மற்றும் புதுவருடப் பிறப்பை முன்னிட்டு சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவானது, சிறுதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கான முயற்சிகளை செய்து வருகின்றது.

இக்கண்காட்சிக் கூடத்தில் சேதனப் பசளையைப் பாவித்து உற்பத்தி செய்யப்பட்ட மரக்கறிகள், பழங்கள், வீட்டுத் தோட்டப் பயிர்கள், பூங்கன்றுகள் மற்றும் பொதி செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் உள்ளிட்ட உற்பத்திப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

மாணவர்களுக்கு பாதணி வழங்கல்

கல்முனை மத்திய தினகரன் நிருபர்

கல்முனை கல்வி வலயத்துக்குட்பட்ட 28 பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 350 க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு பாதணிகள் DARK பவுண்டேஷனின் பூரண அனுசரணையுடன் வழங்கி வைக்கப்பட்டன.

சாய்ந்தமருது லீ மெரிடியன் மண்டபத்தில் வைத்து அண்மையில் மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கப்பட்டன.

அத்துடன், தேசிய ரீதியில் சாதனை புரிந்த கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலை மாணவர்கள், சர்வதேச மட்டத்தில் சாதனை புரிந்த மாணவி, மாவட்டளவில் முதன்மை நிலை பெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

போதைப் பாவனைக்கு அடிமையானோரை புனர்வாழ்வளிப்பது எமது கடமை

மட்டக்களப்பு மாநகர சபையின் பிரதி முதல்வர் தெரிவிப்பு

மட்டக்களப்பு விசேட நிருபர்

போதைப் பாவனைக்கு அடிமையான சமூகத்துக்கு புனர்வாழ்வளிப்பதும் போதைப்பொருள் மாபியாக்களிடமிருந்து மாணவர்களைக் காப்பதும் எமது சமூகக் கடமையென, மட்டக்களப்பு மாநகர சபையின் பிரதி முதல்வர் கந்தசாமி சத்தியசீலன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகர சபையின் நலன்புரிச் சங்கம் நடத்திய ஒளி விழா மாநகர மண்டபத்தில் நேற்று முன்தினம் (21) நடைபெற்ற போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்விழாவில் அவர் மேலும் உரையாற்றிய போது,

"இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் போதைப் பொருள் பாவனை அதிகரித்து சமூகத்தில் குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளமையானது ஆரோக்கியமானதல்ல. இது கவலைக்குரியதாகும்.

புகையிலை, மதுசாரம் உள்ளிட்ட போதைப் பாவனைக்கு அடிமையாகியோர் மனதுக்கு ஆத்ம திருப்தியைத் தரும் கலை, கலாசார நிகழ்வுகளில் தங்களது புலன்களைச் செலுத்தும் போது, புதிய சிந்தனைகள் தோற்றம் பெற்று மனதுக்கு புத்துணர்ச்சி ஏற்படும்.

இதன் மூலம் போதைப்பொருளில் கொண்டுள்ள நாட்டம் குறைவதுடன், சட்டவிரோதச் செயல்களும் குறைகின்றன.

பல்லினச் சமூகங்கள் வாழும் எமது நாட்டில் எல்லா மதங்களும் அன்பு, கருணையைப் போதிக்கின்றன.

அன்பை பரஸ்பரம் பகிர்வதன் மூலம் வன்முறைத் தீவிரவாதத்தைத் தடுத்து மதங்களுக்கிடையேயான சகவாழ்வு, இனங்களிடையேயான சமூக நல்லிணக்கம், இன ஒற்றுமை ஏற்படுவதன் மூலம் இருளில் இருந்தவர்களுக்கு ஒளி பிறக்கின்றது" என்றார்.

அக்கரைப்பற்று பிரதேசத்தில் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு

அட்டாளைச்சேனை குறூப் நிருபர்

அக்கரைப்பற்று பன்னிரண்டு கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், கிராமிய சிவில் பாதுகாப்புக் குழு, கிராம சக்தி மக்கள் சங்கம் ஆகியன ஒருங்கிணைந்து ஒழுங்கு செய்த வருடாந்த ஒன்றுகூடல், அக்கரைப்பற்று ஓரியன்ட் பீச் ஹட் வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதன்போது, க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகிய 9 மாணவிகள் பணப்பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பட்டதுடன், 17 தொழில் முயற்சியாளர்களுக்கு வாழ்வாதார நிதியுதவியும் வழங்கி வைக்கப்பட்டது.

நாட்டின் இன்றைய பொருளாதார நெருக்கடியை உணர்ந்து மக்களின் அபிலாஷைகளுக்கேற்ப தமது திட்டங்களையும் செயற்பாடுகளையும் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் வகுக்க வேண்டுமேயன்றி, குறுகிய நோக்கங்களுக்காக கூடிக்கலையும் அமைப்புகளாக அவை ஒருபோதும் இருக்கக்கூடாதென, அக்கரைப்பற்று மாநகர முதல்வர் அதாஉல்லாஹ் அகமத் சக்கி தெரிவித்தார்.

அந்த வகையில், அக்கரைப்பற்று பன்னிரண்டு கிராம அபிவிருத்திச் சங்கம் தனது செயற்பாடுகளை முன்னுதாரணமாக முன்னெடுத்து செல்வது மிகவும் பாராட்டுக்குரியதெனவும், அவர் தெரிவித்தார்.

பட்டிருப்பு மாணவர்களுக்கு சித்திரபாட பயிற்சிப்பட்டறை

காரைதீவு குறூப் நிருபர்

பட்டிருப்பு கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த சித்திரப் பாட மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் சித்திரம் வரைதல் பயிற்சிப்பட்டறையை, இலங்கை வந்துள்ள உலகப் புகழ்பெற்ற ஓவியர் மு.பத்மவாசன் நேற்று முன்தினம் (21) நடத்தினார்.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினுடைய அழைப்பில் இலங்கை வந்துள்ள ஓவியர் மு.பத்மவாசன், 'ஓவியங்கள் வரைதல்' எனும் தொனிப்பொருளில் இப்பயிற்சிப்பட்டறையை நடத்தினார்.

இதன்போது, ஓவியர் மு.பத்மவாசன் பற்றிய அறிமுகவுரையை அம்பாறை மாவட்ட இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் கு.ஜெயராஜீ நிகழ்த்தினார். நன்றியுரையை இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் எழில்வாணி பத்மகுமார் நிகழ்த்தினார்.

கல்முனையில் பஸ்களுக்கு தரிப்புக் கட்டணம் அறவீடு

கல்முனை விசேட நிருபர்

கல்முனை பிரதான பஸ் நிலையத்திலிருந்து சேவையில் ஈடுபடும் இ.போ.ச. மற்றும் தனியார் பஸ்களுக்கு, தரிப்புக் கட்டணம் அறவிடும் நடவடிக்கை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய, குறுந்தூரப் பயணத்தில் ஈடுபடும் பஸ்களுக்கு ஒவ்வொரு தடவையும் 100 ரூபாவும் நெடுந்தூரப் பயணத்தில் ஈடுபடும் பஸ்களுக்கு ஒவ்வொரு தடவையும் 200 ரூபாவும் அறவிடப்படவுள்ளதாக, கல்முனை மாநகர முதல்வர் ஏ.எம்.றகீப் தெரிவித்தார்.

இந்நடவடிக்கையை கல்முனை மாநகர முதல்வர் நேற்று முன்தினம் (21) ஆரம்பித்து வைத்தார்.

கல்முனை மாநகர சபையின் பொதுச் சபை அமர்வில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய, இவ்வாறு கட்டணம் அறவிடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கல்முனை பிரதான பஸ் நிலையத்துக்கு வந்து செல்லும் இ.போ.ச. வின் கல்முனை பஸ் டிப்போவுக்குரிய பஸ்களைத் தவிர, ஏனைய அனைத்து இ.போ.ச. மற்றும் தனியார் பஸ்களுக்கும் இக்கட்டணம் அறவிடப்பட்டவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

கிண்ணியாவில் நல்லுறவை வலுப்படுத்தும் செயலமர்வு

தம்பலகாமம் குறூப் நிருபர்

கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்காக உள்ளூர் ஊடகவியலாளர்கள், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் உள்ளூராட்சிசபை பிரதிநிதிகளுக்கிடையில் உறவை வலுப்படுத்துவதன் மூலம் உண்மை மற்றும் வெளிப்பாட்டுத் தன்மையை வலுப்படுத்துவது தொடர்பான செயலமர்வொன்று, கிண்ணியா பிரதேச சபை மண்டபத்தில் நேற்று (22) நடைபெற்றது.

'அகம்' மனிதாபிமான வள நிலையத்தின் ஏற்பாட்டில் 'கிழக்கு மாகாணத்தின் ஜனநாயக பங்குதாரர்களுக்கான ஓர் அரங்கத்தை உருவாக்கல்' எனும் தொனிப்பொருளின் கீழ் இச்செயலமர்வு நடைமுறைப்படுத்தப்பட்டது. உள்ளூராட்சிமன்றங்களானவை மக்களுக்குப் பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை போன்றவற்றை வெளிக்கொணர்தல் உள்ளிட்டவை தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டன.

பேருவளை கெச்சிமலை தர்காவில் புனித புஹாரி மஜ்லிஸ் தமாம்

வரலாற்று பிரசித்தி பெற்ற பேருவளை கெச்சிமலை தர்காவில் நடைபெறும் வருடாந்த புனித ஸஹீஹுல் புஹாரி, ஸஹீஹுல் முஸ்லிம் மஜ்லிஸின் தமாம் வைபவம் நாளை மறுதினம் (25) ஞாயிற்றுக் கிழமை காலை அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை மற்றும் வக்பு சபை ஆகியவற்றின் உறுப்பினர் சங்கைக்குரிய மௌலவி ஸக்கி அஹமத் (அஷ்ரபி) பின் அஷ் ஷெய்க் முஹம்மத் காலிப் அலவி ஆலிம் அலவியதுல் காதிரி தலைமையில் மார்க்க அறிஞர்களின் பங்குபற்றலுடன் நடைபெறுதை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

இலங்கையில் வியாபாரத் தொடர்பு கொண்டிருந்த அராபிய நாட்டு முஸ்லிம்களின் ஆரம்பக் குடியேற்றம் சரித்திரப் பிரசித்தி பெற்ற பேருவளை கெச்சிமலை கடற்கரைப் பகுதியில் தான் இடம் பெற்றது என்பது பல சரித்திர ஆய்வாளர்களின் கருத்தாகும்.

கி.பி 11 ஆம் நூற்றாண்டில் இஸ்லாமியர்கள் இலங்கையில் குடியேறி வாழ்ந்தார்கள். இன்றும் பேருவளை கடற்பாங்காகவுள்ள கெச்சிமலைப் பள்ளிவாசல் இலங்கையில் முஸ்லிம்கள் நீண்ட காலமாக வாழ்ந்து வருகிறார்கள் என்பதற்கு சான்றாகவுள்ளது என்றும் பட்டுப் பாதையூடாக பிரயாணம் செய்த 'ஆம்கோவேல்ட்' நிறுவனத்தின் பிரபல பத்திரிகையாளர்களான டேவிட், ஆம்டிட் குழுவினரின் ஆய்வறிக்கை ஒன்று குறிப்பிடுகிறது.

இறைநேசச் செல்வர்கள், நல்லோர்கள் வழியில் மக்களுக்கு அறிவுரை வழங்கி தாங்களும் வாழ்ந்து காட்டி மனித சமுதாய மறுமலர்ச்சிக்காக உழைத்தார்கள். இத்தகைய ஸூபியாக்கள் பலரும் இலங்கைக்கு வருகை தந்து பாவா ஆதம் (அலை) என்று அழைக்கப்படும் (Adam's Peak) புனிதத் தளத்தை தரிசித்து சென்ற வரலாற்று உள்ளது.

இப்னு பதூதா(Ibnu Batootha) போன்ற வரலாற்று வல்லுனர்கள் (Silk Route) வந்து தரிசித்து தங்களது வரலாற்று நூலில் குறித்துள்ளது வியக்கத்தக்கது.

கெச்சிமலையில் அடங்கியுள்ள செய்கு அஷ்ரப் வழியுள்ளாஹ் அவர்கள் இதே நோக்கத்துதோடு தான் கப்பல் மூலமாக இலங்கை வந்தார்கள். கடலின் அகோரமும், காற்றின் வேகமும் கப்பலை திசை திருப்பி மெச்சுப் புகழ் கெச்சிமலை அண்மித்தே பேருவளையில் இறங்கச் செய்தது. அல்லாஹ்வின் நாட்டம் இதுவாக இருக்கலாம் என உணர்ந்த அல்லாஹ்வின் அன்பர் அஷ்ரப் வழியுள்ளாஹ் தங்கள் இருப்பிடத்தை அமைத்துக் கொண்டார்கள். அங்கிருந்து இறைபணியைத் தொடர்ந்தார்கள். ஆத்மீக மலர்ச்சி கண்டார்கள்.

1882 ஜோர்ஜ் அரசின் (The 6th King Gorge) கவர்னராக இலங்கையில் கடமையாற்றிய சேர் ஆதர் ஹென்றிகோடன் (Sir Athar Henry Gorden) அவர்கள் காலிக்கு தன்னுடைய உத்தியோக கடமைக் காகச் செல்லும் வழியில் அவர் பயணம் செய்த குதிரை வழித வறி பேருவளை சுங்கப் பாதை (Customs Road) வழியில் சென்று ஓர் இடத்தில் தறித்து நின்றது. அங்கு இருந்த ஒரு பழைய புதை குழியின் அருகில் நின்று பணிந்து வணங்கியது.

இந்த ஆச்சரியமான சம்பவம் கவர்னரை சிந்திக்கச் செய்தது. குதிரை அந்த இடத்தைவிட்டும் அசைய மருத்தது. அங்குள்ள மக்களிடம் கவர்னர் விசாரித்ததில் இந்த இடம் கெச்சிமலை என்றும் அடங்கப்பட்டிருக்கும் அற்புதமான வழியுள்ளாஹ் பற்றியும் கூறப்பட்டது. உடனே கவர்னர் அவர்கள் தன்னுடைய காரியதரிசியிடம் ஜோர்ஜ் அரசின் சார்பில் இந்த இடத்தை அன்பளிப்பாக வழங்கும்படி உத்தரவிட்டார்கள். பின்னர் மக்கள் ஒன்று சேர்ந்து கெச்சிமலையை உருவாக்கினார்கள். இந்தசரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலப்பத்திரத்திற்கான ஆவணம் காலம்சென்ற சங்கைக்குரிய அஷ்ஷெய்ஹு ஹம்ஸா பின் முஹம்மத் அப்துல்லாஹ் ஆலிம் அலவியதுல் காதிரி அவர்கள் வசம் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

15 ஆம் நூற்றாண்டில் கி.பி 1474 எலெக்ஸ் ஸான்டிரியாவில் அமைக்கப்பட்ட ஸுல்தானுல் அஷ்ரப் அல் கீதாயின் பள்ளிவாசலை போன்று கெச்சிமலை தர்ஹாவில் கலை அமைப்பு பெரிதும் ஒத்திருக்கின்றது. எனினும் அதன் உருவ அலங்காரங்களும் அழகிய மாடங்களும், கோபுரங்களும் இங்கு இல்லை. மூன்று திசைகளும் கடலினால் சூழப்பட்ட இயற்கைக் காட்சிகள் இதன் சிறப்பம்சமாகும். இதன் தலைவாயில் பக்கவாயில் பெரிதும் தென்னிந்திய முறையில் அமைந்துள்ளன. இக்கட்டிடம் ஹிஜ்ரி 1327 ஆம் ஆண்டு நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது.

கெச்சிமலை தர்காவில் அடங்கப்பட்டுள்ள பெரியாரின் அடக்கஸ்தலம்

புகாரி, முஸ்லிம் மஜ்லிஸ்

அல் ஆலிம் அஷ்ஷெய்கு இஸ்மாயில் (ரஹ்) ஹிஜ்ரி 1315 இறையடி சேர்ந்தார்கள். அவர்களது புதல்வர் அஷ்ஷெய்கு முஹம்மத் அப்துல்லாஹ் ஆலிம் மூலம் (1878 1952) புனித புகாரி பாராயண மஜ்லிஸ் இங்கு ஆரம்பிக்கப்பட்டது. ஹைதராபாத் நிஸாம் மன்னரின் அவையில் ஷெய்காக இருந்தவரே அஷ் ஷெய்ஹு அஹமத் இப்னு அப்துல்லாஹ் பாபஹ்ஹி மௌலானா அவர்கள். அன்னார் புனித புகாரிக் கிரந்தத்தை ஹிஜ்ரி 1321 ஆம் ஆண்டு கெச்சிமலை தர்காவில் அஷ் ஷெய்ஹு அப்துல்லாஹ் ஆலிம் அவர்களுக்கு ஓத உத்தரவளித்தார்கள். இதனுடன் முஸ்லிம், மஷ்ரவுர்ரவி ஹதீஸ் கிரந்தங்களும் பாராயணம் செய்யப்படுகின்றது.

வெள்ளிக்கிழமை தவிர இந்த புனித மஜ்லிஸ் தினமும் அதிகாலை தஹஜ்ஜுத் தொழுகையுடன் ஆரம்பிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. மர்ஹூம் அஷ் ஷெய்ஹு ஹம்ஸா ஆலிம் அவர்கள் இதற்கு தலைமை தாங்கி நீண்டகாலம் மஜ்லிஸை நடத்தி வந்தார்கள். அதற்குப் பின்னர் அஷ் ஷெய்க் மர்ஹூம் சுகைப் ஆலிம் தலைமை தாங்கி நடாத்தினார்கள். அதன் பின்னர் அவர்களது சகோதரரான காலிப் அலவி ஹாஜியார் அலவியதுல் காதிரி தலைமை தாங்கி நடாத்தினார். அவரின் மறைவை அடுத்து அவரது புதல்வர் மௌலவி அஹ்மத் ஸக்கி (அஷ்ரபி) தற்போது தலைமை தாங்கி நடாத்திச் செல்வது குறிப்பிடத்தக்கது.

இஷாஅதுல் இஸ்லாம் அநாதை இல்லம்

1974 ஆம் ஆண்டு மர்ஹூம் செய்கு ஹம்ஸா ஆலிம் அவர்கள் களுத்துறை மாவட்ட கல்விமான்கள், கொடைவள்ளல்கள், அறிஞர்கள், உலமாக்கள், சிந்தனையாளர்கள் அனுசரணையுடன் தர்காநகரில் 'இஷாஅதுல் இஸ்லாம்' என்ற பெயரில் அநாதை சிறார்களுக்காக ஓர் இல்லத்தை உருவாக்கினார்கள். இன்று இந்த நிலையம் மிகவும் விசாலமாகி பெருமளவிலான அநாதைச் சிறார்கள் பராமரித்து வருகிறது. கல்வி, ஆத்மீகக் கல்வி, கைத்தொழில், தொழில் நுட்பக் கல்வி என்பன இந்த சிறார்களுக்கு வழங்கப்படுகிறது.

1989 ஆம் ஆண்டு கெச்சிமலை தர்காவில் அல் குல்லியதுல் அஷ்ரபிய்யா அரபுக் கலாபீடம் அமைக்கப்பட்டதுடன் களுத்துறையில் மின்னதுல் ஹஸனிய்யா அரபுக் கல்லூரியும் ஆரம்பிக்கப்பட்டது. கெச்சிமலை தர்கா வளவில் இஸ்லாமிய கலைவனப்புடன் கம்பீரமாக காட்சியளிக்கும் அல் அஷ்ரபிய்யா அரபுக் கல்லூரி சமூகத்திற்கும் நாட்டிற்கும் பல புத்திஜீவிகளை உருவாக்கி வந்துள்ளது, வருகிறது.

கெச்சிமலை புகாரி மஜ்லிஸின் வியாபித்த சேவைகள் விரிவானது என்றும் கூறலாம். சேஹு அப்துல்லாஹ் ஆலிம் அவர்கள் ஒருநாள் உபதேசம் தலை சிறந்த அரபுக் கல்லூரி ஒன்றை உருவாக்கியது. கொடை வள்ளலான எம்.டி.எச் அப்துல் கபூர் ஹாஜியார் இம் மஜ்லிஸில் கேட்ட உபதேசத்தால் மஹரகமையில் கபூரிய்யா அரபுக் கல்லூரியை நிர்மாணித்தார்கள்.

கெச்சிமலை புகாரி மஜ்லிஸின் இந்த ஏற்பாட்டின் பின் பிற்காலத்தில் இரண்டு புகாரி மஜ்லிஸ்கள் தோற்றம் பெற்றன. மூதூர் கிண்ணியா புகாரி மஜ்லிஸ், தென்னிந்தியா காயல்பட்டணம் புகாரி மஜ்லிஸ் ஆகியனவே அவையாகும்.

2004 ஆம் ஆண்டு சுனாமி கடற்கோள் அனர்த்தம் பேருவளை கடற்கரைப் பகுதியில் பாரிய சேதங்களை ஏற்படுத்திய போதும் கூட மூன்று பங்கங்களாலும் கடலினால் சூழப்பட்டுள்ள இந்த தர்காவுக்கு எந்தவிதச் சேதமும் பாதிப்பும் ஏற்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அல்லாஹ்வின் மகத்துவம் இறங்கும் புனித புகாரி மஜ்லிஸ் நடைபெறும் இந்த தர்காவில் பலஅற்புதங்கள் நிகழ்ந்துள்ளமை மறைக்க முடியாத மறுக்க முடியாத உண்மையாகும். வரலாற்றுப் பிரசித்திபெற்ற இந்த தர்காவை தரிசிப்பதற்காக தினமும் பெரும் எண்ணிக்கையான உள்நாட்டு, வெளிநாட்டு முஸ்லிம்கள் வருவது குறிப்பிடத்தக்கது.

அன்னதானம் வழங்கும் நிகழ்வு

இன ஒற்றுமைக்கான மத்தியஸ்தானம் கெச்சிமலை தர்கா

பேருவளை கெச்சிமலை தர்காவில் புனித ஸஹீஹுல் புகாரி தமாம் மஜ்லிஸின் தமாம் நிகழ்வின் மறுநாள் பெரும்பான்மை சமூகத்தினருக்காக அன்னதானம் வழங்கப்படும்.

பெரும்பான்மை சமூகத்தை சேர்ந்த அயலவர்கள் பங்கேற்பு

இன நல்லிணக்கம், இனங்களுக்கிடையிலான பரஸ்பர புரிந்துணர்வு பற்றி பேசுகிறோம். அதற்கான வேலைத்திட்டங்கள் இடம்பெறுகிறது. ஆனால் இந்த தர்காவில் கடந்த 150 வருடங்களுக்கு மேலாக தர்காவை சுற்றி உள்ள பெரும்பான்மை சமூகத்தினருக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த முன்மாதிரியான வேலைத்திட்டத்தை சங்கைக்குரிய ஷேகுமார்கள் தொடர்ந்து மேற்கொண்டு வந்தார்கள்.

இதனால் இந்த மஜ்லிஸை தலைமை தாங்கி நடாத்தி வந்த மர்ஹூம்களான சங்கைக்குரிய அஷ் ஷெய்க் முஹம்மத் ஹம்ஸா ஆலிம் ஹாஜியார் பின் அஷ் ஷெய்ஹ் அப்துல்லாஹ் ஹாஜியார் அலவியதுல் காதிரி, சங்கைக்குரிய சுகைப் ஆலிம் பின் அஷ் ஷெய்க் அப்துல் லாஹ் ஆலிம், சங்கைக்குரிய காலிப் அலவி ஹாஜியார் பின் அஷ் ஷெய்க் அப்துல்லாஹ் ஹாஜியாருக்கு இப் பிரதேச பெரும்பான்மை சிங்கள மக்கள் மத்தியில் உயர்ந்த கண்ணியமும் மரியாதையும் இருந்து வந்தது.

பேருவளைப் பகுதியில் இன நல்லிணக்கத்தை மேலும் சக்திபெறச் செய்யும் நோக்குடன் இந்த அன்னதானம் வழங்கும் நிகழ்வு எதிர்காலத்திலும் மிகச்சிறப்பாக இடம்பெற வேண்டும் என்பது அனைவரினதும் எதிர்பார்ப்பாகும்.

கடந்த நவம்பர் 21 ஆம் திகதி மேற்படி மஜ்லிஸ் ஆரம்பமானது. நாளை 24 ஆம் திகதி இரவு கத்தாத் ராதிப், விஷேட மார்க்கச் சொற்பொழிவு அதனையடுத்து தர்காவில் அடங்கப்பட்டுள்ள அஷ் ஷெய்க் அஷ்ரப் வலியுல்லாஹ் ஸியாரத் நிகழ்ச்சியும் இடம்பெறும். 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை அல் குர்ஆன் தமாம் வைபவம் இடம்பெறுவதோடு நண்பகல் தமாம் மஜ்லிஸ் இடம்பெறும்.

தமாம் நிகழ்ச்சிகளை இலங்கை வானொலி முஸ்லிம் சேவை 71 ஆவது வருடமாகவும் இம்முறை நேரடியாக அஞ்சலி செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கெச்சிமலை வளாகத்தில் அமைந்துள்ள அஷ்ரபிய்யா அரபிக் கல்லூரியின் அழகிய தோற்றம்

பேருவளை
பீ.எம் முக்தார்

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

2022 திசெம்பர் 28ஆம் திகதியன்று ஏல விற்பனையினூடாக 98,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

முதிர்வுக் காலம்	91 நாட்கள்	182 நாட்கள்	364 நாட்கள்	மொத்தம்
ஐஎஸ்ஐஎன்*	LKA09123C310	LKA18223F302	LKA36423L296	
முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.)	50,000	25,000	23,000	98,000

ஏல விற்பனைத் திகதி : 2022 திசெம்பர் 28
தீர்ப்பனவுத் திகதி : 2022 திசெம்பர் 30
வழங்கப்படும் திகதி : 2022 திசெம்பர் 30
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2022 திசெம்பர் 28, புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்கள்

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை ஆனாலும் முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.

அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட்	2206297
இலங்கை வங்கி	2541938
கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி	2317777
இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி	2332319
ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி	2639883
என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட்	2425010
மக்கள் வங்கி	2206783
சம்பத் வங்கி பிஎல்சி	2305842
செலான் வங்கி பிஎல்சி	2456340
வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட்	2675096

✱ பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

என். டி. வை. சி. வீரசிங்க
பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/பதிவாளர்

வழங்கும் அலுவலகம்:
பொதுப்படுகடன் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி,
30, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு-1.
தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687
வெப்தளம்: www.cbsl.gov.lk

கிளிநொச்சி ஊற்றுப் புலம் கிராமத்திலுள்ள சிறுவர்களின் கல்வி மேம்பாட்டை கருத்தில் கொண்டு வானவில் வாழ்வகத்தின் அனுசரணையுடன் முன்பள்ளி பாடசாலையொன்று அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட போது...

விவசாயத்தில் ஈடுபடுவோருக்கு நவீன தொழிநுட்ப வழிகாட்டல் வழங்கப்படும்

நுவரெலியாவில் விவசாய அமைச்சர் அமரவீர

ஹற்றன் சுழற்சி நிருபர்

விவசாயிகளுக்கு தேவையான வசதிகள் செய்துகொடுக்கப்படும். அதேபோல நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி விவசாயத்தில் ஈடுபடுவதற்கான வழிகாட்டல்களும் வழங்கப்படும் என்று விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

நுவரெலியா நகர மண்டபத்தில் நேற்று (22) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்ற நுவரெலியா மாவட்ட உணவு பாதுகாப்பு மற்றும் மாவட்ட அபிவிருத்தி திட்டம் தொடர்பாக அரச அதிகாரிகள் உள்ளிட்ட அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுடனான கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

" விவசாய திணைக்களத்தின் கீழ் உள்ள பயிரிடக்கூடிய இடங்களை, உற்பத்திக்கு வழங்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. உரப்பிரச்சினையும் தீர்க்கப்பட்டு வருகின்றது. களைக்கொல்லி உள்ளிட்டவையும் வழங்கப்படும். அதாவது விவசாயிகளுக்கு தேவையான சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படும். அரிசியில் போன்று மரக்கறி உள்ளிட்டவற்றிலும் நாம் தன்னிறைவு அடைய வேண்டும். உணவு பாதுகாப்பு வேலைத்திட்டம் அரசியல் சார்பற்றது. அதனை அனைவரும் பொறுப்பேற்கலாம்.

அதேவேளை, கால்நடை வளர்ப்பு மற்றும் தேசிய பால் உற்பத்தி சம்பந்தமாகவும் கவனம் செலுத்தப்பட்டு, அவற்றின் அபிவிருத்திக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

கல்வி அமைச்சு

ஸ்ரீபாத தேசிய கல்விக் கல்லூரி

2023ம் ஆண்டிற்கான வழங்குநர்களை பதிவு செய்தல்

2023ம் வருடத்திற்காக ஸ்ரீபாத தேசிய கல்வியியல் கல்லூரிக்கு பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான வழங்குநர்களை பதிவு செய்வதற்காக ஏற்றுக்கொள்ளக்கூடிய வியாபார ஸ்தாபனங்கள், நிறுவனங்கள், விநியோகஸ்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

பதிவு செய்ய விரும்புபவர்கள் ஒவ்வொரு பொருட்கள், பண்டங்கள், சேவைகளுக்காக தனித்தனியாக கேள்விப்பத்திரத்தினை கோருதல் வேண்டும் பெற்றுக்கொண்ட விண்ணப்பங்களை ஒரே கடித உறைக்குள் வைத்து அனுப்ப முடியும்.

பொருட்கள் / பண்டங்கள் / சேவைகள்
தொகுதி இலக்கம்

வழங்குநர்

இல 01 - காகிதாதிகள்
- i பிரதி எடுக்கும் இயந்திரம் , றோனியோ, பக்ஸ், கணனி போன்ற இயந்திரங்களுக்கான காகிதாதிகள் உள்ளடங்கலாக
- ii கணனி பிரின்டர் றிபன், டிஸ்கற், டோனர், காட்றிஜ் உள்ளிட்ட பொருட்கள் ஏனைய அவசியமான பொருட்கள்

இல 02 - கட்டிடப் பொருட்கள்
- i கட்டிடம் கட்டுவதற்கு தேவையான சகல பொருட்களும், பூச்சுக்கள்
- ii பி.வி.சி குழாய்களும், பொருத்துக்களும் மற்றும் நீர்ப்பம்பி சம்பந்தமான சகல பொருட்கள்
- iii சகல மின்னியல் பொருட்கள் உபகரணங்கள் மற்றும் பொருத்திகள்
- iv தும்புதடி, ஈர்க்குமாறு, விம், ஹார்பிக் போன்ற பொருட்கள்
- vi குளியலறை உபகரணங்கள் மற்றும் சுத்திகரிப்பு பொருட்கள்
- vii மண்வெட்டி, முள்ளு, கோடாரி, கத்தி, வேலி வெட்டும் கத்தரிக்கோல்
- viii பலகை வகைகள்

இல 03 - வெளியீடுகள்
- i புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் வெளியீடுகள்
- ii தினசரி பத்திரிகைகளும், வார வெளியீடுகளும்

இல 04 - வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் டயர், ரியூப்

இல 05 - விடுதி பராமரிப்பு உபகரணங்கள்

இல 06 - மருந்துப்பொருட்கள், / முதலுதவி பொருட்கள்

சேவைகள் / திருத்தங்கள்

இல 07 - வாகனங்கள்
- i வாகனங்களை சேவிஸ் செய்தல்
- ii மோட்டார் வாகனங்களின் திருத்த வேலைகள் மற்றும் ஒட்டு வேலை உள்ளிட்ட வேலைகள்
- iii வாகனத்தின் குஷன் செய்தல் உறையிடல்
- iv குளிரூட்டுதல்

(இல 8 i, ii ற்கு ஆகக்கூடியது கல்லூரியிலிருந்து 36 கிலோமீற்றருக்குள் அமைந்திருக்கும் கராஜ்களிலிருந்தே விண்ணப்பிக்க முடியும்)

இல 08 - துணி வகைகளை சலவை செய்தல்

வழங்குநர்களை பதிவு செய்வதற்கான நிபந்தனைகள்

1) வழங்குநர்களை பதிவு செய்வதற்காக ஒவ்வொரு தொகுதி இலக்கம் மீளளிக்கப்படாத கட்டணமான ரூபா 2000/- ஐ செலுத்தி அவசியமான விண்ணப்பத்தினை கல்லூரியின் பதிவாளரிடம் பெற்றுக்கொள்ளாம். உரிய விண்ணப்பத்துடன் பற்றுச்சீட்டினையும் வியாபார சான்றிதழின் பிரதியினையும் அனுப்புதல் வேண்டும்

2) பொதுவாக சேவைகள் பண்டங்களுக்கான பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் இருப்பினும், தேவைப்படுமிடத்து மாற்று வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோருவதற்கான அதிகாரம் கல்லூரியின் பீடாதிபதிக்கு உண்டு.

3) பூரணப்படுத்திய விண்ணப்பத்தினை பீடாதிபதி, **ஸ்ரீபாத தேசிய கல்விக் கல்லூரி, பத்தனை** எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைப்பதுடன் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"2023ம் வருடத்திற்கான வழங்குநர்களை பதிவு செய்தல்"** எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

4) பதிவு செய்வதற்கான விண்ணப்பத்தினை ஏற்றுக்கொள்வதோ அல்லது மறுப்பதற்கான அதிகாரம் கல்லூரியின் கொள்வனவு குழுவிடமே ஆகும்

5) 2023ம் ஆண்டு ஜனவரி மாதம் 10ம் திகதி பி.ப 2.00 மணி வரை விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படுவதுடன் 2023ம் ஆண்டு ஜனவரி மாதம் 11ம் திகதி பி.ப 2.00மணி வரைக்கும் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினமே வழங்குநர்களை பதிவு செய்யப்படும்.

6) தெரிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் உரிய பொருட்களை கல்லூரிக்கு கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும். அத்துடன் அப்பொருட்களின் தரம் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் கொடுப்பனவு செய்யப்படும். தெரிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடம் ஒருமாத காலத்திற்கு கடன் வசதிகளை வழங்குதல் வேண்டும்.

7) கீழ்க்குறிப்பிட்டவாறு வழங்கத்தவறும் விண்ணப்பதாரர்களின் பெயர் எவ்வித முன்னறிவித்தலுமின்றி பதிவியிலிருந்து இழக்க நேரிடும் என்பதை கவனத்திற் கொள்ளவும்.
   1) விலை மனுக்கள் கோரும் போது அவற்றை சமர்ப்பிக்க தவறுதல்
   2) தேவைப்படும் சேவைகள் வழங்கல் குறிப்பிட்ட காலத்திற்குள் வழங்க தவறுதல்
   3) பொருட்கள், சேவைகள் அங்கீகரிக்கப்பட்ட தரத்தினை கொண்டிராதிருத்தல்

பீடாதிபதி
ஸ்ரீபாத தேசிய கல்விக் கல்லூரி,
பத்தனை.

கண்டி வலய பாடசாலைகளுக்கு

இருமொழி கற்கை விவாதப் போட்டி

அக்குறணை குறூப் நிருபர்

அரசின் கல்விக் கொள்கைளில் ஒன்றான இருமொழி கற்கை செயல்பாட்டை பிரபலப்படுத்தும் முகமாக கண்டி கல்வி வலயத்தில் இரு மொழி விவாதப் போட்டி ஒன்று (21) நடைபெற்றது.

இதில் கண்டி கல்வி வலயத்தைச் சேர்ந்த 22 பாடசாலைகள் பங்கு கொண்டன. அதன் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு வைபவமும் மத்திய மாகாண ஆளுநர் காரியாயல கேட்போர் கூடத்தில் ஆளுநர் லலித் யூ கமகே தலைமையில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் வெற்றிபெற்ற கண்டி கிங்ஸ்வூட் கல்லூரி முதலாம் இடத்தையும், கண்டி தர்மராஜ கல்லுரி இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

மூன்றாம் இடத்தை கண்டி பெண்கள் உயர் கல்லூரி பெற்றுக் கொண்டது. போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு ஆளுநர் பரிசு வழங்கி கௌரவித்தமையும் குறிப்பிடத் தக்கது.

மொனராகல நகரில்

ஏழரை இலட்சம் பெறுமதியான தங்கப் பொதி கண்டெடுப்பு

கண்டெடுத்த பொருள் பொலிஸாரிடம் கையளிப்பு

லுணுகல நிருபர்

மொனராகல கல்பெத்த பிரதேசத்தைச் சேர்ந்த கே.எம்.லக்மால் தயாரத்ன என்பவர், மொனராகலை சந்தைப் பகுதிக்கு அருகில் நான்கரை பவுண், ஏழரை இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு தங்க சங்கிலி, மோதிரம் மற்றும் பதக்கங்கள் அடங்கிய தங்கப் பொதியைக் கண்டெடுத்துள்ளார்.

மொனராகல நகரில் அமைந்துள்ள நிதி நிறுவனமொன்றின் கணக்கியல் பிரிவில் பணிபுரியும் இவர், நேற்று முன்தினம் (21) பிற்பகல் நகரிலுள்ள நிறுவனமொன்றுக்கு தனிப்பட்ட தேவைக்காக சென்று கொண்டிருந்த போது, நகரின் கடையொன்றிற்கு அருகில் இந்த தங்கப் பொதி கிடந்துள்ள து. இதேநேரம் மொனராகல பொலிஸ் தலைமையகத்திற்குச் சென்று தலைமையக பிரதான பொலிஸ் அதிகாரியை பி.எஸ்.சி. சஞ்சீவவைச் சந்தித்து தங்க ஆபரணங்களை மொனராகல பொலிஸ் நிலையத்தில் வைத்து ஒப்படைத்தார்.

இவ்வாறான காலப்பகுதியில் கே.எம். லக்மால் தயாரத்ன செய்த இந்த நற்செயலை பாராட்டி பொறுப்பதிகாரி அவருக்கு வாழ்த்துகளையும் தெரிவித்தார்.

இலங்கை வங்கி

ஏலவிலை கூறலுக்கான அழைப்பு

மஹரகமவில் அமைந்துள்ள இலங்கை வங்கியின் மத்திய பயிற்சி நிலையத்திற்கு உணவு வழங்கற் சேவையாளரைத் தெரிவுசெய்தல்

கேள்வி இல	P/PROC/2022/321
ஏலவிலை கூறல் முடிவடையும் திகதியும் நேரமும்	2023.01.13ஆம் திகதி 1000 மணி வரை
சேவையின் விபரம்	மஹரகமவில் அமைந்துள்ள இலங்கை வங்கியின் மத்திய பயிற்சி நிலையத்தில் (CTI) பயிற்சியில் பங்கேற்பவர்களுக்கும் வங்கியால் ஏற்பாடு செய்யப்படும் விசேட நிகழ்வுகளுக்கும் வெளியே சமைக்கப்பட்ட உணவுகளை வழங்குதல், சேவை நிலையத்தினைச் சுத்தமாகவும் ஒழுங்காகவும் பராமரித்து தேவையான கருவிகள் பாத்திரங்கள் போன்றவற்றையும் வழங்குதல்.
ஏலவிலை கூறல் ஆவணங்களைப் பார்வையிடும் மற்றும் கொள்வனவு செய்யும் காலப்பகுதி	2022.12.23ஆம் திகதி முதல் 2023.01.12ஆம் திகதி வரையான ஏதேனும் வேலை நாட்களில் 0900 மணி முதல் 1430 மணி வரை
சமர்ப்பிக்கப்பட வேண்டிய விலைகூறற் பிணையின் பெறுமதியும் காலப்பகுதியும்	2023.05.12ஆம் திகதி வரை செல்லுபடியாகும் ரூ.240,000.00 பெறுமதியான வங்கிப் பிணை / பணவைப்பு ரசீது / வங்கி உண்டியல். ஏலவிலை கூறுபவரால் வரையப்படும் காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
முன்கூட்டிய ஏலவிலை கூறல் கூட்டம் நடைபெறும் திகதியும் நேரமும்	2023.01.04ஆம் திகதி 1100 மணிக்கு கொழும்பு 01, இலங்கை வங்கி, BOC தலைமையகக் கட்டடத்தில் உள்ள 14ஆம் தளத்தில் இடம்பெறும்

1. ஏலவிலை கூறத் தகுதிபெறுவதற்கு ஏலவிலை கூறுபவர் கீழ்க் காணும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.
   i. உணவு வழங்கற் சேவையை வழங்குவதற்குரிய வர்த்தகப் பதிவினைக் கொண்டிருக்க வேண்டும்.
   ii. உணவு வழங்கற் சேவை மற்றும் சிற்றுண்டிச் சாலைச் சேவைகளை வழங்குவதில் குறைந்தபட்சம் 03 வருடகால அனுபவம்.
   iii. கடந்த 03 ஆண்டுகளுக்கான அண்ணளவான வருடாந்தப் பணப் புரள்வானது ரூ.5.0 மில்லியனாகக் காணப்பட வேண்டும்.
   iv. இந்த ஒப்பந்தத்திற்கு குறைந்தபட்சம் ரூ. 300,000 பெறுமதியான திரவநிலைச் சொத்து மற்றும் / அல்லது கடன் வசதிகள் காணப்பட வேண்டும்.
   v. கடந்த 03 ஆண்டுகளுக்குள் குறைந்தபட்சம் ஒரு வருடமாவது குறிப்பிட்ட ஒத்ததான இயல்பினை உடைய சேவையினை அங்கீகாரம் பெற்ற நிறுவனம் ஒன்றிற்கு வழங்கியிருக்க வேண்டும்.
2. 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்கப் பொது ஒப்பந்தச் சட்டத்தில் அல்லது அதன் திருத்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய விலைகூறலுடன் PCA3 படிவத்தையும் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
3. விலைகூறல்களை தெரிவிக்க ஆர்வமுடையோர் பூரணப்படுத்தப்பட்ட ஆங்கில மொழியிலான விலைகூறல் ஆவணத்தொகுதியை திருப்பிச் செலுத்தாக் கட்டணம் ரூ.4,130.00 (ரூ.3,502.00 + SSCL ரூ.89.79 + ரூ.538.21 பெ.சே.வ 15%) செலுத்தி கீழே குறிப்பிடப்பட்டுள்ள அலுவலகத்தில் எழுத்து மூலமான விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் பேரில் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறை பணமாகும்.
4. மேலதிக விபரங்களைக் கீழே குறிப்பிடப்படடுள்ள அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

பிரதான முகாமையாளர்
சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி
14ஆம் தளம், இலங்கை வங்கி,
"இலங்கை வங்கிச் சதுக்கம்", இல.01,
இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு - 01.
தொலைபேசி இல. 2544310, 2204270
மின்அஞ்சல் : procurement@boc.lk

1975 BOC CALL CENTRE www.boc.lk

AA- (lka) Fitch மதிப்பீடு, AAA- Brand Finance மதிப்பீடு. இலங்கை வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

The Housewives' companion Classifieds on Daily News

சிறு விளம்பரம்

மோட்டார் வாகனங்கள்

107

டொயோட்டா கார்கள் விற்பனைக்கு

KY-0863 Toyota Avanza 2014, Car அதியுயர் விலைக்கானது. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 0714 5 4 2958. 078712

WP CBL-2720 Toyota CHR, 2018, அதியுயர் விலைக்கானது. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 0714 5 4 2958. 078720

109

மிற்சுபிஸி கார்கள் விற்பனைக்கு

CP CAC-1294 Mitsubishi 2014, Car அதியுயர் விலைக்கானது. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 0714542958. 078722

117

வேன்கள் விற்பனைக்கு

57-8842 Toyota 1992, Van அதியுயர் விலைக்கானது. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 0714 5 4 2958. 078725

118

ஜீப்புகள், பிக்கப்புகள் விற்பனைக்கு

WP CAO-1222 Nissan X-trail, 2015, அதியுயர் விலைக்கானது. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 0714542958. 078718

119

பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு

CP LK-4849 Tata 1615, 2010, Lorry அதியுயர் விலைக்கானது. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 0714 5 4 2958. 078726

LH-8040 Ashok Leyland, 2010, Lorry அதியுயர் விலைக்கானது. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, 310, காலி வீதி, கொழும்பு03. தொலைபேசி. 0714542958. 078728

122

மோட்டார் சைக்கிள், திரிவீலர்கள் விற்பனைக்கு

WP AAL-5485 TVS King, 2013, Three-wheel அதியுயர் விலைக்கானது. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 0711 2 1 0810 078727

WP YF-9591 Bajaj 2010, WP AAJ-4289 Bajaj 2013, SP QF-4525 Bajaj 2006, WP AAY-9051 Bajaj 2015, SG YN-4369 Bajaj 2011, Three-wheel அதியுயர் விலைக்கானது. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 0711 2 1 0810. 078729

வேலைவாய்ப்பு

303

உயர்தொழில்துறையாளரின் ஆலோசனை

பொதுவான சேவைகள்

DR. Z.A.M. SHUAIB, NEW THIHARIYA ABDEEN MEDICAL CENTRE, 116C, COLOMBO KANDY ROAD, THIHARIYA JUNCTION பெற்றோல் நிலையம் அருகே. 0740656333. உடல்நிறையைக் குறைத்தல், உடல்நிறையை அதிகரித்தல், புகைப்பழக்கத்தை நிறுத்துதல், பாலியல் நோய்கள், மாதவிடாய்க் கோளாறுகள், தோல் நோய்கள் அனைத்துக்கும் விரைவான சிகிச்சை. 078660

OBSERVER JOBS

BREAKING BOUNDARIES

THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE

FOR JOBSEEKERS

www.observerjobs.lk

2023/ 2024 ஆண்டிற்காக அரச வைத்தியசாலைகளுக்கு பச்சை உணவுப் பொருட்கள் வழங்குதல்

சுகாதார அமைச்சு

கொழும்பு-10, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, இல. 26, மெடிஹவுஸ் கட்டிடத்தின் முதலாம் மாடியில் அமைந்துள்ள சுகாதார அமைச்சின், அமைச்சு பெறுகைக்குழு டீ தலைவரால் கீழே 4ஆம் பந்தியின் கீழ் குறிப்பிடப்படும் 40 வைத்தியசாலைகளுக்கு 2023/ 2024ஆம் ஆண்டு சார்பாக நோயாளிகள் மற்றும் கனிஷ்ட ஊழியர் குழாமிற்கு தேவையான பச்சை உணவை தொடர்ந்து வழங்குவதை உறுதி செய்யக் கூடிய வழங்குநர்களிடமிருந்து தேசிய போட்டி கேள்வி கோரலின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன.

02. இதுபற்றி ஆர்வம் காட்டுகின்ற தரப்பினர் ஒரு வைத்தியசாலை அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கைக்கு சுகாதார அமைச்சின் பிரதம கணக்காளரிடம் ஒவ்வொரு வைத்தியசாலைக்கும் மீளளிக்கப்படாத கீழே அட்டவணையில் ஒவ்வொரு வைத்தியசாலையுடனும் சம்பந்தப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள கேள்வி ஆவணக் கட்டணத்தைச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டுடன் எழுத்து மூல வேண்டுதல் மற்றும் தமது தேசிய அடையாள அட்டையின் பிரதியொன்றைச் சமர்ப்பித்த பின்னர் 2022.12.23 முதல் 2023.01.12 வரை சாதாரண அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.00 வரையான காலத்திற்குள் சுகாதார அமைச்சின் பெறுகைப் பிரிவில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

03. அந்தந்த வைத்தியசாலைகளுடன் தொடர்புடைய உணவு மதிப்பீடு பற்றிய விபரங்கள் கேள்வி மாதிரிப் பத்திரத்துடன் விநியோகிக்கப்படும்.

04. ஒரு வைத்தியசாலைக்கு மேற்பட்ட அளவிற்காக கேள்விகளை சமர்ப்பிக்க எதிர்பார்ப்பின் அதற்காக வேறுவேறாக கேள்வி ஆவணங்களை பெறல் வேண்டும்.

தொ. இல.	வைத்தியசாலையின் பெயர்	கேள்வி ஆவணக் கட்டணம் மதிப்பீடு (ரூ)	கேள்விப் பிணைப் பெறுமதி மதிப்பீடு (ரூ)
01	பொலன்னறுவ பொது வைத்தியசாலை	20,000.00	1,132,700.00
02	களுத்துறை பொது வைத்தியசாலை	12,500.00	986,900.00
03	கொழும்பு தெற்குப் போதனா வைத்தியசாலை, களுபோவில	20,000.00	1,307,500.00
04	மஹமோதர போதனா வைத்தியசாலை	3,500.00	278,600.00
05	கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை	35,000.00	2,149,500.00
06	மாத்தறை பொது வைத்தியசாலை	1,000.00	98,000.00
07	ஹம்பாந்தோட்டை பொது வைத்தியசாலை	20,000.00	1,913,300.00
08	பதுளை பொது வைத்தியசாலை	35,000.00	3,057,300.00
09	ஊடுபகுப்பு மற்றும் புனர்வாழ்வு வைத்தியசாலை ராகம	12,500.00	646,500.00
10	தேசிய மனநோய் சுகாதார நிறுவனம் - I	35,000.00	3,595,400.00
11	தேசிய மனநோய் சுகாதார நிறுவனம் முல்லேரிய II	20,000.00	1,392,600.00
12	நுவரெலியா பொது வைத்தியசாலை	20,000.00	1,573,100.00
13	மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை	3,500.00	154,500.00
14	குருநாகல் போதனா வைத்தியசாலை	35,000.00	4,563,900.00
15	ரிஜ்வே ஆர்யா சிறுவர் வைத்தியசாலை கொழும்பு	35,000.00	2,926,900.00
16	காசல் வீதி மகளிர் மருத்துவமனை - கொழும்பு	12,500.00	753,300.00
17	கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை ராகம	20,000.00	1,651,200.00
18	அபேக்ஷா வைத்தியசாலை - மஹரகம	20,000.00	1,991,100.00
19	நெவில் பெர்னான்டோ போதனா வைத்தியசாலை	3,500.00	494,000.00
20	தேசிய கண் வைத்தியசாலை கொழும்பு	20,000.00	1,241,300.00
21	மாவட்ட வைத்தியசாலை - கந்தான	12,500.00	841,000.00
22	டி சொய்சா மகளிர் மருத்துவமனை	3,500.00	288,500.00
23	மாவட்ட பொது வைத்தியசாலை நீர்கொழும்பு	12,500.00	714,400.00
24	சுவாச நோய் பற்றிய தேசிய வைத்தியசாலை, வெலிசர	12,500.00	941,500.00
25	தேசிய தொற்று நோய் நிறுவனம், அங்கொடை	1,000.00	47,600.00
26	விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை - சீதுவ	3,500.00	225,000.00
27	மொனராகல பொது வைத்தியசாலை	12,500.00	975,400.00
28	கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலை முல்லேரியாவ	12,500.00	576,800.00
29	இலங்கை தேசிய வைத்தியசாலை கொழும்பு-10, இல. 01 - மரக்கறி மற்றும் பழங்கள்	12,500.00	795,300.00
30	இலங்கை தேசிய வைத்தியசாலை - கொழும்பு-10, இல. 02 - உலர் உணவுப் பொருட்கள்	35,000.00	2,572,900.00
31	இலங்கை தேசிய வைத்தியசாலை, கொழும்பு-10, இல. 03 - இறைச்சி மற்றும் முட்டை	3,500.00	247,600.00
32	இலங்கை தேசிய வைத்தியசாலை கொழும்பு-10, இல. 04 - பொறியிடப்பட்ட உணவுப் பொருட்கள்	12,500.00	796,900.00
33	இலங்கை தேசிய வைத்தியசாலை கொழும்பு 10 இல. 05 - பேக்கறி உற்பத்தி	1,000.00	48,600.00
34	சிறிமாவோ பண்டாரநாயக்க சிறுவர் வைத்தியசாலை, பேராதனை	3,500.00	191,200.00
35	பேராதனை போதனா வைத்தியசாலை	3,500.00	418,300.00
36	அநுராதபுரம் போதனா வைத்தியசாலை	20,000.00	1,434,100.00
37	தொழுநோய் மருத்துவமனை, ஹெந்தளை	1,000.00	91,500.00
38	பொரளை ஆயுர்வேத போதனா வைத்தியசாலை	3,500.00	111,900.00
39	நாவின்ன பண்டாரநாயக்க ஆயுர்வேத ஆராய்ச்சி மருத்துவமனை	1,000.00	61,600.00
40	கம்பஹா விக்ரமாரச்சி ஆயுர்வேத மருத்துவமனை.	3,500.00	106,600.00

06. விண்ணப்பங்கள், உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "சுகாதார அமைச்சின் கீழ் நடத்தப்படும்..... வைத்தியசாலைகளுக்கு பச்சை உணவுப் பொருட்கள் வழங்குதல் 2023/ 2024" என்று தெளிவாகக் குறிப்பிட்டு 2023.01.13 மு.ப. 10.00 அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு தலைவர், அமைச்சு பெறுகைக்குழு, சுகாதார அமைச்சு, மெடிஹவுஸ் கட்டிடம், முதலாம் மாடி, இல. 26, ஸ்ரீ சங்கராஜ மாவத்த, கொழும்பு-10 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது அம் முகவரியில் அமைந்துள்ள பெறுகைப் பிரிவிற்கு பிரவேசிக்கும் இடத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

07. 2023.01.13 மு.ப. 10.00 இற்கு கேள்விகள் ஏற்றுக்கெள்ளும் நேரம் முடிவடைந்தவுடன் கேள்வி விண்ணப்பங்கள் திறக்கப்படும். கேள்வி விண்ணப்பங்கள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு சமுகமளிக்கலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்வி விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

08. பூர்த்தியற்ற கேள்வி விண்ணப்பங்கள் மற்றும் இணைத்து அனுப்பப்படும் எழுத்துமூல சாட்சிகள் சரியாக உறுதி செய்யப்படாத கேள்வி விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

09. குறித்த கேள்விகளை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை அமைச்சு பெறுகைக் குழுவிற்கு உரியது.

10. கேள்வி ஆவணங்களை காசு செலுத்தாமலேயே சுகாதார அமைச்சின் பெறுகைப் பிரிவில் சாதாரண அலுவலக நேரங்களில் பரீட்சிக்கலாம்.

11. இது பற்றிய மேலதிக தகவல்களை சுகாதார அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர்/ பெறுகை) இடம் பெற்றுக்கொள்ளலாம்.
(தொ.பே. இல. 011-2112714/ 011-2112715/ 011-2112713/ 011-2112717)

தலைவர்,
அமைச்சுப் பெறுகைக் குழு "B"
சுகாதார அமைச்சு,
மெடிஹவுஸ் கட்டிடம் முதலாம் மாடி,
இல. 26, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு-10.

மக்கள் வங்கி

மொனராகல

1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் பிரிவு 29D இன் கீழ் பிரேரணை, 1986 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டது.

29.10.2021 அன்று நடைபெற்ற மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையின் கூட்டத்தில் 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1961 ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் பிரிவு 29D இன் கீழ் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது என்பதை இதன்மூலம் தெரிவிக்கிறோம்.

இலக்கம் 74, பொத்துவில் வீதி, மொனராகலைச் சேர்ந்த டொன் அனுர சமரசேகர, 2018 மே 30, 2018 தேதியிட்ட 1046,1290, 1535 மற்றும் 1537 ஆகிய அடமானப் பத்திரங்கள் மற்றும் 2018 மார்ச் 26, 2019, மார்ச் 2019 ஆகிய அனைத்து மாதங்களிலும் செலுத்த தவறிவிட்டார். மொனராகலை, மஞ்சுள உக்வத்தவின் நோட்டரி மூலம் சான்றளிக்கப்பட்டு, தற்போது மக்கள் வங்கிக்கு செலுத்த வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய வட்டியுடன் தொகை இருபத்தி ஒரு மில்லியன் எண்ணூற்று அறுபத்தாறாயிரத்து நூற்று தொண்ணூற்று ஐந்து தொண்ணூறு சென்ட்கள் (ரூ. 21,866,195.90/-) ஆகும்.

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் மூலம் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபை மேற்கூறிய அடமானப் பத்திரங்கள் மூலம் மேற்படி வங்கிக்கு அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள் மற்றும் இடங்கள் என்பனவற்றை இதன்மூலம் தீர்மானிக்கிறது. 30 மே 2017, 3 மே 2018, 26 மார்ச் 2019 மற்றும் 26 மார்ச் 2019 தேதியிட்ட எண்கள் 1046,1290,1535 மற்றும் 1537 ஆகிய எண்கள் முறையே மஞ்சுளா உக்வட்டேஜ் நோட்டரி பப்ளிக் மூலம் சான்றளிக்கப்பட்டவை, மேலும் அவை அனைத்தும் மொனராகலையின் மஞ்சுளா உக்வட்டேஜ் நோட்டரி பப்ளிக் மூலம் சான்றளிக்கப்பட்டன. பிரேமசிறி வடுகே "உத்பலா", சண்தகிரிவத்த, கம்பஹா சேர்ந்த உரிமம் பெற்ற ஏலதாரர், மேற்படி ரூபா இருபத்தி ஒரு இலட்சத்து எண்ணூற்று அறுபத்தாறாயிரத்து நூற்று தொண்ணூற்று ஐந்து மற்றும் தொண்ணூறு சென்ட்கள் (ரூ.21,866,195.90/-) மீளப்பெறுவதற்காக மேலதிக வட்டியுடன் பதினெட்டு சதவீதம் (18%) வீதம் பதினேழு மில்லியன் எண்ணூற்று எண்பத்து இரண்டாயிரம் (ரூ.17,882,000/-) மற்றும் பதினாறு சதவீதம் (16%) ரூபாய் இரு மில்லியன் ஐந்நூறு ரூபாய் ஆயிரம் (ரூ.2,500,000/-) 2021 ஆகஸ்ட் 20 முதல் விற்பனை நாள் வரை, அந்த மக்கள் வங்கியின் பிரிவின் (29L) இன். கீழ் திரும்பப்பெறக்கூடிய செலவுகள் மற்றும் பணம் பெறப்பட்டதிலிருந்து குறைவான கட்டணம் (ஏதேனும் இருந்தால்) ஆகும்.

மேலே உள்ள அட்டவணை

மொனராகலை காணி பதிவு அலுவலகம் மொனராகலை மாவட்டம் ஊவா மாகாண மொனராகலை பிரதேச சபை மற்றும் செயலகம் மற்றும் களுகஹலந்த பலமகஹவத்தை மற்றும் எகொடவத்தை காணி மொனராகலை கிராம உத்தியோகத்தர் பிரிவு இல.129 B, இல.129 B, மொனராகலை கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கு திட்டம் எண். 5820 இல் குறிப்பிடப்பட்டுள்ள லாட் எண்.1A

வடக்கு : சிமெண்ட் சுவர் கூட

கிழக்கு : கால்வாய்

தெற்கு : கால்வாய் மற்றும் பகுதி எண்.1 B I de

மேற்கு : சாலைக்காக ஒதுக்கப்பட்ட நிலம்

ஒன்பது தசம் நான்கு பேர்ச்சஸ் (A.0 R.0 P.9.4) அல்லது 0.238 ஹெக்டேயர் கட்டிடங்கள், கிணறு மற்றும் மற்ற அனைத்தும் மேற்படி திட்ட எண்.5820 இன் படி நின்று, மொனராகலையின் காணி பதிவேட்டில் தொகுதி/போலியோ A 40/53 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது

சாலை உரிமை

லாட் IA எனக் குறிக்கப்பட்ட நில ஒதுக்கீட்டிற்குச் செல்லும் சாலையின் வழியாக செல்லும் உரிமையுடன்

கையொப்பமிடப்பட்டது
பி.ஏ.பி.ஆர்.எஸ்.பெரேரா
பிராந்திய மேலாளர் (மொனராகலை)

மக்கள் வங்கி PEOPLE'S BANK
www.peoplesbank.lk

விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

இலங்கை போக்குவரத்துச் சபை (SLTB)

14106 எண்ணிக்கையிலான டியூப்களை வழங்கி விநியோகிப்பதற்கான விலைமனு

(SLTB/TS/GEN/79/II/2022

1. தேசிய போட்டி கேள்விகோரல் முறைமையின் கீழ் 2023.01.06 மு.ப. 10.30 வரை தரப்பட்டுள்ள மாதிரிகளுக்கு அமைவாக 14106 எண்ணிக்கையிலான டியூப்களை வழங்கி விநியோகிப்பதற்காக தகைமையான வழங்குநர்களிடமிருந்து, பொறியிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை போக்குவரத்து சபையின் சார்பாக இ.போ.ச பெறுகைக் குழுவின் தலைவர் பெற்றுக் கொள்வார். கொழும்பு - 05, கிருல வீதி, 200, இலங்கை போக்குவரத்துச் சபை, பெறுகைப் பிரிவு, செயலாளர் இடம் காணப்படும் படிவங்களில் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அலுவலக நேரங்களில் வேலை நாட்களில் ஓர் மீளளிக்கப்படாத விண்ணப்பப்படிவக் கட்டணம் ரூ. 20,000/- செலுத்துவதன் பேரில் 2022.12.23 முதல் 2023.01.05 வரை விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும்.

விபரம்	விலைமனுப் பிணை (ரூபா)
கீழ்க்காணும் எண்ணிக்கையிலான டியூப்களை வழங்கி விநியோகித்தல் 498 எண்ணிக்கையில் 8.25x20 டியூப்கள் 13458 எண்ணிக்கையில் 9.00x20 டியூப்கள் 150 எண்ணிக்கையில் 10.00x20 டியூப்கள்	1,000,000/-

2. உற்பத்தியாளர்கள்/ உற்பத்தியாளர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் முகவர்கள் இந்த விலைமனுவின் கீழான டியூப்களின் விலைமனுவுக்கு தகைமை பெறுவர். உற்பத்தியாளர்களின் அங்கீகாரம் இல்லாத உள்ளூர் முகவர்களின் விலைமனுக்கள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

3. (அ) விலைமனு சமர்ப்பிக்கப்படுவதற்கு முன் 1987ஆம் ஆண்டின் ஒப்பந்த இல 3 இன் விதிகளின் கீழ் கொழும்பு - 10, D.R விஜேவர்தன மாவத்த, 'சமாகம் மெதுர' பொது ஒப்பந்தங்கள் பதிவாளரின் கீழ் ஓர் விலைமனுதாரரின் சார்பாக அல்லது முகவராக செயற்படும் எந்த நபர், உதவி முகவர், பிரதிநிதித்துவப்படுத்துபவர் அல்லது பெயர் குறிப்பிடப்படுபவர். சான்றிதழின் மூலப் பிரதியை சமர்ப்பிக்கத் தவறும் விலைமனுதாரரின் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
(ஆ) 1987ஆம் ஆண்டின் பொது ஒப்பந்த சட்டம் இல-03 விதிகளின் கீழ் பெறுகை வழங்கப்படுவதற்கு முன் மற்றும் விலைமனு சமர்ப்பித்த பின்னர் உடனடியாக தாமாகவே விலைமனுதாரர்களும் பதிவு செய்யப்படுவர். சம்பந்தப்பட்ட பெறுகைக் குழுவிற்கு பொது ஒப்பந்த சட்டத்தின் விதிகளின் கீழ் வழங்கப்படும் பதிவுச் சான்றிதழை சமர்ப்பிக்காத எந்த விலைமனுதாரருக்கும் பெறுகை வழங்கப்பட மாட்டாது.

4. விலைமனுக்கள் 2023.04.04 திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். எனினும் ஒப்பந்த உடன்படிக்கை கையொப்பமிட்ட தினத்திலிருந்து ஐந்து (05) மாத காலத்திற்கு விலைமனுக்கள் உறுதிப்படுத்தப்படும். 30 நாள் கடன் வசதி எதிர்பாக்கப்படுகிறது.

5. இ.போ.ச வினால் முதல் எழுத்துமூல வேண்டுதலின் பேரில், மாற்றமுடியாத மற்றும் நிபந்தனையற்ற கோரப்படும் போது வழங்கக்கூடிய மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து வழங்கப்படும் மேலே குறிப்பிடும் பெறுமதிக்கு 2023.05.04 வரை செல்லுபடியாகும் ஒரு விலைமனுப்பிணையை விலைமனுவுடன் இணைத்தல் வேண்டும். மேலே குறிப்பிடுமாறு ஓர் செல்லுபடியாகும் விலைமனுப் பிணை இணைக்கப்படாத எந்த விலைமனுவும் நிராகரிக்கப்படும்.

6. விலைமனு ஆவணத்தின் எல்லாப் பக்கங்களும் விலைமனுதாரரால் கையொப்பமிடப்படுவதுடன் அவரது முத்திரை இடப்படல் வேண்டும்.

7. 2023.01.06 மு.ப 10.30 அல்லது அதற்கு முன் கொழும்பு-05 கிருல வீதி 200, இலங்கை போக்குவரத்து சபை பெறுகை பிரிவில் இந்த நோக்கத்திற்காக குறிப்பிடப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் விலைமனுக்கள் வைப்பிலிடப்படல் வேண்டும். அல்லது ''நகல்களுடன் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 14106 எண்ணிக்கையிலான டியூப்களை வழங்கி, விநியோகிப்பதற்கான விலைமனு" என்று குறிப்பிடப்பட்டு, பொறியிடப்பட்ட உறைகளில் இடப்படல் வேண்டும்.

8. விலைமனுக்கள் கொழும்பு-05, கிருல வீதி, 200, இலங்கைப் போக்குவரத்து சபை, பெறுகைப் பிரிவில் மூடப்பட்ட பின்பு உடனடியாகத் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனு திறக்கப்படும் போது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தலைவர்,
இபோச பெறுகைக்குழு,
இலங்கை போக்குவரத்துச் சபை,
இல-200, கிருல வீதி, கொழும்பு-05

விசாரணைகள், செயலாளர், பெறுகைக் குழு
தொ.பே - 0117706110, 0771056110, தொ.பே/ பெக்ஸ்: 0112588457
அத்துடன் தயவு செய்து பின்வரும் விடயத்தையும் கவனிக்கவும்.
சகல இபோச பெறுகை செயற்பாடுகள் பற்றிய தகவல்களுக்கும் தயவுசெய்து https://sltb.lk போலவே https://promise.lk இற்கு பிரவேசிக்கவும்.

Trusted Marketplace of Classified Advertisers

Sunday Observer ADZ Classified

For 15 Words Rs. 500/-
* Cost of each additional word Rs. 20/-

Ramani - 077 7 278 948 / Gayani - 011 2 429 342/ 343 / Piyumi - 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk

Hand over your Classified Advertisements to Our nearest Branch Office

Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

ஐ.பி.எல் ஏலம் இன்று கொச்சினில்: இலங்கையின் 10 வீரர்கள் போட்டி

அடுத்த ஆண்டின் இந்திய பிரீமியர் லீக் தொடருக்கான வீரர்கள் ஏலம் இன்று (23) கொச்சினில் நடைபெறவுள்ளது. இதில் இலங்கையின் 10 வீரர்கள் ஏலம் விடப்படவுள்ளனர்.

இதில் 87 இடங்களுக்காக 404 வீரர்கள் போட்டியிடவுள்ளனர். ஏலத்தில் வீரர்களை வாங்கும் பத்து அணிகளிலும் 30 வெளி நாட்டு வீரர்களுக்கே இடம் உள்ளது. எனினும் 273 இந்திய வீரர்கள், 132 வெளிநாட்டு வீரர்கள் மற்றும் இணை அங்கத்துவ நாடுகளின் நான்கு வீரர்கள் இன்றைய ஏலத்தில் போட்டியிடுகின்றனர்.

குறிப்பாக ஆறு வீரர்கள் மீது அதிக கேள்வி உள்ளது. இங்கிலாந்து சகலதுறை வீரர்களான சாம் கரன், பென் ஸ்டொக்ஸ், மேற்கிந்திய தீவுகளின் விக்கெட் காப்பாளர் நிகொலஸ் பூரன், இங்கிலாந்து துடுப்பாட்ட வீரர் ஹரி ப்ரூக், இந்திய துடுப்பாட்ட வீரர் மாயன் அகர்வால் மற்றும் அவுஸ்திரேலிய சகலதுறை வீரர் கெமரன் கிரீன் ஆகியோர் அதிக விலை போவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை வீரர்களில் வேகப்பந்து வீச்சாளர் துஷ்மன்த சமீர மற்றும் சகலதுறை வீரர் சாமிக்க கருணாரத்ன ஆகியோர் கடந்த ஐ.பி.எல் தொடரில் முறையே லக்னோ சுப்பர் ஜயன்ட்ஸ் மற்றும் கொல்கத்தா நைட் ரைடஸ் அணியில் இடம்பெற்ற நிலையிலேயே அந்த அணியில் இருந்து விடுவிக்கப்பட்டனர்.

தவிர, குசல் மெண்டிஸ், தசுன் ஷானக்க, பத்தும் நிசங்க, சரித் அசலங்க, லஹிரு குமார, டில்ஷான் மதுசங்க, தனஞ்சய டி சில்வா, துனித் வெள்ளாலகே ஆகியோரும் இன்றைய ஏலத்தில் இடம்பெறுகின்றனர்.

இலங்கை வீரர்கள் அனைவரும் இந்திய நாணயப்படி 50 இலட்சம் ரூபா அடிப்படை விலைக்கே ஏலம் விடப்படவுள்ளனர்.

2023 ஐ.பி.எல் தொடர் வரும் மார்ச் தொடக்கம் மே மாதம் வரை நடைபெறவுள்ளது. இந்தத் தொடரில் இலங்கையின் நான்கு வீரர்கள் தத்தமது அணிகளில் தக்கவைக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி வனிந்து ஹசரங்கவை ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர், மஹீஷ் தீக்ஷனவை சென்னை சுப்பர் கிங்ஸ், பானுக்க ராஜபக்ஷவை பஞ்சாப் கிங்ஸ் மற்றும் மதீஷ பத்திரணவை சென்னை சுப்பர் கிங்ஸ் அணிகள் தக்கவைத்துக்கொண்டன.

இலங்கை ரக்பிக்கு ஆசியா 10,000 டொலர் அபராதம்

ஐக்கிய அரபு இராச்சியத்தின் அல் ஐன் நகரில் நடைபெற்ற மகளிர் ரக்பி செவன்ஸ் தொடரின் மூன்றாம் சுற்றில் அதற்கான ஆடையை இலங்கை அணி அணியாததால் ஆசிய ரக்பி நிறுவனத்தால் இலங்கை ரக்பி நிறுவனத்திற்கு 10,000 அமெரிக்க டொலர்கள் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

தென் கொரியா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்தில் இடம்பெற்ற போட்டிகளுக்காக ஆடவர் மற்றும் மகளிர் அணிகளுக்கான ஆடை பற்றி ஆசிய ரக்பி மற்றும் தேசிய ஒலிம்பிக் குழு இடையே உடன்படிக்கை எட்டப்பட்டது.

இதில் ஆசிய ரக்பி நிறுவனத்தால் இலங்கை ரக்பி மீது தடை விதிக்கப்பட்டால் தாய்லாந்து சுற்றில் இலங்கையால் பங்கேற்க முடியாமல் போகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இதில் இலங்கை ஆடவர் அணி தென் கொரியா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய இரண்டு சுற்றுகளிலும் குறித்த ஆடையை பயன்படுத்தியதோடு மகளிர் அணி தென் கொரியாவில் அந்த ஆடையை பயன்படுத்திய நிலையில் மகளிர் அணி ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடந்த போட்டியில் இருந்து கடைசி நேரத்தில் விலகிக் கொண்டது.

இந்நிலையில் ஆசிய ரக்பி மற்றும் தேசிய ஒலிப்பிக் குழுவுக்கு இடையில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின்படி இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இதன்படி இலங்கை மகளிர் அணி அடுத்த ஆசிய போட்டியில் பங்கேற்பதற்கு முன்னர் இந்தத் தண்டப் பணத்தை முழுமையாக செலுத்த வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

பீலேவின் புற்றுநோய் தீவிரம்

பிரேசில் கால்பந்து ஜாம்பவான் பீலேவின் புற்றுநோய் தீவிரம் அடைந்திருப்பதாக அவருக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவமனை குறிப்பிட்டுள்ளது.

மூன்று முறை உலகக் கிண்ணத்தை வென்ற 82 வயதான பீலே மூன்று வாரங்களுக்கு மேலாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். அவர் கிறிஸ்மஸ் தினத்தையும் மருத்துவமனையிலேயே கழிப்பார் என்று அவரது மகள் தெரிவித்துள்ளார்.

'தற்போது கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்களைத் தள்ளிவைத்துள்ளோம். தந்தையுடன் மருத்துவமனையில் நேரம் செலவழிப்பது நல்லது என முடிவெடுத்துள்ளோம்' என்று அவர் குறிப்பிட்டார்.

பீலேவின் தற்போதைய புற்றுநோய் வளர்ந்து வருவதாகவும் சிறுநீரக மற்றும் இதய செயலிழப்புகளை தவிர்க்க தீவிர சிகிச்சை தேவைப்படுகிறது என்றும் இஸ்ராலிடா அல்பர்ட் ஐன்ஸ்டைன் மருத்துவமனை தெரிவித்துள்ளது.

கடந்த 2021 செப்டெம்பரில் பெருங்குடலில் இருந்து கட்டி ஒன்று அகற்றப்பட்டது தொடக்கம் பீலே தொடர்ச்சியாக சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ரமீஸ் ராஜா அதிரடி நீக்கம்

பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தலைவர் ரமீஸ் ராஜாவை அந்நாட்டு அரசு பதவி நீக்கி இருப்பதோடு நிஜாம் செதி தலைமையில் 14 பேர் கொண்ட குழு ஒன்றை நியமித்துள்ளது.

அடுத்த நான்கு மாதங்களுக்கு இந்தக் குழுவால் கிரிக்கெட் சபை நிர்வகிக்கப்படவுள்ளது.

பாகிஸ்தான் அணி இங்கிலாந்துக்கு எதிராக தனது சொந்த மண்ணில் நடந்த டெஸ்ட் தொடரில் 0–3 என முழுமையாகத் தோற்றதை அடுத்தே இந்த அதிரடி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

பாக். கிரிக்கெட் சபைத் தலைவராக 15 மாதங்கள் பணியாற்றிய ரமீஸ் ராஜாவை அந்நாட்டு முன்னாள் பிரதமர் இம்ரான் கான் 2021 செப்டெம்பரில் அந்தப் பதவிக்கு நியமித்தார்.

இந்நிலையில் தற்போது நியமிக்கப்பட்டிருக்கும் செதி 2013 மற்றும் 2018க்கு இடையே கிரிக்கெட் சபையின் தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியாக செயற்பட்ட நிலையில் இம்ரான் கான் பிரதமரானதை அடுத்து பதவி விலகினார்.

சீனாவில் நிரம்பும் மருத்துவமனைகள்

உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

சீனாவில் புதிய கொரோனா அலை தாக்கியிருக்கும் நிலையில் அங்குள்ள மருத்துவமனைகள் நிரம்பி வருவதாக உலக சுகாதார அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

கொவிட்–19 தொற்று சம்பவங்கள் ஒப்பீட்டளவில் குறைவாக இருப்பதாக சீனா கூறியபோதும் அவசர சிகிச்சை பிரிவுகள் அதிக பணிச்சுமையை எதிர்கொண்டிருப்பதாக உலகக் சுகாதார அமைப்பின் அவசரகாலத் திட்டத்தின் நிர்வாகப் பணிப்பாளர் டொக்டர் மைக்கல் ரியான் தெரிவித்துள்ளார்.

சீனாவின் கணக்கெடுப்பின்படி கடந்த புதன்கிழமை நோய்த் தொற்றினால் எவரும் உயிரிழக்கவில்லை என்று குறிப்பிட்டபோதும் நோயின் உண்மையான பாதிப்புக் குறித்து சந்தேகம் எழுந்துள்ளது.

கொவிட் தொற்று தீவிரம் அடைந்த நிலையில் தலைநகர் பீஜிங் மற்றும் ஏனைய நகரங்களில் மருத்துவமனைகள் அண்மைய நாட்களில் நிரம்பி வருகின்றன.

2020 தொடக்கம் சீனா கொரோனா தொற்றுக்கு எதிராக கண்டிப்பான கட்டுப்பாடுகளை விதித்து வந்தது. எனினும் இந்தக் கட்டுப்பாடுகளை எதிர்த்து மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்த ஆரம்பித்ததை அடுத்து இரண்டு வாரங்களுக்கு முன்னர் பெரும்பாலான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன.

அதனைத் தொடர்ந்து தொற்றுச் சம்பவங்கள் அதிகரித்ததோடு, அதிகம் பாதிக்கக்கூடிய வயதானவர்களிடையே உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக அஞ்சப்படுகிறது.

சீனாவில் இறுதிச்சடங்குக் கூடங்கள் நெருக்கடியை எதிர்நோக்குவதாகக் கூறப்படுகிறது. இருப்பினும், சீனா அதிகாரபூர்வமாக வெளியிடும் கொவிட் மரண எண்ணிக்கை பெரிய அளவில் அதிகரிக்கவில்லை.

மாறாக, கடந்த செவ்வாயன்று சீனா அதன் உயிரிழப்பு எண்ணிக்கையை ஒன்று குறைத்து 5,241ஆக மாற்றியது.

இந்நிலையில் புதிய நோய் பரவல் குறித்த விபரங்களை வெளியிடும்படி டொக்டர் ரியான் சீனாவை வலியுறுத்தியுள்ளார். 'அவசர சிகிச்சைப் பிரிவுகளில் நோய் சம்பவங்கள் குறைவாக இருப்பதாக சீனா கூறியபோதும், தெரியவரும் தகவல்கள் படி அவை நிரம்பி வருகின்றன' என்று குறிப்பிட்டுள்ளார்.

சீனாவின் நிலைமை கவலை அளிப்பதாக உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோ அதனொம் கெப்ரியேசஸ் முன்னதாகக் குறிப்பிட்டிருந்தார்.

சர்வதேச செய்திகள்

இஸ்ரேலில் தீவிர வலதுசாரி அரசை அமைக்க ஒப்பந்தம்

இஸ்ரேல் வரலாற்றில் இதுவரை காணாத தீவிர வலதுசாரி அரசு ஒன்றை அமைப்பதற்கு உடன்படிக்கை எட்டப்பட்டதை அடுத்து பென்ஜமின் நெதன்யாகு மீண்டும் அதிகாரத்திற்கு திரும்யுள்ளார்.

கடந்த நவம்பரில் நடந்த தேர்தலில் வெற்றியீட்டிய நெதன்யாகு ஆறாவது தவணைக்காக பிரதமராக பதவி ஏற்கவுள்ளார். அவரது கூட்டணியில் அரபு எதிர்ப்பு இனவாத செயலில் ஈடுபட்டதற்காக குற்றங்காணப்பட்ட தீவிர வலதுசாரி கட்சிகளும் உள்ளடங்கியுள்ளன. இந்த புதிய அரசு ஆக்கிரமிப்பு மேற்குக் கரையில் இஸ்ரேலின் பிடியை அதிகரிக்கும் என்று பலஸ்தீனர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

'(புதிய அரசை அமைக்க) என்னால் முடிந்தது' என்று நெதன்யாகு ட்விட்டரில் குறிப்பிட்டுள்ளார். புதிய அரசை அமைப்பதற்கு ஜனாதிபதி இசாக் ஹர்சொக் விதித்த காலக்கெடு புதன்கிழமை நள்ளிரவில் முடிவதற்கு சில நிமிடங்கள் இருக்கும்போதே புதிய அரசுக்கான உடன்படிக்கை எட்டப்பட்டுள்ளது.

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன பிரச்சினைக்கு சர்வதேச தீர்வாக உள்ள இரு நாட்டுக் கொள்கையை நெதன்யாகுவின் கூட்டணி கட்சிகள் நிராகரிக்கின்றன. இதில் இஸ்ரேல் பாராளுமன்றத்தில் மூன்றாவது அதிக இடங்களைப் பிடித்த மாதவாத சியோனிச கட்சி மேற்குக் கரையை இஸ்ரேல் தனது ஆட்புலத்திற்குள் இணைத்து அங்கு பரந்த அளவு அதிகாரங்களை பெற வேண்டும் என்று வலியுறுத்துகிறது. 1967 போரில் மேற்குக் கரை, கிழக்கு ஜெரூசலத்தை இஸ்ரேல் ஆக்கிரமித்தது. இங்கு தற்போது 600,000க்கும் அதிகமான யூதக் குடியேறிகள் வாழ்கின்றனர். இந்தக் குடியேற்றங்கள் சர்வதேச சட்டத்திற்கு எதிரானதாகும்.

இந்நிலையில் ஆட்சி அமைக்கவுள்ள புதிய அரசின் சீர்திருத்தத் திட்டங்கள் குறித்து சட்டமா அதிபர் மற்றும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இதில் உச்ச நீதிமன்ற தீர்ப்புகளை மீறிச் செயற்பட எம்.பிக்களுக்கு அதிகாரம் அளிப்பது இஸ்ரேலிய ஜனநாயகத்தை அச்சுறுத்தும் செயல் என கூறுகின்றனர்.

உக்ரைன் சரணடையாது

உக்ரைன் ஒருபோதும் சரணடையாது என்று அமெரிக்கா விஜயம் மேற்கொண்ட அந்நாட்டு ஜனாதிபதி வொலோடிமிர் செலன்ஸ்கி அமெரிக்க பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது உறுதி அளித்துள்ளார்.

உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்புக்குப் பின்னர் முதல் வெளிநாட்டு விஜயமாகவே செலன்ஸ்கி அமெரிக்கா சென்றுள்ளார். இதில் உக்ரைனுக்கான அமெரிக்காவின் இராணுவ உதவி நன்கொடையில்லை என்றும் அது எதிர்கால பாதுகாப்புக்கான முதலீடு என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க நாடாளுமன்றம் அவரது பேச்சை பலத்த கரவொலியோடு வரவேற்றது. அமெரிக்கா தொடர்ந்து உதவி நல்கும் என்று ஜனாதிபதி ஜோ பைடன் உறுதி கூறினார். உக்ரைனில் நீடிக்கும் பத்து மாதப் போரில் இராணுவ வீரர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பல்லாயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். அகதிகளின் எண்ணிக்கை எட்டு மில்லியனை நெருங்குகிறது. அவர்களில் 90 வீதத்தினர் பெண்களும் சிறுவர்களும் என்று ஐக்கிய நாடுகள் சபை கூறுகிறது.

செவ்வாயில் இன்சைட் விண்கலத்திற்கு ஓய்வு

செவ்வாய் கிரகத்தில் கடந்த நான்கு ஆண்டுகளாக ஆய்வு மேற்கொண்டு வந்த அமெரிக்க விண்வெளி ஆய்வு மையத்தின் 'இன்வைட்' விண்கலத்திற்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.

கட்டுப்பாட்டகம் அந்த விண்கலத்துடன் இரு முறை தொடர்புகளை மேற்கொள்ள முயன்போதும் முடியாமல் போனதாகவும், அதன் சூரியசக்தி பெற்றரி செயலிழந்திருப்பதாகவும் நாசா குறிப்பிட்டுள்ளது.

'இன்சைட் ஓய்வு பெற்றபோதும் செவ்வாயின் ஆழத்தில் மேற்கொண்ட கண்டுபிடிப்புகள் மற்றும் அதன் பாரம்பரியம் தொடர்ந்து நீடிக்கும்' என்று நாசா குறிப்பிட்டது.

செவ்வாயில் ஆய்வு மேற்கொள்வதற்காக 2018 ஆம் ஆண்டு அனுப்பப்பட்ட இன்சைட் விண்கலம், அந்தக் கிரகத்தில் நாசாவின் நான்கு ஆய்வு இயந்திரங்களில் ஒன்றாக செயற்பட்டு வந்தது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 டிசம்பர் மாதம் 23ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

அறிவித்தல்

கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்

2007, 07ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் கம்பனிகளை கூட்டிணைப்பதற்கான அச்சட்டத்தின் 05(01)(இ) அத்தியாயத்தின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்.

இந்த பத்திரிகை அறிவித்தலின் மூலம் பிரசுரிக்கப்படுவதானது, 2022 ஒக்டோபர் மாதம் 01ஆம் திகதி முதல் ஒக்டோபர் 31ம் திகதி வரை கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் ஆவணங்கள் என்பதை தயவு செய்து கவனத்திற் கொள்ளவும்.

இல	பதிவிலக்கம்	கம்பனியின் பெயர்	விலாசம்	திகதி
1	GA00264138	ஜப்னாசிவில் சொசைடிசென்டர்	இல. 238, கே.கே.எஸ். வீதி, தாவடி, யாழ்ப்பாணம்	01/10/2022
2	PV00264133	கன்ஸ் ஜெம் (பிரைவட்) லிமிட்டட்	இல. 69/1C, டபிள்யு.ஏ. சில்வா மாவத்தை, வெள்ளவத்தை, கொழும்பு 06	01/10/2022
3	PV00264134	நானயக்கார ரெஸ்டுரன்ட் அன்ட் கபே (பிரைவட்) லிமிட்டட்	இல. 15, ரத்தல்கொட, கல்எலிய	01/10/2022
4	PV00264135	என்எஸ்டி டிரெடிஷனல் புரடக்ஷன்ஸ் (பிரைவட்) லிமிட்டட்	இல. 112, செல்லர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்	01/10/2022
5	PV00264136	கொரியன் லங்காகல்சுரல் சோசியல் அன்ட் சரிட்டிசர்விஸ் (பிரைவட்) லிமிட்டட்	இல. 411/15, அட்டிகல மாவத்தை, கோட்டே வீதி, இராஜகிரிய	01/10/2022
6	PV00264137	ரோயல் டிரீட்மென்ட் ஸ்பா (பிரைவட்) லிமிட்டட்	இல. 180, கடஹபொல, பஹமுனை	01/10/2022
7	PV00264139	ஈயூ இடிபிகேஷன் கன்சல்டன்ட்ஸ் (பிரைவட்) லிமிட்டட்	இல. 23/2/2, சொய்சா தொடர்மாடிக் குடியிருப்பு, மொரட்டுவை, இலங்கை	01/10/2022
8	PV00264140	ஆரோக்யாவெல்நஸ் புட் அன்ட் சலூன் ஸ்பா (பிரைவட்) லிமிட்டட்	இல. 02, சதெவ் பூங்கா, யாழ்ப்பாணசந்தி, அநுராதபுரம்	01/10/2022
9	PV00264141	யூஎல்எம் இகியூப்மன்ட்ஸ் (பிரைவட்) லிமிட்டட்	இல. 273/B, மாபேரிய வீதி, பரகஹவெல, உக்குவளை	01/10/2022
10	GL00264179	ஹெல்ப் எவர் எல்கே (குவரன்டீ) லிமிட்டட்	இல. 23, நல்லையா வீதி, மட்டக்களப்பு	03/10/2022
11	GL00264212	குட் சீட்ஸ் (குவரன்டீ) லிமிட்டட்	இல.62/3, பீரிஸ் அவனியூ, களுபோவில	03/10/2022
12	PV00264142	இம்பேரியல் க்ளோபல் எடியுகேஷன் கன்சல்டன்ட்ஸ் (பிரைவட்) லிமிட்டட்	இல. 320 1/1, காலி வீதி, கொழும்பு 03	03/10/2022
13	PV00264143	ஹோலா 350 (பிரைவட்) லிமிட்டட்	இல. 350, நீர்கொழும்பு வீதி, வெலிசர, றாகம	03/10/2022
14	PV00264144	பீடா இந்தியன் பாஸ்ட் புட் (பிரைவட்) லிமிட்டட்	இல. 49, ராஜா ஒழுங்கை, நல்லூர், கல்வியங்காடு யாழ்ப்பாணம்	03/10/2022
15	PV00264145	சில்க் வே இன்டி இன்டர்னஷனல் (பிரைவட்) லிமிட்டட்	இல. 218, பெத்தேகம, பமுனகொடுவ	03/10/2022
16	PV00264146	ரனீஷா என்டர்பிரைசஸ் (பிரைவட்) லிமிட்டட்	இல. 110, உள்ளாலபொல, திவுலப்பிட்டிய	03/10/2022
17	PV00264147	ஷான் ஐலன்ட் சிகியூரிட்டி (பிரைவட்) லிமிட்டட்	இல. 105, ரணவன வீதி, கட்டுகஸ்தோட்டை	03/10/2022
18	PV00264148	ஒன் டப் சொலூஷன்ஸ் (பிரைவட்) லிமிட்டட்	இல. 426/3, பேஸ்லைன் வீதி, எவரிவத்தை, கட்டுநாயக்க	03/10/2022
19	PV00264149	ஹெவன் கிறிஸ்டியானா இன்டர்னஷனல் (பிரைவட்) லிமிட்டட்	இல. 2/25, மொரொன்துட்டுவ வீதி, வாத்துவ	03/10/2022
20	PV00264150	சருகெத ரெஸ்டுரன்ட் (பிரைவட்) லிமிட்டட்	இல. 23, மைல்கிராசிங், பண்டிவெவ, ஜயந்திபுர, பொலன்னறுவை	03/10/2022
21	PV00264151	புளூ வோட்டர் சீபுட்ஸ் (பிரைவட்) லிமிட்டட்	இல. 40 1/1, சித்ரா ஒழுங்கை, கொழும்பு 05	03/10/2022
22	PV00264152	அக்கோன் பவர் (பிரைவட்) லிமிட்டட்	இல. 36/7,ஸ்ரீ சோமானந்த மாவத்தை, ஹொரண, இலங்கை	03/10/2022
23	PV00264153	ஜேஎம் அவியேஷன் சப்ளையர்ஸ் (பிரைவட்) லிமிட்டட்	இல. 332/53, சிசிலவிலேஸ், மெல்லிவ	03/10/2022
24	PV00264154	கிரீன் வேர்ல்ட் பிளான்டேஷன் அன்ட் எக்ஸ்போர்ட் (பிரைவட்) லிமிட்டட்	இல. 2/X, ஜயசிங்கவத்தை, கிந்தெல்பிட்டிய, வெல்மில்ல சந்தி	03/10/2022
25	PV00264155	சிலோன் டொட் டிரவல் (பிரைவட்) லிமிட்டட்	இல. 40/11B, பார்க் வீதி, ஹெவ்லொக் டவுன், கொழும்பு 05	03/10/2022
26	PV00264156	எயார் கன்ட்ரோல் ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிட்டட்	இல. 88/8/C, ரண்சிறி உயன வீதி, கொரதொட, கடுவெல	03/10/2022
27	PV00264157	பெரேரா இன்ஜினீரிங் வர்க்ஸ் (பிரைவட்) லிமிட்டட்	இல. 46/2/1, கலஹிட்டியாவ, கனேமுல்ல	03/10/2022
28	PV00264158	டீஎன் மீடியா (பிரைவட்) லிமிட்டட்	இல. 119, சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய், யாழ்ப்பாணம்	03/10/2022
29	PV00264159	திம்பிரி இம்போர்ட் அன்ட் எக்ஸ்போர்ட் (பிரைவட்) லிமிட்டட்	இல. 853, வைத்தியர் டனிஸ்டர் டீ சில்வா மாவத்தை, கொழும்பு 14	03/10/2022
30	PV00264160	பிஎம்ஜி ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிட்டட்	வெலிகமுக, கொடவெல்ல, ரம்புக்கனை	03/10/2022
31	PV00264161	ரிட்ஸ் கொகொ (பிரைவட்) லிமிட்டட்	10ஆவது மைல் கல், மகுல்வெவ, குருநாகல்	03/10/2022
32	PV00264162	பேசெக்ஸோ (பிரைவட்) லிமிட்டட்	இல. 110, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்	03/10/2022
33	PV00264163	ஜயனி ஆட்டோ விஷன் (பிரைவட்) லிமிட்டட்	இல. 273/2/1, வலிகம்பிட்டிய, பொக்குனுவிட, ஹொரண	03/10/2022
34	PV00264164	ஹேஷானாஆட்டோ (பிரைவட்) லிமிட்டட்	இல. 18/2, குணானந்த வீதி, பாணந்துறை	03/10/2022
35	PV00264165	லைப் லைன் க்ளோபல் ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிட்டட்	இல. 225/4A, தெஹிவளை வீதி, பொரலஸ்கமுவ	03/10/2022
36	PV00264166	ஓபன் கோட் லப்ஸ் (பிரைவட்) லிமிட்டட்	இல. 261/B, ஜயசிறி உயன, பல்லேகலை	03/10/2022
37	PV00264167	ஏ கேகார்மன்ட் (பிரைவட்) லிமிட்டட்	இல. 233/1,தொடங்கொல்ல, அக்குறணை	03/10/2022
38	PV00264168	ஜே ஜி பிஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிட்டட்	இல. 124, மெனிக்கும்புற பொருளாதார நிலையம், கட்டுகஸ்தோட்டை	03/10/2022
39	PV00264169	களுஅந்துர பிளான்டேஷன்ஸ் (பிரைவட்) லிமிட்டட்	இல. 1/1 H, சீதேவி மாவத்தை, யக்கல	03/10/2022
40	PV00264170	ஏஎம்சிஎடியுகேஷன்	இல. 05, ஈஞ்சடி, சுதுமலை வடக்கு, மானிப்பாய், யாழ்ப்பாணம்	03/10/2022
41	PV00264171	டிஜிடல் வையர் க்ளோபல் (பிரைவட்) லிமிட்டட்	இல. 526/2/T5 பிரைம் குடியிருப்பு, இராஜகிரிய, தர்மபால மாவத்தை, கலபலுவாவ, அங்கொன	03/10/2022
42	PV00264172	டிரில்லியன் ஜெம் அன்ட் ஜுவெல் (பிரைவட்) லிமிட்டட்	இல. 16-2/1, எதிரிவீர அவனியூ, தெஹிவளை	03/10/2022
43	PV00264173	சிலோன் எக்சோடிக் ஹேர்ப்ஸ் (பிரைவட்) லிமிட்டட்	கண்டி வீதி, இலுகேவெல, பரகஹதெனிய	03/10/2022
44	PV00264174	வாந்துவை இம்போர்ட் அன்ட் எக்ஸ்போர்ட் டிரேடிங் (பிரைவட்) லிமிட்டட்	இல. 12/3, விவேகாராம வீதி, வாத்துவ	03/10/2022
45	PV00264175	சுச்சிஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிட்டட்	இல. 338/4B, யடிவவல, கட்டுகஸ்தொட்டை, கண்டி	03/10/2022
46	PV00264176	என்எஸ் ஹோல்டிங்ஸ் கிரடிட் (பிரைவட்) லிமிட்டட்	இல. 274/33, 5ம் ஒழுங்கை, துருலிய உயன, லேனகலவத்தை, தெடிகமுவ	03/10/2022
47	PV00264177	ஆதனாஸ் (பிரைவட்) லிமிட்டட்	இல. 40/15, கொக்குவில் மேற்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்	03/10/2022
48	PV00264178	லிஓர்கானிக் (பிரைவட்) லிமிட்டட்	இல. 77/08, குமுது மாவத்தை, நம்பமுனுவ, பிலியந்தலை	03/10/2022
49	PV00264180	லிலிடிரேட்ஸ் (பிரைவட்) லிமிட்டட்	இல. 4/8B, ஜெஸ்வெல் பிளேஸ் மிரிஹான, நுகேகொட	03/10/2022
50	PV00264181	கேஎல் என் டி ப்ளோரிங் (பிரைவட்) லிமிட்டட்	இல. 234/6/2, மாகந்தன, மடபத, பிலியந்தலை	03/10/2022
51	PV00264182	யூகேபுரடக்ட் (பிரைவட்) லிமிட்டட்	இல. 463/3, கோஹாகொட, கடுகஸ்தோட்டை	03/10/2022
52	PV00264183	க்ரோமாஸ்டர் அக்ரோ (பிரைவட்) லிமிட்டட்	இல. 273, வில்லியம் கொபல்லாவ வீதி, கண்டி	03/10/2022
53	PV00264184	லொன்சீடெக் (பிரைவட்) லிமிட்டட்	இல. 259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்	03/10/2022
54	PV00264185	மரியன் தாசன் (பிரைவட்) லிமிட்டட்	இல. 20/ 4 5, ப்ராஸ் பவுன்டர் ஒழுங்கை, கொழும்பு 13	03/10/2022
55	PV00264186	வொக்ஸ்ட்ரா (பிரைவட்) லிமிட்டட்	இல. 56, ஸ்டார்ப்போர்ட் அவனியூ, கொழும்பு 06	03/10/2022
56	PV00264187	கோபாக்சஸ் (பிரைவட்) லிமிட்டட்	இல. 36, பாதிய மாவத்தை, தெஹிவளை	03/10/2022
57	PV00264188	க்ளோப் டெக் லங்கா (பிரைவட்) லிமிட்டட்	இல. 406/C2, கனேமுல்லை வீதி, கந்தானை	03/10/2022
58	PV00264189	ஹேரிடாஸ் வில்லாஎல்ல (பிரைவட்) லிமிட்டட்	இல. 25, கிரான்ட் விவ், பசர வீதி, எல்ல	03/10/2022
59	PV00264190	ஜனிதுமோட்டர்ஸ் (பிரைவட்) லிமிட்டட்	இல. 122/8, வலிமொவத்தை, வலிகல, பொக்குனுவிட	03/10/2022
60	PV00264191	ஏலியன்ஸ் மோட்டர்ஸ் (பிரைவட்) லிமிட்டட்	இல. 51, வத்தேகெதர வீதி, மஹரகம	03/10/2022
61	PV00264192	ஸ்மார்ட் யுனிவர்சல் (பிரைவட்) லிமிட்டட்	இல. 552/2, கொடெல்ல வீதி, முல்லேரியா	03/10/2022
62	PV00264193	ஜி.எஸ். என்டர்பிரைசஸ் அன்ட் ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிட்டட்	இல. 142, சிறிமங்கல மாவத்தை, நாராஹென்பிட்டிய, கொழும்பு 05	03/10/2022
63	PV00264194	ஆசிர்வாத் க்ளோபல் (பிரைவட்) லிமிட்டட்	இல. 18/1, ஹிக்கஹாவத்த மாவத்தை, திவுலப்பிட்டிய, பொரலஸ்கமுவ	03/10/2022
64	PV00264195	கிரவுண்ட் பிரான்ச் (பிரைவட்) லிமிட்டட்	இல. 71/2, நியந்தகல, பன்னிப்பிட்டிய	03/10/2022
65	PV00264196	ஜிமெட் - ஹெல்த் சொலூஷன்ஸ் (பிரைவட்) லிமிட்டட்	இல. 01, சரசவி உத்யானய, நாவல வீதி, நுகேகொட	03/10/2022
66	PV00264197	பேர்க் டிரவல்ஸ் (பிரைவட்) லிமிட்டட்	இல. 30/5 சூரியகஸ் சந்தி, மொரட்டுவை	03/10/2022
